ஜெர்மனியிலும் வன்னியன் தொலைபேசி அட்டைகள்




'சொல்லும் நிமிடங்களை சொன்னபடியே தருவது'
தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 | 02 - 08 Septembre 2004 | 29

சம்யுக்தா
Credits Immobiliers




அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# மக்களின் கோரிக்கையே தமிழீழம், இதுவே இறுதி!

## ஈழமுரசுக்கு பாலகுமார் சிறப்புச் செவ்வி




(பரிஸ் - ஒஸ்லோ)

நோர்வே வந்த விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் க. வே. பாலகுமாரன் அவர்கள், ஈழமுரசு இதழுக்காக மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.ஜி. அவர்களுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி

**கேள்வி:–** இரண்டரை வருடங்களாக நீடிக்கும் போர் நிறுத்த வேளையில் முடங்கிப்போயிருக்கும் சமாதானப்பேச்சுச் சூழலில் முதன்முறையாக ஐரோப்பாவிற்கு வருகைதந்துள்ள தங்களிடம் இருந்து தற்போதைய அரசியல், சமாதானத் திட்டங்கள் பற்றி உங்கள் சுருக்கமான கருத்தென்ன?

**பதில்:–** அனைவருமே சமத்துவமாக வாழ்வதற்கு ஒரு திட்டத்தை முன் வைத்திருக்கின்றோம். இது தமிழ் மக்களுடைய திட்டம். இதற்குமேல் கோரிக்கை எதுவும் வைப்பதற்கான திட்டம் எதுவுமில்லை.

இதுதான் கடைசிக் கோரிக்கை. நாங்கள் பொறுமையுடன் காத்திருக்கின்றோம். நாங்கள் சமாதானப் பாதையில் செல்கின்றோம். இதனால்தான் நாங்கள், எவருக்கும் கடமைப்பட்டவர்களாக வாழவில்லை. இவ்வாறு விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமார் அவர்கள், தொலைபேசியில் பரிசிலிருந்து எடுத்த சிறப்பு செவ்வியின்போது, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் சொன்னார். சுருக்கமாக அவரது செவ்வி வருமாறு...

சமாதானப்பேச்சு என்பது வந்து தமிழ் மக்களால் ஆரம்பிக்கப்பட்ட முயற்சி. எல்லோருக்கும் அந்த தொடக்க வரலாறு தெரியும். ஆனபடியால் நாங்கள் எப்பொழுதும் சமாதானத்தின் பக்கம் தான் நிற்கின்றோம். நாங்கள் செய்த ஒவ்வொரு முயற்சியுமே அமைதிக்கான முயற்சிதான். நாங்கள் போர் செய்தால் கூட அதை நாங்கள் அமைதிக்காகத்தான் செய்தோம். சமாதானத்திற்கான போர் அல்ல.... (சிரிக்கிறார்) அமைதிக்கான போர். நாங்கள் பேச்சுக்களுக்கு தயாராக இருந்தபொழுது எங்களிடம் பலம் இல்லாதபடியால் சிங்களவர்கள் எங்களை எள்ளிநகையாடினார்கள்.


(தொடர்ச்சி 17ம் பக்கம்)

சந்திரிகாவின் அவதந்திரம் 7



தமிழீழத்துக்காக ஆயுதமேந்தியவர்கள் தமிழீழத்தை எதிர்ப்பதேன் ? 12





"சமாதானச்சுருள்" திரைமாலை 25

புலிகள் பலவீனமடைந்து விட்டதாக அரசு நினைத்தால்... 03



ஊடுருவித் தாக்குதலில் முக்கிய பங்காற்றியவர்... 29



Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதமும் அதிகநேர்வு மலிவோ மலிவு !!

- அனைத்து ஜவுளி வகைகள்
- கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
- அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
- வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
- நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்



Pub

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்

V.T.Cash & Carry

900g யாழ்ப்பாணம் மிளகாய்துள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord

# தொடரும் கொலைகள் தடுத்து நிறுத்த இரு தரப்பையும் சந்திக்க நோர்வே முடிவு

(30.08.04)

கிழக்கிலும், கொழும்பிலும் நடைபெற்றுவரும் கொலைகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் இரு தரப்பினரையும் சந்தித்து கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க நோர்வே அனுசரணையாளர்கள் முடிவு செய்துள்ளனர். இதன் முதற்கட்டமாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரை நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மும், சிறீலங்காவிற்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்காரும் அடுத்த வாரம் சந்திக்கவுள்ளனர். கிழக்கிலும், கொழும்பிலும் நடைபெற்றுவரும் கொலைகள் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, நோர்வே அனுசரணையாளர்களிடம் சமர்ப்பித்துள்ள தனது அவதானிப்பு அறிக்கையை அடுத்தே சம்பந்தப்பட்ட இரு தரப்பையும் சந்திப்பதற்கு நோர்வே அனுசரணையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

புலிகளுக்கெதிரானவர் கொல்லப்படும் போது, அதனைப் புலிகளே செய்தார்கள் என அரசும் படையினரும் கூறும் குற்றச்சாட்டுக்களை புலிகள் முற்றாக மறுத்து வரும் அதேநேரம், புலிகளின் முக்கியஸ்தர்கள் கொல்லப்படும் போது, இராணுவத்தினரின் பூரண ஆதரவுடன் தமிழ் குழுக்களே இதனை மேற்கொண்டு வருவதாகப் புலிகள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களை அரசும் படையினரும் முற்றாக மறுத்து வருகின்றனர்.

எனினும், இந்தக் கொலைகள் குறித்து கண்காணிப்புக் குழு தனது அவதானிப்புகளை அறிக்கையாக, நோர்வே அனுசரணையாளர்களிடம் சமர்ப்பித்துள்ளது. இதனை ஆராய்ந்த பின்பே சம்பந்தப்பட்ட இரு தரப்பையும் சந்திக்க நோர்வே தரப்பு முடிவு செய்தது. இதற்கமைய அடுத்த வாரம் இலண்டன் செல்லும் எரிக் சொல்ஹெய்மும் ஹான்ஸ் பிரட்ஸ்காரும், அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து இதுகுறித்து பேசவுள்ளதுடன், தங்கள் எதிராளிகளைக் கொல்வதை புலிகள் நிறுத்த வேண்டுமென்ற செய்தியை அன்ரன் பாலசிங்கமூடாக புலிகளின் தலைப்பீடத்திற்கு தெரிவிக்கவுள்ளனர்.

இதையடுத்து, அடுத்தவாரக் கடைசியில் இலங்கை திரும்பும் ஹான்ஸ் பிரட்ஸ்கார் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறுஹொவ்டேயுடன் சென்று சந்திப்பார். இதன்போது, புலிகள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு தமிழ் குழுக்களுக்கு படையினர் வழங்கும் ஆதரவை உடனடியாக நிறுத்துமாறு கூறுவதுடன், போர் நிறுத்த உடன்பாட்டின் பிரிவு 1.8 க்கு அமைய, இந்தக் குழுக்களிடமிருந்து உடனடியாக ஆயுதங்களைக் களைய வேண்டுமெனவும் ஜனாதிபதியிடம் கோரவுள்ளனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு ஜனாதிபதியூடாக இந்தச் செய்தி தெரிவிக்கப்படும். இரு தரப்புக்கு இந்தச் செய்திகளைத் தெரிவிப்பதென கடந்த வாரம் நோர்வே அனுசரணையாளர்கள் தீர்மானித்துள்ளனர். இவர்களது இந்த நடவடிக்கைகள், போர்நிறுத்த உடன்பாட்டுக்கு பெரும் ஆபத்தாக அமையுமென இந்தச் சந்திப்பின் போது அனுசரணையாளர்கள் வலியுறுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொக்கட்டிச்சோலை தேரோட்ட பெருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள்



(30.08.04)

கொக்கட்டிச்சோலை சிறீ தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்டப் பெருவிழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்தப் பெருவிழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்களின் வருகையையொட்டி விசேட போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மண்முனை, அம்பிளாந்துறை போக்குவரத்துக்காக இரவு நேர விசேட படகுச் சேவைகள் இடம்பெற்றன. தமிழீழகாவல்துறை காவல் பணிமனையினை அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புலிகள் – முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பொன்று அம்பாறை திருக்கோவில் அரசியல்துறைச் செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் நடைபெற்றது. இச்சந்திப்பில் தமிழ் முஸ்லிம் மக்கள் உறவு குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக அம்பாறையிலிருந்து எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

## நோர்வே அரச பிரதிநிதிகளுடன் மிலிந்த மொரகொட இரகசிய சந்திப்பு

(29.05.04)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மிலிந்த மொரகொட இவ்வார முற்பகுதியில் நோர்வே அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் இரகசிய சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் மற்றும் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரை மிலிந்தமொரகொட சந்தித்துப் பேச்சுவார்த்தை மேற்கொண்டதாக நோர்வே வெளிவிவகார அமைச்சின் நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏசியன் ரிப்பியூன் இணையத்தளம் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

நோர்வே அரசாங்கமே மிலிந்த மொரகொடவை சந்திப்புக்கு அழைத்துள்ளது. கொன்டினன்டல் விடுதியில் மிலிந்தமொரகொட தங்கியிருந்ததாகவும், அங்கு நோர்வே வெளிவிவகார அமைச்சின் முக்கிய அதிகாரிகள் அவரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஸ்தம்பிதமடைந்திருக்கும் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. அறிவித்துள்ளமை குறித்தும் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் தொடர்பாக வாஷிங்டன் எடுத்திருக்கும் கடுமையான நிலைப்பாட்டை தளர்த்திக் கொள்வதற்கு அமெரிக்க பிரதிவெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா ஆகியோரிடமும் மிலிந்த மொரகொடவுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்துமாறு ஹெல்கீசன் மிலிந்தவை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதாகவும் அறியவருகிறது.

## பிஸ்டல் குழுவின் தாக்குதலை முறியடிக்க புதிய பாதுகாப்பு திட்ட

கொழும்பில் பிஸ்டல் குழுக்களின் நடவடிக்கைகளை முறியடிக்கும் விசேட பாதுகாப்பு திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக சிறீலங்கா பொது மக்கள் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார். இதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் பொலிஸ் திணைக்களம் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் தொடர் கொலைச் சம்பவங்கள் தொடர்பாகவும், அதற்கெதிரான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

Errances Travels

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# புலிகள் பலவீனமடைந்து விட்டதாக அரசு நினைத்தால் அது எமது விடிவிற்கான அத்திபாரமாகவே அமையும்

## – சார்ள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி தளபதி தெரிவிப்பு –



(30.08.04)

தென்னிலங்கை அரசும் அரசியல்வாதிகளும் விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள் என்று நினைத்தால் அது எமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விடயம். ஏனெனில் அது எங்களின் விடிவிற்கு அரசாங்கம் போட்டுத்தருகின்ற அத்திபாரமாகவும், படிக்கல்லாகவுமே அமையுமென, விடுதலைப் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதி லெப். கேணல் நகுலன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற `விடியல்' இசைக்குழுவினரின் `தாய்மடியில் தாலாட்டு' என்ற ஒலிப்பேழை அறிமுக விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் பேசுகையில், எங்கள் மீது அரசாங்கம் யுத்தத்தை தொடுத்தால் அதனை எதிர்கொண்டு எமது தேசத்தை மீட்டெடுக்க எங்களுடைய மக்களும் விடுதலைப் புலிகளும் தயாராக உறுதியுடன் இருக்கிறார்கள். இந்த விடுதலைப் போராட்டத்தின் இறுதி வெற்றியானது எங்கள் ஒவ்வொருவரிலும் தங்கியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் எம் இனத்தின் மீது திணிக்கப்படும் போரை எதிர்கொள்வதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இந்த கிளிநொச்சி நகரமானது பல நூற்றுக்கும் மேற்பட்ட எல்லைப் படை மாவீரர்களினதும், மாவீரர்களினதும் குருதியினாலும் தியாகத்தினாலும் விடுதலை பெற்று இன்று மெல்ல மெல்ல உருப்பெற்று வருகின்றது என அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார்.



# மலசலகூட குழியிலிருந்து மேலும் எலும்புக்கூடுகள் மீட்பு

## வல்லுறவு, கொலை புரிந்த ஈ.பி.ஆர்.எல்.எஃவ். வரதர் அணி உறுப்பினர் கைது

(30.08.04)

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் மலசலகூடக் குழியிலிருந்து மேலும் ஒரு தொகுதி எலும்புக் கூடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் இரு மண்டையோடுகளும், எலும்புத் துண்டுகளும் கைப்பற்றப்பட்ட நிலையில், சந்தேகத்தின் பேரில் ஐவரைக் கைது செய்த பொலிசார், அவர்களிடமிருந்து பெற்ற தகவலின் பேரிலேயே பாழடைந்த நிலையிலிருந்த மலசலகூடக் குழியிலிருந்து இந்த எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்தனர். சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்திலிருந்து கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் காணாமல் போனதாகக் கூறப்படும் இளம் பெண் ஒருவரது எலும்புக்கூடும், திங்கட்கிழமை இப்பகுதியில் மீட்கப்பட்ட மண்டையோடு மற்றும் எலும்புக் கூடுகளிலிருக்கலாமென சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, காணாமல் போனவரின் சகோதரி திங்கட்கிழமை இது தொடர்பாக, வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் வாக்குமூலமளித்தார். இதன்போது இவர் தனது சகோதரி காணாமல் போனதற்கு காரணமானவர்களென ஐவரது பெயர்களைக் குறிப்பிடவே, அவர்களை உடனடியாகக் கைது செய்து துரித விசாரணைகளை நடத்துமாறு நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார். இதையடுத்து மேற்படி ஐவரும் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது, சிதம்பரபுரம் காட்டுப் பகுதிக்குச் சமீபமாகப் பாழடைந்த மலசலகூடக் குழியொன்றில் மேலும், எலும்புக் கூடுகள் இருப்பது தெரியவந்தது. அங்கு சென்ற பொலிசார் அந்தக் குழியிலிருந்து ஒரு தொகுதி எலும்புக் கூடுகளைக் கைப்பற்றி தற்போது அவற்றை வவுனியா வைத்தியசாலை பிரேத அறையில் வைத்துள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க, இக்குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஈ.பி. ஆர்.எல்.எஃவ். வரதர் அணியைச் சேர்ந்த மென்டிஸ் திலக்ராஜா எனபவருடைய வாக்குமூலத்தைப் பொலிசார் பதிவுசெய்தனர். மிகுந்த எதிர்ப்பிற்குப் பின்னர் இறுதியில் திலக்ராஜா உண்மைகளை ஒத்துக் கொண்டார். அவர் குறிப்பிட்டபடி சிதம்பரபுரம் கிராமத்தில் அமைந்திருந்த வீட்டின் பின்புறக் குழியில் அப்பெண்ணின் எலும்புக்கூடுகளைப் பொலிசார் கண்டெடுத்ததுடன், வவுனியா நீதவானும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு விபரங்களைப் பதிவுசெய்தார்.

கைகளும், வாயும் கட்டப்பட்ட நிலையிலும் கழுத்தில் கயிறு கட்டப்பட்டபடியும் இப்பெண்ணின் எலும்புக்கூடு காணப்பட்டுள்ளது. அக்கிராமத்தைச் சேர்ந்த திருமதி. நீலாவதி சம்பவ இடத்தில் எலும்புக்கூட்டுடன் காணப்பட்ட உடை மற்றும் பொருட்களை வைத்து, தனது மகள் செல்வம் பவானியின் எலும்புக்கூடுகள் தான் அவை என்பதை உறுதி செய்தார். 19 வயதான பவானியின் தாயாரும் தங்கையும் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

திலக்ராஜா நீதிமன்றத்தில் வழங்கிய வாக்குமூலத்தின்படி, சிதம்பரபுரத்தில் உள்ள வீடொன்றில் தனது காதலனைச் சந்திக்க பவானி வந்தபோது, அதைக் கண்ட திலக்ராஜா, இவ்விடயத்தை வீட்டில் பெற்றோரிடம் சொல்லிவிடுவேன் என்று பயமுறுத்தி அவ்வீட்டிற்குள் அவளை அழைத்துச் சென்றதாகவும், வீட்டிற்குள் வைத்து, அவளை வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும் ஒத்துக் கொண்டுள்ளார். மீண்டும் அவ்வீட்டிற்கு வரும்படி பவானியைக் கட்டாயப்படுத்திய திலக்ராஜா, அவளை அவ்வீட்டினுள் வைத்து மீண்டும் வல்லுறவுக்கு உட்படுத்த முற்பட்டபோது பவானி அழுது கெஞ்சி தன்னை விட்டுவிடும்படி வேண்டியிருக்கிறாள். இருந்தும், அவளை வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சிக்க, பவானி எதிர்த்துப் போராடியிருக்கிறாள். தனது விருப்பத்திற்கு ஒத்துழைக்காத பவானியை அடித்துச் சித்திரவதை செய்த திலக்ராஜா, இறுதியில் அவள் மயக்கமடைந்ததும், அவளை வல்லுறவுக்கு உட்படுத்திவிட்டு, கயிறொன்றினால் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளான்.

கொலையான அப்பெண்ணைப் புதைப்பதற்கு உதவும்படி இன்னும் இரு நபர்களைக் கட்டாயப்படுத்திப் பயமுறுத்திய திலக்ராஜா, அவர்களின் உதவியுடன், அவளது உடலை சாக்கில் கட்டி, கைவிடப்பட்ட அவ்வீட்டின் பின்புறமுள்ள மலகூடக் குழியில் வீசியுள்ளான். பாவு என்ற நபர் அப் பெண் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரைக் கயிறு கட்டி இழுத்துச் சென்றதாகவும் தெரிவித்த அவர், சீலன் என்ற நபர் சடலம் மலக்குழியில் போடப்பட்ட போது யாராவது வருகிறார்களா என்று பார்த்தார் என்றும் தெரிவித்துள்ளார். இதுதவிர, பவானி அணிந்திருந்த நகைகளை எடுத்து, 6,500 ரூபாவுக்கு விற்றதையும் திலக்ராஜா ஒத்துக்கொண்டுள்ளார். திலக்ராஜாவும், அவருக்கு உதவிய ஏனைய இரு நபர்களும் கூறிய தகவலின்படிதான் இந்த வீட்டிற்கு வந்து, பவானியின் எலும்புக்கூடுகளைப் பொலிசார் கண்டெடுத்தனர். இது தொடர்பாக வவுனியா சிறீலங்கா குற்றவியல் பிரிவு பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விசேட அதிரடிப்படைக்கு புதிதாக 2000 பேர்

(30.08.04)

சிறீலங்கா விசேட அதிரடிப் படைக்கு (எஸ்.ரி.எப்.) ஆள் திரட்டும் நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. 2000 பொலிசாரை திரட்டி விசேட அதிரடிப்படை ஆளணியை விரிவாக்கப் போவதாக அதன் கட்டளைத் தளபதியும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நிமல் லெவ்கே தெரிவித்துள்ளார். பொலிஸ் இன்ஸ்பெக்டர் தரத்திற்கு 50 பேரும் ஏனையோர் பொலிஸ் கான்ஸ்டபிள் தரத்திற்கும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். அண்மையில் பதவி உயர்வுகள் பெற்ற பொலிசாரின் பட்டியலில் 85 வீதமானவர்கள் அதிரடிப் படையில் கடமையாற்றியவர்களே. இதில் சிலர் தற்போதும் தொடர்ந்து அதிரடிப் படையில் உள்ளனர். அநேகமானோர் சாதாரண பொலிஸ் சேவையில் இணைந்துள்ளனர். இந்த இடைவெளிகளை நிரப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### வவுனியா முகாம்களில் படையினர் தீவிர பயிற்சி

வவுனியா மாவட்டத்தில் படையினர் தீவிர போர் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. ஈரப்பெரிய குளம் படைமுகாமில் இருந்து வேட்டுச் சத்தங்களும் பாரிய குண்டு வெடிப்பு ஓசைகளும் கேட்ட வண்ணமுள்ளன.

"SHELVA" "ZUG"

Credit and Insurance

✶ குறைந்த வட்டியில் அதிகூடிய

வங்கிக்கடன்

✶ 30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...

✶ வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி

✶ இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)

"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland

Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# சிங்கள இனவாத அமைப்புகளின் குற்றச்சாட்டுக்கு நோர்வே மறுப்பு

## புலிகளுக்கோ, வேறு ஆயுதக் குழுக்களுக்கோ இராணுவ பயிற்சி எதனையும் வழங்கவில்லை எனத் தெரிவிப்பு

(30.08.04)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கோ ஏனைய ஆயுதக் குழுக்களுக்கோ எந்தவொரு இராணுவ பயிற்சிகளையும் தாம் வழங்கவில்லை என்று நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது. கடந்த வாரம் நோர்வேயில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் நோர்வே விடுதலைப் புலிகளுக்கு இராணுவ பயிற்சி அளித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இது தொடர்பான செய்திகள் சில ஊடகங்களில் வெளியாகியிருந்தன. இதனையடுத்து இலங்கையில் உள்ள நோர்வே தூதரகம் வெள்ளி இரவு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு, கடந்த வாரம் ஒஸ்லோவில் நடைபெற்ற கருத்தரங்கு தொடர்பாக பிழையான செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டுள்ளமை தொடர்பாக கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. நோர்வே அரசாங்கம் ஒருபோதும் புலிகளுக்கோ, வேறு எந்த ஆயுதம் தாங்கிய இயக்கங்களுக்கோ இராணுவ பயிற்சியினை அளிக்கவில்லை. புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதி நோர்வேயில் உள்ள ரேனா இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தமை ஸ்கன்டினேவிய நாடுகளுக்கு குழு மேற்கொண்ட விஜயத்தின் ஓர் அங்கமாகவே இருந்தது. இவர்களின் சுற்றுப்பயணம் ஜனநாயக ஆட்சி முறையின் அம்சங்கள் பற்றியும் மற்றும் ஆண், பெண் சமத்துவம், ஜனநாயக நாடொன்றில் இராணுவக் கட்டுப்பாட்டு முறை என்பன பற்றியும் அறிந்து கொள்வதாகவே அமைந்திருந்தது. 2003ம் ஆண்டு மார்ச் மாதம் சிறீலங்கா அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட 6வது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் புலிகள் அளித்த உறுதி மொழி ஒன்றுக்கமைய இந்த சுற்றுப் பயணம் இடம்பெற்றது.

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வொன்றை ஆராயும் வகையில் அரசியல் விவகாரங்களை அறிந்து கொள்ளும் நோக்குடன் புலிகளின் அணியினர் இச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தனர். பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்ட ரெனா இராணுவ முகாம் விஜயம் நான்கு மணித்தியாலங்களுக்கே நீடித்தது. அங்கு இடம்பெற்ற சொற்பொழிவில் நோர்வே துருப்புக்கள் அமைதி காக்கும் பணியிலும், சர்வதேச அமைதி காக்கும் பணிக்கும் எவ்வாறு தம்மை தயார்படுத்திக் கொள்கிறார்கள் என்பது பற்றி விளக்கமளிக்கப்பட்டது. அப்பொழுது ரெனா முகாம் பற்றியும் பத்திரிகையில் விரிவான செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

இதேவேளை, சிங்கள இனவாத அமைப்புகளும் விடுதலைப் புலிகளுக்கு நோர்வே ஆயுதப் பயிற்சி வழங்குவதாகக் குற்றம்சாட்டி நோர்வேயிடம் மனுக்களை கையளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# தாக்குதல் தொடர்ந்தால் முழுப்பலத்தையும் பிரயோகியுங்கள்


## - கிழக்கு படைகளுக்கு இராணுவத் தளபதி அறிவுறுத்தல் -

கிழக்கில் இராணுவத்தினர் மீது தாக்குதல்கள் தொடருமாயின், படையினர் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முழுப் பலத்தையும் பிரயோகிக்க வேண்டுமென சிறீலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட கிழக்கு மாகாணப் படைத் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். கிழக்கில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல்கள் குறித்து, அவர் மேலும் கூறுகையில், படையினர் தற்போது உயிராபத்தை எதிர்நோக்குகின்றனர். இதனால் அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும். படையினர் போர்நிறுத்தத்தை மீற வேண்டுமென்ற நோக்கில் தற்போது, புலிகள் படையினர் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர். இந்த நிலைமை தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது. போர்நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடிக்கும் அதேநேரம், தங்களைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

எங்களுடன் இவை பற்றியெல்லாம் பேசுவதற்கு புலிகள் தயாராயில்லாததால் இது குறித்து புலிகளின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தும் நிலையில் தற்போது நாங்களில்லை. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சந்திப்பில், இந்தத் தாக்குதல்கள் குறித்து தெரிவித்ததுடன் போர்நிறுத்த உடன்பாட்டை மதித்துச் செயற்படுமாறு புலிகளுக்கு அறிவுறுத்த வேண்டிய தேவை குறித்து கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரிவித்துள்ளோம். படையினருக்கெதிராகவோ அல்லது வேறு தரப்பினருக்கெதிராகவோ இவ்வாறான தாக்குதல்களில் ஈடுபட வேண்டாமெனப் புலிகளிடம் கூறுமாறும் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

கிழக்கில் குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமையும் திங்கட்கிழமையும் படையினர் மீது சிறுசிறு தாக்குதல்கள் நடைபெற்றதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இவ்வாறான தாக்குதல்கள் தொடருமானால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் புலிகள் வருவதை தடை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுமென கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்தன கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. இதேநேரம் மேற்படி தாக்குதல்கள் குறித்த குற்றச்சாட்டை புலிகள் முற்றாக மறுத்திருந்ததும் தெரிந்ததே. இதேவேளை, படையினர் மீதான தாக்குதல்களை அவர்களது புலனாய்வுத்துறையினரே மேற்கொண்டதாக செய்திகள் வெளியாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# கனடிய சமஷ்டி அமைப்பின் தலைவர் பொப் ரே தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்



(கிளிநொச்சி - 29.08.04)

சமஷ்டி அமைப்பின் தலைவரும், முன்னாள் ஒன்ராரியோ முதல்வருமான பொப் ரே அவர்கள், இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பது குறித்து விரிவாக ஆராய்ந்தார். கனடிய அரசியல் விஞ்ஞான பீடப் போதனாசிரியர் கலாநிதி டேவிட் கமரூனும் இச்சந்திப்பில் பொப் ரேயுடன் கலந்து கொண்டார்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படுவதன் அவசியம் குறித்து பொப்ரே விரிவாக விளக்கமளித்ததாகவும், இருதரப்பினரிடையேயான பேச்சுக்கள் மூலம் மட்டுமே இப்பிரச்சனை விரைவாகத் தீர்க்கப்படலாம் என்பதை மையப்படுத்தியே பேச்சுக்கள் நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.


சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற இத்தகைய சந்திப்பின் அடுத்த கட்டமாகவே இச்சந்திப்பு கருதப்பட்டதாகவும், இலங்கை இனப் பிரச்சனை குறித்தும் தற்போதைய சமாதான முன்னெடுப்புகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்தும் சர்வதேச நாடுகளின் கருத்தும் விளக்கமும் என்ன என்பதைத் தெளிவாக்குவதே இவர்களது முதன்மையான நோக்கமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதற்குப் பதிலளித்த சு.ப.தமிழ்ச்செல்வன், தமது தரப்பு மிக நேர்மையுடனும் தெளிவுடனும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டதுடன், மக்களின் அடிப்படைத் தேவைகளை முதலில் கவனத்தில் எடுப்பதற்காக மட்டுமே இடைக்கால நிர்வாக சபை குறித்த திட்டமொன்றை ரணில் அரசிடம் கையளித்ததாகவும் குறிப்பிட்டார்.

இருப்பினும், ரணில் அரசு தமது இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக அலகை ஆராய்வதற்கு முன்னதாகவே, சந்திரிகா பல அரசியல் குழப்ப நிலையைத் தோற்றுவித்ததாலும் அதற்குப் பின்னர் உருவான அரசியல் மாற்றங்களாலும், தற்போது தெற்கில் நமது இடைக்காலத் தீர்வு குறித்து தவறான பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஒரு கட்சியாக, விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தமது சமாதான முயற்சிகளில் ஆர்வத்துடனேயே இருக்கிறார்கள். கொழும்பு அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோர்வே பிரதிநிதிகளுக்கு ஒரே குரலில் தங்களது விருப்பத்தைத் தெரிவித்து அவர்களை மீண்டும் சமரச முயற்சிகளை மேற்கொள்ளப் பணிக்கவேண்டுமென்பதே தங்கள் விருப்பம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், இலங்கைப் பிரச்சனையைத் தீர்க்க சமஷ்டி அமைப்பு முறையே சிறந்ததென்றும், இனநெருக்கடிக்குத் தீர்வு காண விடுதலைப் புலிகள் மிகவும் ஆர்வமாக இருப்பதாகவும் பொப் ரே பின்னர் கருத்துக் கூறியுள்ளார்.

சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்

N.S.Jewellery

(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)

உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.

N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich

Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

## அடித்துத்தான் பெறவேண்டுமா?

`வாழு, வாழவிடு' என்ற உன்னத கோட்பாட்டுடன் இலங்கையில் இணைப்பாட்சி முறையைக் கொண்டு வருமாறு தந்தை செல்வநாயகம் 1949ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழரசுக்கட்சியைத் தோற்றுவித்தார்.

சிங்கள மக்கள் சுதந்திரமாகத் தமது உரிமைகளுடன் வாழ்வதுபோல தமிழ் மக்களும் தங்கள் தாயகத்தில் தமது மொழி, கல்வி, பண்பாடுகளைப் பேணி வளர்த்துப் பாதுகாத்து சுதந்திரமாக வாழ்வதற்கு இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சிமுறையை உருவாக்க வேண்டும் என்று தந்தை செல்வா கோரினார்.

சமஷ்டி அமைப்பு முறைதான் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற இலங்கை போன்ற நாடுகளுக்குப் பொருத்தமானது என்று இலண்டனில் உயர்கல்வியை முடித்துத்திரும்பிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா முதன் முதலில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆனாலும் மொழிவெறியைக் கிளப்பி ஆட்சிக்கு வருவதற்குத் திட்டமிட்ட பண்டாவும் அவரைப் போன்ற அரசியல்வாதிகளுமே இணைப்பாட்சி முறை என்பது பிரிவினை அல்ல என்பது தெரிந்தும், தந்தை செல்வாவின் கோரிக்கை நாட்டைப் பிளவுபடுத்தும் என்று பிரசாரம் செய்தனர்.

தந்தை செல்வாவும் தமிழர்களும் நாட்டைத் துண்டாடப் பார்க்கிறார்கள் என்று சிங்கள அதிகார சக்திகளும் அரசியல்வாதிகளும் பேரினவாதிகளும் கூச்சலிட்டார்கள். தமிழருக்கெதிராக இனத்துவேஷத்தை மூட்டினார்கள்.

1956 இல் பண்டா கொண்டு வந்த சிங்களம் மட்டும் சட்டமும் அதைத் தொடர்ந்து வெடித்த தமிழ் மக்களுக்கெதிரான இனக்கலவரமும் பின்னர் 1958 இலிருந்து 1983 வரை பரவிவிரிந்து விசுவரூபமெடுத்தது.

`வாழு, வாழவிடு' என்ற தந்தைசெல்வாவின் கோட்பாட்டுக்கு `வாழ்வோம், வாழவிடமாட்டோம்' என்பதே சிங்கள ஆதிக்க சக்திகளினதும் பேரினவாதிகளும் பதிலாக இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

இணைப்பாட்சிக் கோரிக்கைக்கு ஜனநாயக முறையில் தந்தை செல்வாவும் தமிழரசுக்கட்சியினரும் தமிழர் தாயக மக்களின் ஆணையைப் பெற்ற போதிலும் சிங்களப் பெரும்பான்மை ஜனநாயகம் அதை ஏற்க மறுத்தது.

தமிழர்கள் நாட்டைத் துண்டாடப் பார்க்கிறார்கள் என்று தமிழ் மக்களையும் மண்ணையும் சிங்கள ஆதிக்கம் துண்டாடியது.

சிங்களவர்களுடன் இணைந்து வாழ்வதற்காக நிராயுதபாணியாக வாய்மையே வெல்லும் என்ற தூய்மையுடன் தந்தை செல்வாவும் தமிழ் மக்களும் சாத்வீகப் போராட்டங்களில் 1949 முதல் 1976 ஆம் ஆண்டுவரை ஈடுபட்டுச் சித்திரவதைகளை அனுபவித்தனர். சிங்கள இனவெறிக்கு தமிழர் பலர் உயிர்ப்பலி கொடுத்தனர்.

1976ஆம் ஆண்டில் பொறுமை இழந்த தமிழ்த் தலைவர்கள் சமஷ்டி என்ற இணைப்பாட்சிக் கோரிக்கையைக் கைவிட்டனர்.

இழந்த தமிழரசை மீண்டும் அமைப்போம் என்று தமிழ்த் தலைவர்கள் ஒன்று சேர்ந்து பிரகடனம் செய்தனர். சாத்வீகப் போராட்டமும் முடிவுக்கு வந்தது.

தமிழீழ அரசை அமைக்கும் போராட்டத்தை தமிழ் மக்கள் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்துவிட்டனர்.

பதினேழாயிரத்துக்கு மேற்பட்ட வீரவேங்கைகளின் தியாகத்தினாலும் தமிழ் மக்களின் உதவி, ஒத்துழைப்பினாலும் இன்று `யார் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் விடுதலைப்புலிகள் இன்று ஒரு தனியான இராச்சியத்தைக் கொண்டுள்ளனர் என்பதே யதார்த்தமான உண்மை' என்று கனடாவின் ஒன்ராரியோ மாநில முதல்வர் பொப்ரே எடுத்துக்கூறியிருக்கிறார்.

1958ஆம் ஆண்டுக் கலவரத்தையடுத்து ராஜரிஷி என்றழைக்கப்பட்ட ராஜாஜி, இலங்கையின் அமைதிக்கு சமஷ்டி அமைப்பே வழி என்றார்.

உயிர்ப்பலி கொடுத்து இன்று தமிழீழ அரசை வெல்லும் சந்தர்ப்பத்தில் மீண்டும், சமஷ்டி என்று சிங்களத்திலிருந்து குரல் கேட்கிறது.

`இலங்கையில் தமிழர்களுக்கான உரிமைகள் வழங்கப்படாது தொடர்ந்தும் அவர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவார்களேயானால் சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப பிரிந்துசென்று தனியாட்சி அமைக்கும் உரிமை தமிழர்களுக்கு இருக்கிறது' என்று சிங்களக் கல்விமான் கலாநிதி றொகான் எதிரிசிங்க ஒருகருத்தரங்கில் எச்சரித்திருக்கிறார்.

வாசுதேவ நாணயக்காராவும் இதைப் பலதடவை சொல்லியிருக்கிறார். யார் என்ன சொல்லி என்ன பயன்?

சமாதானப்பேச்சுவார்த்தை என்று சொல்லியே காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் போருக்கு ஆயத்தம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு அவர்கள் பறந்து பறந்து ஒப்பந்தங்கள் செய்கிறார்கள், ஆயுதங்கள், பீரங்கிக் கப்பல்கள், போர்க்கப்பல்கள் வாங்குகிறார்கள். படையினருக்கு வெளிநாட்டு நிபுணர்கள் பயிற்சி அளிக்கிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு உலகிலிருந்து கிடைக்கும் உதவிகள் அந்த மக்களுக்கு ஒழுங்காகக் கிடைப்பதற்கு `இடைக்காலத்தன்னாதிக்க அதிகார சபை' அமைக்க வேண்டுமென்றால் அந்தச் சபையும் நாட்டைப் பிரித்துத் தமிழர்கள் தனியரசு அமைக்க வழி வகுக்கும் என்று கூச்சலிடுகிறார்கள், எதிர்க்கிறார்கள்.

இப்பொழுதே தமிழர்கள் தனி இராச்சியம் அமைத்திருக்கிறார்கள் என்பதை, கனடாவிலிருந்து வந்த ஒரு தலைவர் சொல்லியும் கூட சிங்களத்தலைமையால் உணர்ந்துகொள்ள முடியவில்லையா?

1949ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் நாட்டைப் பிரிக்கப்பார்க்கிறார்கள் என்று சொல்லிச் சொல்லியே வழிகாட்டியவர்கள் சிங்கள அரசியல் ஆதிக்க சக்திகள்தான்.

இணைப்பாட்சிக் கோரிக்கை தமிழீழ அரசு அமைக்கும் கோரிக்கையாக மாறியதும் இந்த சிங்கள ஆதிக்க சக்திகளால்தான். தன்னாதிக்க அதிகார சபை அமைக்கும் கோரிக்கையையும் நாட்டுப் பிரிவினை என்று சொல்லி மறுத்து அடம்பிடித்தால்...

இதுவரை ஜனநாயக வழியில் தமிழர்கள் எதையும் கேட்டுப் பெற்றதில்லை...

சாத்வீகப் போராட்டத்தினாலும் எதையும் பேசி ஒப்பந்தம் செய்தும் பெற்றுக்கொண்டதில்லை...

அடித்துப் பெற்றதால்தான் இன்று தமிழர் தாயகத்தில் பெரும்பகுதி சிங்கள தேசத்திலிருந்து விடுதலை பெற்றிருக்கிறது. `இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபை'யைக் கூட அமைப்பதற்கு சிங்கள ஆதிக்க சக்திகள், பேரினவாதிகள் இடையூறாக நின்று தடுப்பார்களாயின் இனி அடித்துத்தான் மிகுதியையும் எடுக்கவேண்டுமெனில் யார்தான் என்ன செய்யமுடியும்?

# புலிகளின் தனி அரசை சிறிலங்கா அரசு ஏற்றுள்ளது உண்மை

## – கனடா மாநில முன்னாள் முதல்வர் விளக்கம் –

யார் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் விடுதலைப் புலிகள் இன்று ஒரு தனியான இராச்சியத்தைக் கொண்டுள்ளனர் என்பதே யதார்த்த பூர்வமான உண்மை என்பதை சுட்டிக்காட்டியுள்ள கனடாவின் ஒன்ராரியோ மாநில முதலமைச்சரும் சமஷ்டிக்கான பொது அரங்கு என்ற அமைப்பின் தலைவருமான பொப்ரே, எடுத்துக் கூறியிருக்கிறார். இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இப்போதுள்ள சிறந்த வழிமுறை சமஷ்டி முறையிலான தீர்வொன்றை எட்டுவதே எனவும் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்றாரியோ மாநில முன்னாள் முதலமைச்சர் பொப் ரே, `சமஷ்டி என்னும் எண்ணக்கரு' என்னும் தலைப்பில் மாற்றுக் கொள்கை நிலையம் மற்றும் `சமஷ்டிக்கான பொது அரங்கு' என்பன இணைந்து ஒழுங்கு செய்திருந்த நான்கு நாள் வதிவிட கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த மேலும் தெரிவிக்கையில் சமஷ்டி என்ற சொல்லை ஏதோ தீண்டத்தகாத சொல் போல பெரும்பான்மையான சிங்கள மக்கள் கருதுகின்றனர். சமஷ்டி முறையின் கீழ் தனியாகப் பிரிந்து செல்லும் உரிமையும் உள்ளது என்பதால் இம்முறையை நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபட்டு வரும் என அவர்கள் அஞ்சுகின்றனர். ஆனால் திருமணம் செய்பவர்களுக்கு விவாகரத்து செய்யும் உரிமையும் உள்ளது. அதற்காக திருமணம் செய்து கொள்ளும் அனைவருமே விவாகரத்து செய்கிறார்களா? இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டமாக முன்வைக்கப்பட்டுள்ள சமஷ்டி ஆட்சிமுறையை பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அடுத்து பல்வேறு விடயங்கள் நிகழ சாத்தியமுள்ளது.

நான் முதன் முதல் பிரபாகரனைச் சந்தித்த போது ஏற்கனவே வடக்கில் ஒரு தமிழ் அரசாங்கம் ஒன்று இருப்பதாக அவர் தெரிவித்திருந்தார். அவர்களிடம் தனியான ஒரு நீதிமன்ற அமைப்பு முறை உள்ளது. அவர்கள் தனியான சமூக சேவை நிறுவனங்களைக் கொண்டுள்ளனர். தமக்கான தனியான கல்வித் திட்டத்தைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கென்று தனியான பொருளாதாரம் உள்ளது.

### இலங்கையில் இரண்டு அரசாங்கங்கள் உள்ளன

அவர்களிடம் தனியான பொலிஸ் படை உள்ளது. அவர்கள் வரி அறவிடுகின்றனர். அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசம் தனியான எல்லைகளைக் கொண்டுள்ளது. சொல்லப்போனால் அவர்களிடம் ஒரு முழுமை பெறாத தனியான அரசாங்கம் உள்ளது. அந்த அரசாங்கத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவில்லை. அது ஒரு ஜனநாயக பூர்வமான அரசாங்கம் அல்ல. ஆனாலும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இலங்கையில் இரண்டு அரசாங்கங்கள் உள்ளன என்பதே யதார்த்தமாகும்.

இலங்கை அரசாங்கமும் இதை ஏற்றுக் கொண்டுதான் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளது. உண்மையைச் சொல்லப்போனால் அங்கு ஒரு நடைமுறை அரசாங்கம் உள்ளது என்பதே சரியானது. எனவேதான் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய சாத்தியமான அம்சங்கள் குறித்துத் தெரிவிக்க விரும்புகிறேன். முதலாவது இரு தரப்பும் இந்த யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்தபடியே, ஒரு சமாதான தீர்வை நோக்கி பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தும் நடத்தலாம்.

அடுத்ததாக தமிழ் மக்களது சுய ஆட்சிக் கோரிக்கைக்கு மதிப்பளித்து சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படலாம்.

அல்லது புரிந்துணர்வு உடன்பாட்டைக் கைவிட்டு மீண்டும் யுத்தத்திற்கு சென்று போரின் மூலம் தீர்வு காண்பது. அவ்வாறு நிகழுமாயின் புலிகள் வெற்றி கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு போர் நிகழுமாயின் பெருமளவு அழிவு நிகழும். அப்படிப் புலிகளை அடக்கினாலும் கூட எஞ்சியுள்ள தமிழ் மக்களது பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படுவது, அவசியமாகும். அதாவது எஞ்சியுள்ள தமிழ் மக்களது அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும்.

### குடாநாட்டை புலிகள் கைப்பற்றும் சாத்தியம்

மீண்டும் போர் தொடங்கினால் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் சாத்தியக் கூறும் உள்ளது. அப்படி புலிகள் யாழ்ப்பாணத்தை கைப்பற்றினாலும் கூட அதன்பின் இரு தரப்பும் மீண்டும் பேசியே தீர்வு ஒன்றை எட்ட வேண்டும். எனவே இலங்கையின் எதிர்காலத்திற்கு சமஷ்டி முறையே சிறந்தது என நினைக்கிறேன். இலங்கை தொடர்ந்தும் ஒரே நாடாக இருக்க வேண்டுமானால் சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

> **நான் ஒரு கனேடியன் என்ற முறையில் கனடாவின் எந்தப் பகுதிக்கும் எந்தவித சோதனைக்கும் உட்படுத்தப்படாமல் போக முடியும். ஆனால் இலங்கையில் நிலைமை அப்படியல்ல.**

இதேநேரம் புலிகள் நடை முறையில் ஒரு அரசை நடத்துகின்றனர் என்பது பற்றி எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளித்த அவர், நான் இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதி பற்றி சவால் விடுவிக்கவில்லை. ஆனால் இலங்கையின் ஒரு குறிப்பிட்ட பகுதி புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ளது என்பது உண்மை. ஏனெனில் அவர்களது அனுமதி இன்றி அப்பிரதேசத்தினுள் யாரும் நுழைய முடியாது.

நான் ஒரு கனேடியன் என்ற முறையில் கனடாவின் எந்தப் பகுதிக்கும் எந்தவித சோதனைக்கும் உட்படுத்தப்படாமல் போக முடியும். ஆனால் இலங்கையில் நிலைமை அப்படியல்ல. புலிகளின் பகுதிக்குள் செல்வதற்கு இலங்கையரசாங்கமே தடை செய்து சோதனை செய்த பின்னர் அனுப்புகிறது. எனவேதான் நான் புலிகளிடம் ஒரு நடைமுறை ரீதியான அரசு உள்ளது என குறிப்பிட்டேன்.

இலங்கைக்குப் பொருத்தமான சமஷ்டி முறை என்பது இலங்கையின் தேவைகளுக்கு ஏற்ப அதன் வரலாற்று பின்னணிகளை ஆராய்ந்தே தயாரிக்கப்பட வேண்டும். அதேவேளை, உருவாக்கப்படும் சமஷ்டி அமைப்பானது சிறுபான்மையினரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் வகையிலும் அமைய வேண்டும். இதேநேரம், இச்சமஷ்டி அமைப்பை நடை முறைப்படுத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் நாடாளுமன்றில் அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும். இதில் கட்சியின் நலனை மாத்திரம் கருத்திற் கொள்ளாது நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு அரசியற் கட்சிகள் இதற்கு ஆதரவாக செயற்பட வேண்டும். குறிப்பாக இரு பிரதான அரசியற் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# தகவல் கொடுப்பவரையே பாதுகாக்க முடியாமல் திண்டாடும் சிறீலங்காப் புலனாய்வுத்துறை

சிறீலங்கா இராணுவத்தின் புலனாய்வுத்துறைக்கு தகவல் கொடுக்கும் தமிழ் இளைஞர்களை பாதுகாப்பதில் சிறீலங்கா இராணுவம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கின்றது. அதேவேளை ஆயுததாரிகளினால் தென்பகுதியிலும் கிழக்கு மாகாணத்திலும் சுட்டுக்கொல்லப்படும் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களுக்கு சிறீலங்கா அரசாங்கம் நஷ்டஈடுகளை வழங்க மறுத்து வருவதாகவும் அறிய முடிகின்றது. சமீப காலமாக துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துவரும் இந்த இளைஞர்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு வருகின்றார்கள். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இராணுவ புலனாய்வுத்துறைக்கு தகவல் கொடுத்து வரும் 21 தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாகவும் அவ்வாறு கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு நஷ்டஈட்டை பெற்றுக்கொடுக்க முடியாதநிலை இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரியொருவர் கூறியிருக்கின்றார்.


கொல்லப்பட்ட இளைஞர்களுக்கு அவர்கள் கொலை செய்யப்படுவதற்கு முன்னரே கொலை அச்சுறுத்தல் இருந்ததாகவும் ஆனால் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறீலங்கா இராணுவ புலனாய்வுத்துறையே மேற்கொண்டு வந்ததாகவும் மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது. சிறீலங்கா இராணுவ கட்டமைப்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது விசேட அதிரடிப்படை அல்லது பொலிசாரின் கடமையென்றே இராணுவ அதிகாரியொருவர் கூறியிருக்கின்றார். புலனாய்வுத்துறை பாதுகாப்பை வழங்க முடியாது என்றும் ஆனால் அந்த தமிழ் இளைஞர்களுக்கு தற்பாதுகாப்புக்கான ஆயுதங்களையும் அவர்கள் தென்பகுதியில் தங்குவதற்கான வீடுகளையும் புலனாய்வுத்துறையே வழங்கி வந்ததாகவும் அந்த அதிகாரி கூறியிருக்கின்றார். அவ்வாறான ஏற்பாடுகள் எதுவும் பொலிசாருக்கோ அல்லது இராணுவ உயர்மட்டத்திற்கோ தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும் அவர் சொல்லியிருக்கின்றார்.

அதேவேளை விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது உளவு நடவடிக்கைகளுக்கு மாத்திரமே அவ்வாறான தமிழ் இளைஞர்களை புலனாய்வுத்துறை பயன்படுத்திவந்தது. அதற்காக அவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 75 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்ததாக புலனாய்வுத்துறை அதிகாரியொருவர் தெரிவித்திருக்கின்றார். இதனால்தான் அவ்வாறு கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களின் மனைவி அல்லது தாய் அல்லது அவர்கள் சார்ந்த உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கூறிய அந்த அதிகாரி இவர்களுக்கு வழங்கப்படும்? சம்பளம் மற்றும் வசதி வாய்ப்புக்கள் சிறீலங்காவின் உத்தியோகபூர்வமான இராணுவ அதிகாரிகளுக்கோ அல்லது சாதாரண இராணுவ வீரர்களுக்கோ வழங்கப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். இதேவேளை அவ்வாறு நஷ்டஈடு வழங்குமாறு புலனாய்வுத்துறை உயர்அதிகாரிகள் அரசாங்கத்திடம் கேட்டதாகவும் ஆனால் அதற்கு அரசாங்கம் மறுத்திருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.



இது இவ்வாறிருக்க இராணுவ புலனாய்வுத்துறைக்கு தகவல் வழங்கும் தமிழ் இளைஞர்களை பாதுகாக்க வேண்டியது புலனாய்வுத்துறையின் பொறுப்பு என்றும் அது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார். அத்துடன் அந்த தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா இராணுவத்தின் உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் அல்ல என்றும் அவர்களை ஒற்றர்களாகவே தாங்கள் பயன்படுத்தி வந்ததாகவும் சிறில் ஹேரத் கூறியிருக்கின்றார். ஆகவே தான் இவற்றை நோக்கும் போது இராணுவ புலனாய்வுத் துறைக்கு தகவல் வழங்கும் தமிழ் இளைஞர்கள் சில உண்மைகளை புரிந்துகொள்ள வேண்டும். அற்ப சலுகைக்காகவும் பணத்திற்காகவும் காட்டிக்கொடுத்து இறுதியில் அநாதையாகவும் அவலமாகவும் மரணிப்பதை தவிர்த்து தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் கட்டுமானத்திற்கும் பங்களிப்புச் செய்யவேண்டும். அதேவேளை சிறீலங்கா இராணுவமும் சிறிலங்கா அரசாங்கமும் உங்களை பகடைக்காய்களாகவும் போடு தடியாகவும் பயன்படுத்தி விட்டு உங்களையும் உங்கள் உறவினர்களையும் கைவிட்டு விடுகின்றார்கள். இதனால் நீங்கள் தமிழ் இனத்தின் துரோகிகளாகவும் அதேவேளை தமிழ் மண் உங்களை ஒருபோதும் மன்னிக்காது என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். இதனைவிட வேறு எதனையும் பெரிதாக அறிவுரையாக உங்களுக்கு கூறிவிடமுடியாது.

**– கொழும்பிலிருந்து ஊரோடி**




**உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.**

**சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் ஆசிரியர் லிங்கம் அவர்களின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.**

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
**இடம்: Breitenreinplatz -27, Bern**

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
**இடம்: Eigerplatz, Bern**

**தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33**



# சந்திரிகாவின் அவதந்திரம்

**வன்னியில் இருந்து விவேக்**

மிக அண்மையில் சிறீலங்காவின் அரசுத்தலைவர் சந்திரிகா தனது நிறைவேற்றதிகார மிடுக்குடனும் முப்படைகளின் தளபதி என்ற மிதப்புடனும் வெளியிட்ட ஒரு கருத்து மிகப் பலரது விமர்சனத்துக்கும் இலக்காகியிருக்கிறது. அதுமட்டுமன்றி அப்பாவிப் பொது மக்களுக்கோ குருதி வழியும் இருண்ட நாட்களின் மீள்வரவு அமைந்துவிடுமோ என்ற எண்ணமே வயிற்றைக் கலக்கத் தொடங்கிவிட்டது. அந்த வகையில் அம்மையாரது காற்று சகலரது கவனத்தையும் அதன்பால் ஈர்த்துள்ளது.

'கிழக்குப் பகுதியில் பாதுகாப்பு நிலவரம் மோசமடைந்து செல்லுமானால் அதனைக் கட்டுப்படுத்த விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் படைகளை அணி வகுத்துச் செல்லும் படி உத்தரவிடத் தயங்கமாட்டேன்.'

இதுதான் திடீரென சந்திரிகா அம்மையார் அவிழ்த்து விட்ட அனல் பறக்கும் காற்று. இதனூடாக சந்திரிகா அடைய விளைவது எது? அவர் உணர்வது போன்று, புலிகளின் பகுதிக்குள் படையினர் நகர்வதென்பது எப்படியான எதிர் விளைவுகளை தருமென்பதை மிக மிக நன்றாக அறிந்தவர் சந்திரிகா. அவ்வாறிருந்தும் அவரது கூற்று இப்போது வெளிப் பட்டிருப்பது ஏன்?

கிழக்கை கருவறுக்கும் ஐ.தே.கட்சியின் மூலோபாயத்தினை மாற்றி வடக்கை கைப்பற்றும் யுக்தியினை சந்திரிகா அம்மையாரது அரசு 1995இல் வகுத்திருந்தது. இதன் விளைவாக கிழக்கு மாகாணத்தில் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டு அங்கிருந்து பத்தாயிரக்கணக்கான படையினர் பலாலியில் கொண்டு சென்று குவிக்கப்பட்டனர். அதுமட்டுமன்றி புதிதாக இரு படையணிகளும் உருவாக்கப்பட்டன.

ஆரம்பத்தில் யாழ் குடாநாடு சிங்கள படைகளிடம் வீழ்ச்சியடையும் வரைக்கும், அல்லது முல்லைத்தீவு முகாம் புலிகளிடம் வீழ்ச்சியடையும் வரையும் வடக்கு நோக்கிய மூலோபாயம் பயனளிப்பதாகவே பலரும் கருதினர். இருந்தபோதும் முல்லைத்தீவு வீழ்ச்சியையும் அதன் தாக்கங்களையும் மூடி மறைத்த சந்திரிகா அரசு, கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதுடன் எதிர்த்திசையில் வவுனியா நகரிலிருந்து கிளிநொச்சி நோக்கி ஜெயசிக்குறுய் நடவடிக்கையைத் தொடங்கினார். இதுதான் சிங்களத்தின் இராணுவ முனைப்பின் கூர்முனையை மழுக்கிய எதிர்விளைவுகளைப் பரிசளித்தது. போரின் மீள முடியாச் சகதிக்குள் சிக்கி அலறிய சிங்களதேசம் சமாதான முயற்சிகள் என்ற கயிற்றினைப் பற்றி ஏறிச் சமதரையை அடைந்தது என்றாலும், சந்திரிகாவின் அத்தனகல குடும்பத் திமிர்த்தனம் மட்டும் குறைவதாகத் தெரியவில்லை. இருந் திருந்துவிட்டுப் பீறிடத்தான் செய்கிறது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நடைபெறும் ஆட் கொலைகளும் அதனையொத்த சம்பவங்களும் கட்டுப்படுத்தப்பட வேண்டுமானால், புலிகளின் பகுதிக்குள் படைகளை அனுப்ப வேண்டும் என்பதான கூற்று; "இவை அனைத்துக்கும் புலிகளே காரணமெனக்" குற்றஞ்சாட்டுவதாகும். இந்தப் போக்கு புலிகளுடன் சமாதான மேசையில் அமர்வதற்கு எந்தளவுக்கு உதவப் போகின்றது என்பது ஒரு புறமிருக்க, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு படைகளை அணிவகுத்துச் செல்ல உத்தரவிடுவேன் என அரசாங்கத்தின் தலைவரும், பாதுகாப்பமைச்சரும் முப்படைகளின் தளபதியுமான சந்திரிகா அம்மையார் பிரகடனஞ் செய்வது யுத்த நிறுத்தத்தை பலவீனப்படுத்துவதாக அமையாதா? இது ஒரு பாரதூரமான யுத்த நிறத்த மீறல் ஆகாதா?

அல்லது சாதாரண ஒருவரின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் இது எந்தளவுக்கு அறிவுடமையானது? சொல்லும் ஒன்றை நிறைவேற்றக்கூடிய வலு அல்லது சட்டபூர்வத்தன்மை அதைச் சொல்பரவுக்கு இருக்க வேண்டாமா? ஏனெனில் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் படி, ஒரு தரப்பினர் மறுதரப்பினரின் சீருடைகளுடனோ, ஆயுதங்களுடனோ நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது.

**இது பற்றிய செய்திகளே இன்று ஊடகங்களை நிறைக்கத் தொடங்கி விட்டன. மக்களின் அன்றாட உரையாடல் இதைப்பற்றியதாகவே இருக்கிறது. வயிறு புகையும் போது வேறு எதைப் பற்றி ஐயா எண்ண முடியும்? எனவே, இதிலிருந்து தப்பிக் கொள்ள இதனையும் விடப் பலமாக மக்களை உலுக்கவல்ல ஒரு அரசியல் குண்டினைப் போடவேண்டிய நிர்ப்பந்தம் அம்மையாருக்கு ஏற்பட்டு விட்டது.**

அப்படியாயின் யுத்த நிறுத்தத்தைக் கைவிடுவதற்குச் சந்திரிகா துணிந்து விட்டாரா? அதன் அடுத்த கட்ட வளர்ச்சியான யுத்தத்தை எதிர் கொள்வதற்கு அவர் தயாராகி விட்டாரா? இந்தக் கேள்விகள் எழுவது இயல்பானது.

இவ்வாறான ஒரு எச்சரிக்கையை விடுப்பதற்கு, அதாவது படைகளை நுழைப்பதற்கு அவர் சேர்ந்து கொண்ட இடமான கிழக்கில், முரளிதரனின் வெளியேற்றத்தால் புலிகளின் பலம் குறைந்திருக்கிறது என்ற இராணுவ புலனாய்வு ரீதியான ஒரு அவதானிப்பும் தூண்டுகோலாயிருந்திருக்கலாம். ஏனெனில் சந்திரிகா இதற்கு முன்னரும் இவ்வாறான புலனாய்வுத் தகவல்களை நம்பிச் சில தீர்மானங்களை அவசரப்பட்டு எடுத்துவிட்டுப் பின்னர் அதற்காக வருந்தியிருக்கிறார். வருந்திக்கொண்டுமிருக்கிறார்.

அவரது இந்தக் கூற்றுக்கான தகவல் வழங்கலாக சிறீலங்காவின் இராணுவ புலனாய்வுத் துறையினரும் அவர்களின் கையாளுகைக்குள் சிக்கியிருக்கும் சிலரும் இணைந்து 20ம் திகதி சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் வைத்து நடாத்திய கிளைமோர் தாக்குதல் கூட ஒரு போர் பிரகடனத்தின் கூறாக கொள்ளக்கூடியது தான்.

ஏனெனில் அப்பகுதியில் நடைபெறும் தாக்குதல்களுக்காக புலிகளின் பகுதிகளுக்குள் சந்திரிகா படைகளை அனுப்ப முடியுமானால், அங்கு வைத்து புலிகளின் தலைவர்கள் மீது நடாத்தப்படும் தாக்குதல்களுக்காக புலிகள் எங்கு படைகளை அனுப்புவது என்ற கேள்வி தானாகவே எழுகின்றது. அல்லவா? 23-1வது படைத்தலைமையகம் அமைந்துள்ள கரடிக்குளத்திற்கா? 55-2 வது படைத் தலமையகமான வாழைச்சேனை காகித ஆலைக்கா? 23-2வது படைத் தலைமையகமான மட்டக்களப்பு வெபர் அரங்குக்கா? அல்லது 23வது படையணி தலைமையகமான மின்னேரியாவுக்கா? எங்கு புலிகளின் படையணிகள் அணிவகுத்து அனுப்பப்படல் வேண்டும்?

உண்மையில் இவை அனைத்துமே சாரமற்ற பேச்சுக்களாகும். சந்திரிகாவின் இக்கூற்றின் அடியாளத்தை புரிந்து கொள்ள நாம் ஒரு தடவை அமெரிக்காவுக்கு சென்று வருவோம்.

அண்மையில் அமெரிக்க நிதிநிறுவனங்கள் மீது அல்-குவைதா தாக்குதல் நடாத்த இருப்பதாகவும், அமெரிக்க அரசுத்தலைவர் தேர்தலுக்கு முன்பாக இது நடாத்தப்படக் கூடுமெனவும் புலனாய்வுத் தகவலை மேற்கோள்காட்டி அரசு அறிவித்தது. இரண்டாம் பட்ச உச்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. செம்மஞ்சள் வண்ணக்குறியீடு (Orange alert) வழங்கப்பட்டது. பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்ட அல்குவைதா இயக்கக் கணினி நிபுணரின் கணினியிலிருந்து பெறப்பட்ட தகவலே இதற்கு ஆதாரமாகக் காட்டப்பட்டன.

ஆனால் இந்தச் செயற்பாடுகள் அனைத்துமே அரசியல் உள்நோக்கம் கொண்டவை எனப் பலத்த கண்டனத்தைப் பெற்றுள்ளன. ஈராக்கிலும் ஆப்கானிலும் கண்டன ஆய்வுகளும் அமெரிக்க ஊடகங்களை நிறைந்திருக்கும் போக்கை மாற்றுவதற்கான ஒரு 'குடியரசுக் கட்சி அரசியல் உத்தியாக அமெரிக்கா பயங்கரவாத அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கிறது, என்ற புலனாய்வுத் தகவல்' என கண்டனக்காரர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இப்போது அமெரிக்க ஊடகங்களில் பயங்கரவாத அச்சுறுத்தல் பற்றிய தகவல்களும் செய்திகளுமே பெருமளவு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளன.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

சுஜி ஜுவல்லரி SUJI JEWELLERY

சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004

தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜி ஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்க நகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.

Neuengass - Passage 3, 3011 Bern Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02


# கினியா நாட்டில் ஆட்சியை கவிழ்க்க சதி திட்டம்!

## இங்கிலாந்து முன்னாள் பிரதமர் மார்கரெட் தட்சரின் மகன் கைது

(29.08.04)

கினியா நாட்டில் ஆட்சியை கவிழ்க்க சதி திட்டம் தீட்டியதாக இங்கிலாந்து முன்னாள் பிரதமர் மார்கரெட் தட்சரின் மகன் மார்க் தாட்சர் கைது செய்யப்பட்டார். இங்கிலாந்து முன்னாள் பிரதமர் மார்கரெட் தட்சர் 1979 முதல் 1990 வரை பிரதமராக இருந்தார். இவருடைய மகன் மார்க் தட்சர் பிரபல தொழில் அதிபர். கடந்த 14 ஆண்டுகளாக மார்க் தட்சர் தென் ஆபிரிக்காவில் உள்ள கேப்டவுன் நகரில் வசித்து வருகிறார். அங்கு நட்சத்திர விடுதிகள் உள்பட ஏராளமான நிறுவனங்களை நடத்தி வருகிறார்.


இந்த நிலையில் ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள கினியா நாட்டில் புரட்சி ஏற்படுத்த முயன்றதாக மார்க் தட்சர் மீது புகார் கூறப்பட்டது. இதனை தொடர்ந்து கடந்த 25ம் திகதி அதிகாலை இரகசிய போலீசார் கேப்டவுனில் உள்ள மார்க் தட்சர் வீட்டில் சோதனை நடத்தினார்கள். அவருக்கும், புரட்சி இயக்கத்துக்கும் தொடர்பு இருப்பதற்கான ஆவணங்கள் சிக்கின. இதனையடுத்து மார்க் தட்சரை போலீசார் கைது செய்தனர். அமெரிக்காவிற்கு செல்வதற்கு தயாராகிக் கொண்டிருந்தவேளையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



கினியா நாட்டில் ஆட்சியை கவிழ்க்க சதி திட்டம் தீட்டியதாகவும், அதற்கு பண உதவி செய்ததாகவும் எழுந்த புகாரை தொடர்ந்து மார்க் தாட்சர் கைது செய்யப்பட்டு இருப்பதாக உயர் போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கினியா எண்ணை வளம்மிக்க நாடு ஆகும். அங்கு தீடோரோ ஒபியாங் நெருமா ஜனாதிபதியாக இருக்கிறார். இவரது ஆட்சிக்கு எதிராகத்தான் கூலிப் படையை கொண்டு புரட்சி நடத்த சதி திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த முன்னாள் அதிகாரி முக்கிய புள்ளியாக செயல்பட்டிருக்கிறார். அந்த அதிகாரி உள்பட 70 பேர் ஜிம்பாவே நாட்டில் ஏற்கனவே பிடிபட்டு விட்டார்கள்.

அந்த அதிகாரியுடன் மார்க் தாட்சர் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பது விசாரணையில் தெரிய வந்தது. மேலும் பிடிபட்ட இந்த 70 பேரில் ஒருவன் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில், ``புரட்சி நடத்துவதற்கு நிறைய பண உதவி செய்வதாக மார்க் தாட்சர் உறுதி அளித்திருந்தார்" என்று தெரிவித்து இருந்தான். மேற்கண்ட புகார்களின் அடிப்படையிலேயே மார்க் தாட்சர் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

# அத்வானி கொடுத்த மனுவை பிரதமர் வாங்க மறுப்பு



அத்வானி கொடுத்த மனுவை வாங்க, பிரதமர் மன்மோகன்சிங் மறுத்து விட்டார். பாரதீய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு, யஷ்வந்த்சின்கா, சுஷ்மா சுவராஜ், வி.கே. மல்கோத்ரா, தேசிய ஜனநாயக கூட்டணி ஒருங்கிணைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர் எதிர்க்கட்சி தலைவர் அத்வானி தலைமையில், பிரதமர் அலுவலகத்துக்கு சென்று பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்தனர்.

அப்போது அவர்கள் மனு ஒன்றை பிரதமரிடம் கொடுத்தார்கள். அதை வாங்க மன்மோகன்சிங் மறுத்து விட்டார். மனுவை பிரதமர் வாங்காததால், உடனே தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்கள், பிரதமர் அலுவலகத்தில் இருந்து வெளியேறினார்கள்.

மனுவை பிரதமர் வாங்க மறுத்துவிட்டது பற்றி தேசிய ஜனநாயக கூட்டணி அனைத்து தலைவர்களுக்கும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், பாராளுமன்றத்தில் நிறைவேற்றபடவுள்ள நிதி மசோதா தொடர்பான சில ஆலோசனைகள், இந்த மனுவில் இடம் பெற்று இருந்தது. மேலும் சேவை வரி, நன்கொடை வரி உள்பட பல்வேறு பொருள் பற்றியும் தங்கள் ஆலோசனைகளை தெரிவித்து இருந்தனர், என்றார்.

இதற்கிடையில் இந்த பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டதாக அத்வானி கூறியிருக்கிறார். பிரதமர் மன்மோகன்சிங் அவமரியாதையாக நடந்து கொண்டார் என்ற பிரச்சினை இத்துடன் முடிந்துவிட்டது. ஆனால் எதிர்க்கட்சிகளுடன் உறவை வளர்த்துக்கொள்வது அவசியம் ஆகும். அது மத்திய அரசின் கடமை.

பிரதமரை சந்திக்க சென்ற தலைவர்கள் 7 பேருமே அது போன்ற ஒரு நிகழ்வை ஒரு போதும் சந்தித்தது இல்லை. மன்மோகன்சிங் பிரதமர் பதவி ஏற்றபோதுகூட அவரை நான் மனதார பாராட்டினேன். முன்னாள் பிரதமர் வாஜ்பாயிடம் மன்மோகன்சிங்கை சந்தித்தபோது நடந்த தவற்றை ஜஸ்வந்த்சிங் தெரிவித்தபோது அவர், ``நான் அங்கு இல்லாதது நல்லதாகப் போய்விட்டது. கடவுளுக்கு நன்றி" என்று தெரிவித்து இருக்கிறார்.

# அமெரிக்காவில் ஓடும் பண மீற்றர்!





அமெரிக்காவின் அதிபர் தேர்தல் பலமாகச் சூடுபிடித்துள்ளது. இரு அணிகளும் ஒன்றைமாறி ஒன்று குறைசொல்வதில் போட்டியாக செயற்படுகின்றன. தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய விடயமாக ஈராக் போரே முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளது. ஈராக்கில் பெற்றுள்ள வெற்றியை ஜோர்ஜ் புஷ் பறைசாற்ற, எதிரணி வேட்பாளர் ஹெறியோ ஈராக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்காக நிமிடத்திற்கு நிமிடம் செலவிடப்படும் பணத்தை மக்கள் பார்வைக்கு வைத்துள்ளார்.


மணிக் கூட்டினை விட வேமாக ஓடிக்கொண்டிருக்கும் இந்த பண மீற்றரில் நாளொன்றுக்கு 177 மில்லியன் டொலர் அதிகரிக்கின்றது. மணித்தியாலத்திற்கு 7.4 மில்லியன் டொலர், நிமிடத்திற்கு 122,820 டொலர்கள் அதிகரிக்கின்றது. இம் மணி மீற்றர் பார்வைக்கு வைக்கப் பட்டபோது 134.5 பில்லியன் டொலர்களில் ஆரம்பித்தது. இப்போது 200 பில்லியனைத் தொட்டுவிட்டது.

# ஈராக் போர் தவறு செய்து விட்டேன் – புஷ்

ஈராக்கில் சதாம் உசேன் மீதான வெற்றிக்குப் பிறகான நிலைமையைக் கணிப்பதில் தவறு செய்து விட்டேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஒப்புக்கொண்டார். ஈராக் போர் பற்றி அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுக்கு புஷ் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, சதாம் உசேன் மீதான வெற்றியால் ஏற்பட்ட பக்க விளைவு தான் 17 மாத கால ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி. இந்த இடத்தில் நான் தவறாக கணக்குப் போட்டுவிட்டேன். சதாம் உசேனை அகற்றிய பிறகு, ஏற்படப்போகும் நிலைமை என்னவாக இருக்கும் என்பதில் என் கணிப்பு தவறிவிட்டது. நிலைமைக்கு ஏற்ப நாங்கள் சரி செய்து கொண்டு போகிறோம். இவ்வாறு புஷ் கூறினார்.

ஈராக் போர் தொடங்கியது முதல் இதுவரை 969 அமெரிக்க படையினர் இறந்துள்ளனர். அவர்களில் 828 பேர் கடந்த ஆண்டு ஏப்ரல் 30ம் திகதிக்குப் பிறகு பலியானார்கள். 6 ஆயிரத்து 690 படையினர் காயம் அடைந்துள்ளனர். அணு ஆயுதம் தயாரிக்க முற்பட்டு இருக்கும் வட கொரியாவுக்கும், ஈரானுக்கும் அவசரப்பட்டு கெடு எதுவும் விதிக்கப் போவது இல்லை என்றும் புஷ் கூறி இருக்கிறார். இராஜதந்திர ரீதியில் அந்த நாடுகள் வற்புறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.





பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் அவர்களை மகாத்மா காந்தியின் பேரன் மோகன்தாஸ் காந்தி சந்தித்துப் பேசியுள்ளார். அத்துடன் பாலஸ்தீனப் பிரதமர் அகமட் கீரியாவையும் இவர் சந்தித்து பேசியுள்ளார். கடந்த 24ம் திகதி இடம்பெற்ற இச்சந்திப்பு தொடர்பான நிழற்படங்களை பாலஸ்தீன அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

# கலைப் பூங்காவனத்திற்கோர் பெருவிழா

`கலைப்பூங்காவனம்' கனகசபைக்கு கட்டாயம் ஒரு பாராட்டுவிழா எடுக்கவேணுமெண்டு சொதிவாய் சொக்கன் முதலில் சொன்னபோது அதனை ஒரு பகிடியாகத்தான் நினைத்தார் அரியகுட்டியர்.

ஆனால் புலம்பெயர் மண்ணில் ஒருவயதுக் குழந்தையின் பிறந்தநாளுக்கே தங்கத்தில் கத்தி செய்து கேக் வெட்டப் பெற்றோர் அடம்பிடிக்கும் இந்த நாளில் ஏன் கனகசபையருக்கு ஒரு விழா எடுக்கக் கூடாதென சொக்கன் ஆணித்தரமாகக் கூற அதனை விறகுதலை விசுவமும் பேய்க்குட்டியும் ஆமோதித்தவேளைதான் சொக்கன் இந்தத் திட்டத்தை பகிடியாகச் சொல்லவில்லை உண்மையாகவே சொல்லியிருக்கிறான் என்பது அவரது மண்டையில் உறைத்தது.

யார் இந்தக் கலைப்பூங்காவனம் கனகசபை என்பதை அறிவதற்காக ஒரு .....டிறிங்..... (இதனைப் `பிளாஷ் பாக்' என்றும் சொல்லலாம்)

கனகசபையர் அரியகுட்டியரின் ஊரில் பிறக்காவிடினும் அவரது மூன்றாம் வீட்டு முத்தழகுச் செல்வியைக் கலியாணம் கட்டியபின்னர் குடுத்த சீதன வீட்டிலேயே செற்றிலானவர். 35 வருடங்களுக்கு முன்னர் சில இந்திய அரசியல்வாதிகளின் மன வறட்சியைப்போல அரியகுட்டியரின் ஊரும் காண்டாவன வெக்கையில் தவித்தது. தண்ணிக்குப் பஞ்சமான ஊர் எண்டதால் முத்தழகுச் செல்வியை பெண்ணெடுக்க பலரும் தயங்கியபோதுதான் பாரதிராஜாவின் படக் கதாநாயகன் போல வந்து முத்தழகியைக் கரம்பிடித்தவர் இந்தக் கனகசபையர். அன்றிலிருந்து கனகசபையருக்கு ஊரில் ஒரு மதிப்பு. கனகசபையரும் புகுந்த ஊர்தானே என சோம்பி இருக்கவில்லை.

நல்லதங்காள் வாசிகசாலை விழாவில் பாட்டுப்பாடுவதிலிருந்து காத்தார் மடை வைக்கும் போது உடுக்கைத் தட்டி உருக்கொண்டு `ஆச்சி.... வாளைமீன் பொரியலெல்லோ.... அம்மா தாயே....' என மடக்கி வைத்த சோத்துக்குவியலை பார்த்தும் பாராமலும் பாடுவது வரையிலான ஊர் நல்லது கெட்டதுகளில் ஓடியோடி பங்குகொண்டவர்.

ஊரில் நடக்கும் சின்னமேளக் கச்சேரிகளுக்கும் அறிவிப்பாளர் அவரேதான். ஒருமுறை இந்திரலீலா சின்னமேளக் கோஷ்டி வரப் பிந்தியபோது சனங்களைக் கலைஞ்சுபோக விடாமல் கனகசபை செய்த அறிவிப்பின் ஈர்ப்பினை நினைத்தால் இப்பொழுதும் அரியகுட்டியர் குழாமிற்குப் புல்லரிக்கும். அந்தக் காலத்தில் அரியகுட்டியர் குழாம் விடலைகளாக இருந்து இப்போது சம்சாரிகள் ஆனாலும், இன்னமும்தான் அதை மறந்துபோகவில்லை.

பூங்காவனத் திருவிழாவில் அன்றைக்கு அவர் செய்த அறிவிப்பின் வேகம்தான் இன்றைக்கு அவருக்கு கலைப்பூங்காவனம் பட்டத்தைத் தேடிக்கொடுத்தது என்று சொல்லிப் பெருமைப்படுபவர்களும் இருக்கிறார்கள். இல்லை இது அவர் தனக்குத் தானே வைச்ச பட்டமென சில அல்சர் குணம் குறியுள்ளவர்களும் (வயிற்றெரிச்சல்) சொல்லித் திரிவதும் உண்டு.

எது எப்படியோ, சண்டையை இழுத்தெடுக்க விரும்பும் சந்திரிகா கூட அரியகுட்டியர் குழாமும் `கலைப்பூங்காவனம்' கனகசபைக்கு விழா எடுத்தே தீரவேண்டுமென இறுதிமுடிவு எடுத்துவிட்டது.

கொஞ்சம் நீளமாக இருந்தாலும் விழாவிற்கான தலைப்பினைக்கூட `அல்வா' அழகேசு வைத்துவிட்டான். `கண்டம் விட்டு கண்டம் வந்த கலைப் பூங்காவிற்கோர் பெருவிழா' இதுதான் தலைப்பு. அழகேசுவின் தலைப்பில் தமிழ் கெ(ா)ஞ்சி விளையாடுவதாக கூறிமகிழ்ந்த அரியகுட்டியர் இந்த விழாத் திட்டத்தை யாழ்குடாவிற்கு வருகைதரும் வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளின் செய்தி மறைப்புப் போல இரகசியமாக வைக்கும்படியும் சகாக்களைக் கேட்டுக்கொண்டார்.

வெளியில் என்னதான் இரகசியம் காக்கச் சொன்னாலும் அரியகுட்டியருக்கு வீட்டிற்குள்ளே அதைச் செய்யமுடியுமா என்ன? மாருதப்புரவீக சுந்தரியிடம் புகலிட தமிழ் வானொலிகளில் வரும் தேனீரகடை விளம்பரம்போல கடகடவென... சுடச்சுட ஒப்புவித்துவிட்டார். மாருதப்புரவீக சுந்தரியும் இந்தத் திட்டத்தை எதிர்க்கவில்லை. அதற்கும் காரணங்கள் இருக்கின்றன.

1. தான் கலியாணம் கட்டி முதல்முதலாக அரியகுட்டியர் வீட்டிற்கு கால் மாறப் போனபோது (திரும்பியதும் அதே காலோடுதானைய்யா) ஆலாத்தி எடுத்த பொம்பிளைகளுள் முத்தழகுச் செல்வியும் ஒன்றென்பதால் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுபோல இந்த ஆலாத்திக் கடனை இந்த விழா எடுப்பு மூலமாகவேனும் கழிக்கவேண்டும் என்பது.

2. தற்பொழுது புதிதாக வந்ததாகக் கூறப்படும் வகுல்ராஜா சாறியை உடுத்திக் கொண்டுபோக இது நல்ல சந்தர்ப்பம் என்பது.

பேய்க்குட்டி இப்பிடிப்பட்ட வேலைகள் செய்வதற்காகவே இந்தப் பூமியில் படைக்கப்பட்டவனோ என்னவோ. அந்தமாதிரி பேயடிப் பதுபோல சுழன்று சுழன்று வேலைசெய்தான். ஊராக்களைத் தேடிப்பிடித்து காசு சேர்ப்பதில் இருந்து பலகாரங்கள் போட்டுக்குடுக்க பேப்பர் தட்டுக்கள் ஒழுங்குபடுத்துவது வரையிலான எல்லாக் காரியங்களையும் அவன் செய்து முடித்த வேகம் அரியகுட்டியரின் மனதில் பால்வார்த்தது. அதற்காக `சொதிவாய்' சொக்கன், `புளுகு' மணியம், `விறகுதலை' விசுவம், `அல்வா' அழகேசு ஆகியோரை வெங்காயங்கள் என நினைத்துவிடக் கூடாது. அவர்களும் தங்கள் பங்கினைத் திறம்படவே செய்தனர்.

எல்லா ஏற்பாடுகளும் ஏறக்குறையச் சரி. கதிரைகள் உடனான மண்டபம் ஓ.கே. நோட்டீஸ் அடிக்கப்பட்டது டபிள் ஓ.கே. றோல்ஸ், வடை போன்ற பண்ட பணியாரங்களுக்கும் ஓடர்குடுத்தாயிற்று. வாழ்த்துரை, ஆசியுரை நீட்டுரை, நெடித்துரை என பற்பலவான ஆசிகளை வழங்குவதற்கு மைக்கைக் கண்டால் பேசத் தயாராக இருப்பவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டாயிற்று. `கறாபுறா' கதிர்வேலுவின் ஒலியமைப்பிற்கும் சொல்லியாயிற்று. கதிர்வேலு சுமார் 50, 60 விழாக்களுக்குமேல் ஒலியமைப்புச் செய்திருந்தாலும் அவனின் ஒலியமைப்பில் கூடுதலாக வருவது என்னவோ கறாபுறாச் சத்தம் ஆகையால் அவனுடன் இந்த கறாபுறாப் பட்டம் ஒட்டிக்கொண்டுவிட்டதைச் சொல்லிக்கொண்டுதான் தெரியவேண்டியதில்லை.

ஆனாலும் ஊர்க்காரனான அவனைத் தள்ளி வைத்துவிட்டு வேறு ஒருவரை ஒலியமைப்புக்குப் பிடிக்க அரியகுட்டியருக்கு மனம் வரவில்லை.

இப்படியாக எல்லாவற்றையும் அரியகுட்டியரின் ஒப்புதலோடு செய்த பேய்க்குட்டி சுதிபானப் போத்தல்களுக்கும் அதற்கு ரேஸ்ராக குடல்க்கறியையும் ஒழுங்கு செய்திருப்பதை மட்டும் அரியகுட்டியருக்கு மறைத்துவிட்டான். விழா முடிந்ததும் விழாவிற்காகப் பாடுபட்டவர்களுக்கு தனது வாகனத்தை ஒரு மினி பார் ஆக்கி ஒரு குட்டிப் பார்ட்டி குடுத்து மரியாதை செய்யவேண்டும் என்பது அவனின் திட்டம்.

❑ ❑ ❑ ❑ ❑ ❑ ❑ ❑



— பிறேம் —

தற்பொழுது பிரபலமான கிச்சா....முச்சா... கீரைக்கட்டு...பிரித்துப் பார்த்தால் ரவிக்கைப்பட்டு மச்சா....மிச்சா....மாமன் மக.. மயக்கப் பார்க்கிறான்.... காமன் பய.... என்ற பாடல் கறாபுறா மணியத்தின் பொக்சில் அலற `கலைப்பூஞ்சணம்' சீ.. சீ.. `கலைப்பூங்காவனம்' கனகசபையரின் பாராட்டுவிழா மெல்ல மெல்ல களைகட்டியது. கனகசபையரோ தான் அப்படி என்ன செய்துவிட்டேன் எதற்கு இந்த விழா என அடிமுடி தேடி முடிக்காத பிரம்மதேவனின் நான்கு தலைக் குழப்பத்துடன் கோட், சூட் சகிதம் காணப்பட்டார். துணைவி முத்தழகுச் செல்வியும் பண்டத்தரிப்பு பேக்கறியின் புகழ்பெற்ற வட்டப் பாண்போன்று உச்சியில் கொண்டைபோட்டு வசந்தமாளிகை வாணிசிறியை நினைவுபடுத்தும் விதத்தில் காட்சியளிக்க மாருதப்புரவீகசுந்தரியும் லைலஜோதிகாவும் முத்தழகுச் செல்வியின் எடுப்புக்கு சற்றும் குறையாத விதத்தில் `வகுல்ராஜா' சாறியிலும் `கில்லி' சுரிதாருடனும் காணப்பட்டனர்.

வதந்தி பரவும் வேகம் பெரிதா? இல்லை இந்த வாசம் பரவும் வேகம் பெரிதா? எனச் சவால் விடும் வகையில் றோல்ஸ், வடை வாசனை அந்த மண்டபத்தை ஆக்கிரமித்து சிலரது வயிற்றைக்கூடக் கிள்ள வைத்தது.

விழா தொடங்குவதற்கு இன்னும் கொஞ்சநேரம் இருக்கையில் பேய்க்குட்டி ஒரு பேய்த்தனமான காரியத்தைச் செய்துவிட்டார். விழா முடிவதற்கு முதலே தனது காரில் வைத்து சிலருக்கு சுதிபானத்தை வார்த்துக்கொடுத்ததே அவன் செய்த மடைத்தனம்.

இந்த பான வழங்கல் விபரம் எதுவும் தெரியாத அரியகுட்டியரோ விழாவிற்குத் தலைமை தாங்கும் ரென்சனில் இருந்தார். மணவறையில் இருந்ததற்குப் பின்னர் இப்போதுதான் இரண்டாந்தரம் ஒரு மேடை ஏறப்போகிறார் அல்லவா..!

ஒரு கட்ட ரென்சனில் விழா என்பதையும் மறந்து நகங்களைக் கூடக் கடித்துத் துப்ப முனைந்தவரை முன்வரிசையில் இருந்த மாருதப்புரவீக சுந்தரியின் பார்வை அகோரம்தான் அதைக் கட்டுப்படுத்தியது.

தான் பேசப்போவது ஏற்கனவே எழுதப்பட்டு பேப்பர் துண்டில் இருந்தாலும் வரிகளை மாற்றிப் படித்துத் தொலைக்கக் கூடாது என்பதே அவரது கவலை.

வழமையான ஆரம்ப நிகழ்வுகளுடன் விழா தொடங்கியது. அரியகுட்டியர் தொண்டையைச் செருமியபடி எழுந்து மைக்கிற்கு முன்னால் நிற்க சொல்லிவைத்தாற்போல கறாபுறா கதிர்வேலுவின் மைக் ஊளையிடத் தொடங்கியது.

பாய்ந்து வந்த கதிர்வேலு எதைஎதையோ திருக ஊளைச் சத்தம் கொஞ்சம் குறைந்தது. முப்பதாவது தடவையாகவும் `மைக் ரெஸ்ரிங்....1...2...3' சொல்லி மீண்டும் மைக்கை அரியகுட்டியர்முன் செருகினான். இந்த ஊளைச்சத்தம் தந்த பதட்டமோ என்னவோ தானே விழாத் தலைவர் என்பதையும் மறந்த அரியகுட்டியர் கனம் தலைவர் அவர்களே என ஆரம்பித்தும்விட்டார். பின்னர் ஒருவாறு சுதாகரித்து பேசுவதற்கு முயன்றார்.

ஒரு வசனத்தைக்கூட அவர் பேசியிருக்கமாட்டார் மண்டபத்தின் பின் வரிசையில் இருந்து ஒரு வில்லங்கமான குரல் பேய்க்குட்டியின் சுதிபான உபயத்தில் கொன்னை தட்டத்தட்ட எழுந்தது. `விழா நடத்த முன்னம் இந்தச் செலவுகளுக்கான கணக்கு எங்களுக்குத் தெரியவேணும்' என்பதே அவரது கொன்னையில் கிடைத்த உண்மை.

`ஓமோம் அது கட்டாயம் தெரியத்தான் வேணும்' இன்னொரு முடாக் குடிமகனும் ஆதரவுக்குரல் எழுப்பினார். அரியகுட்டியர் இந்தக் குடிமக்களின் குரலை எதிர்பார்த்திருக்கவேயில்லை. பேய்க் குட்டிக்கோ `வார்த்த கிளான் கம்பேல் மார்பில் பாய்வது' போல் இருந்தது. அல்வா அழகேசு ஓடிவந்து இவர்களை அடக்க முயன்றார். கணக்கெல்லாம் விழா முடிந்ததும் தரலாம் எனச் சொல்லி அவர்களை அமர்த்தப் பார்த்தான். அவர்கள் கேட்கவில்லை.

மாறாக `நீயும் ஊர் வாசிகசாலை பழைய பேப்பர் வித்த காசிற்கு அல்வா குடுத்தனியெல்லே' பெரிசாக் கதைக்க வந்திட்டாய் எனக் கூறி அல்வாவிற்கே அல்வா கொடுத்தனர்.

இப்போது கணக்குக் கேட்கும் குடிமக்களும் அதற்குப் பதில் சொல்லும் விழா மக்களுமாக விழா மண்டபம் ஐம்பதிற்கு ஐம்பதாகி தள்ளுமுள்ளுப் பட்டது. பலகாரத் தட்டுக்கள் பறக்கும் தட்டுகளாகி ஆங்காங்கே சிலரது மண்டைகளைப் பதம் பார்த்தன. வளவள ஏன் ஒரே வரியில் சொன்னால் நிலைமை சிறீலங்கா நாடாளுமன்ற விவாதம் போலானது அவ்வளவுதான்.

யாருக்கோ அடியும் விழுந்திருக்கவேண்டும். எழுந்த அலறல் அதை உறுதிப்படுத்தியது. கறாபுறா மணியத்தின் கருவிகளும் சுக்குநூறாயின. `கலைப்பூங்காவனம்' கனகசபையோ தனக்கான கலைவிழா களேபர விழாவாக மாறுவதைக்கண்டு பயந்து பாதுகாப்புத்தேடி கழிவறைப் பக்கம் ஓடினார். அரியகுட்டியரோ எந்தப் பக்கம் ஓடலாம் என்பதை கேட்பதற்காக மாருதப்புரவீகசுந்தரியை நோக்கி ஓடினார்.

இந்தக் கலவரங்களுக்கிடையில் இப்போதுதான் யாரோ ஒரு புண்ணியவான் தனது செல்லிடப்பேசியினூடாக பொலிசாருக்கும், தீயணைப்புப் பிரிவினருக்குமான எண்களை அழுத்துகிறார்....

# உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?

## தலைமுடி தொடர்பான வேறேதும் பிரச்சினைகளா ?

## இன்றே உபயோகியுங்கள் NATURINA®

**இது ஓர் புதுமையான, இயற்கை மூலிகைகளைக்கொண்ட ஓர் துரித நிவாரணி !**

* Naturina வின் புதிய தயாரிப்புக்கள். முன்னரைவிட உயர்ந்த தரத்தில் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன.
* தலைமுடிகளைப் பராமரிப்பதில் கடந்த 5 வருடங்களாக ஐரோப்பாவின் முதல்தர தயாரிப்பாக விளங்குவது Naturina தயாரிப்புக்களே!
* தலைமுடி உதிர்வு, முடி மெல்லியதாக மாறுதல், முடியில் ஏற்படும் அழுக்கு, பொடுகு போன்றவை அறவே நீக்கி தலைமுடியை நன்றாக வளரச்செய்கிறது.
* முற்றிலும் இயற்கையானது!
* பக்கவிளைவுகளற்றது.
* வேறுபட்ட வடிவங்களில் - மாறாத தரத்தில் உங்கள் தலைமுடிகளை பராமரிக்கச் சிறந்த ஓர் நிவாரணி - Naturina




**Naturina vital & beautiful**

* *Naturina வின் புத்தம்புதிய அறிமுகம்!*
* *உங்களது முகத்தில் அல்லது தோலில் கரும்புள்ளிகள் ஏதும் காணப்படுகின்றனவா?*
* *இன்றே Naturina pigment Bleachinng emulsion ஐ உபயோகியுங்கள்!*
* *இயற்கையான மூலிகைகளைக் கொண்டது, பக்க விளைவுகள் அற்றது!*
* *கரும்புள்ளிகள், சுருக்கங்கள் என்பவற்றை இல்லாமற் செய்து முகத்தை அழகுறச் செய்ய ஓர் சிறந்த நிவாரணி.,*




**குறிப்பு:** *ஐரோப்பாவில் வாழும் யாவரும் Naturina தயாரிப்புக்களை விற்பனை செய்ய முடியும். நீங்கள் Naturina தயாரிப்புக்களை விற்க விரும்பினால் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*


**Intercare Handels GmbH**

In der Fuchshoehle 4, 59069- Hamm- Germany
Tel: 0049 1805 915910 + 0049 2385 92080
Fax: 0049 1805 915920 + 0049 2385 920821
UK Order line 08 703501707
Internet: www.naturina.de

**தற்போது!**
**விசேட கழிவுகளும், பரிசில்களும் வழங்கப்படுகின்றன!!**



# INDIAN ASTROLOGERS FROM GENERATIONS





இந்தியாவில் பல தலைமுறைகளாக கைரேகை, முகநாடி எண்கணிதம், மாந்ரீகம், மருத்துவம் போன்ற துறைகளில் புகழ்பெற்று விளங்கும்

**பண்டிட் குமார சுவாமி அவர்கள்**
**பண்டிட் கிருஷ்ணா அவர்கள்**

பாரிஸ் மற்றும் ஜெர்மனி நகரங்களுக்கு வருகை தந்துள்ளனர்.
அம்பாளின் அருள்வாக்காலும் இவர்கள் தம் அனுபவத்தாலும் பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் எல்லா நன்மைகளும் பெற்று வாழ்க்கையில் வளம் பெற்றுள்ளனர்.

நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை ஆகிய முக்கால பலன்கள் தொழில், கல்வி, குடும்பம், திருமணம், குழந்தை பாக்கியம் மற்றும் உங்கள் பிரச்சனைகளை தெரியப்படுத்தி பரிகாரமும் கூறுகின்றனர்.

இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி சுவாமியை அணுகி வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற்று வாழுங்கள்.

*சுவாமிகளை அணுக வேண்டிய முகவரி*

*Mr. Pundit Krishna*
19 RUE CAIL, ESWARA, TAMIL ALAYAM
LA CHAPELLE 75010 Paris.
Métro: La Capelle, Gare du Nord
Port : 06 23 28 09 22
Tél: 01 53 26 59 21

*Mr. Pundit Kumar Swamy*
LINKAM ASIAN MARKT
ADLER STR 5
44137 DORTMUND
Tel : 01 60 99 21 38 68



கடல் உணவு வகைகளின் சுரங்கம்

# ஆராழி

## ARALI

உங்களுக்குத் தேவையான அனைத்து கடல் உணவு வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்

தாயகக் கடலின் சுவையுணவு சுமந்து புலம் பெயர்ந்து வந்ததோ இந்த ஆராழி!

**D.K.S.R. Asian Suppermarkt**
Lostex Plad 8E
Svendborg
5700 Denmark
004562216773

**Tiefkuhl Feinkost**
Kanal Str 27
67655 Kaisers lautern
00496313609655
00491776035859
00491797157501

**Top Fisch Markt**
26.Rue Derdonnet
75010 Paris
0033144720107
Mobil -0033660290550

**Asia Trade Center-Gmbh**
Sumpf Str 24
6300 ZUG (CH)
0041417404830
0041764183553 Aschok

**Norwood Mini Market**
31.Station Road
South Norwood
London
SE.25.5AH
Tel. 00442087718585
Mobil 00447958529816 -
00447795386837





# சிங்கள கடும்போக்கு இனவாதிகளின் சமாதானத்திற்கெதிரான ஒஸ்லோ மாநாடு படுதோல்வியடைந்ததேன் ?

தமிழ் மக்களுக்கு நியாயமானதும் கௌரவமானதுமான தெந்தவொரு தீர்வும் கிடைத்துவிடக்கூடாது என்பதில் சிங்கள ஆட்சியாளர்களும், சிங்கள இனவாதக் கட்சிகளும், கடும் போக்கு இனவாதிகளும் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வருகின்றனர். மேற்கூறப்பட்ட கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில், ஒஸ்லோவில் பௌத்த சிங்கள கடும்போக்காளர்களால் நோர்வேயின் சமாதான முன்னெடுப்பிற்கு எதிரான மாநாடு ஒன்று கடந்த வெள்ளியன்று (ஒகஸ்ட் 20) நடாத்தப்பட்டது. பல மாதங்களுக்கு முன்பிருந்தே பெரும் எடுப்புடன் இம்மாநாட் டிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை கவனிக்கத்தக்கது. (World Alliance For Peace in Sri Lanka -WAPS) "சிறீலங்காவின் அமைதிக்கான உலகக் கூட்டமைப்பு" என்ற புதிய சிங்கள அமைப்பு, தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தீவிரவாத முத்திரை குத்தும் இலக்கினை அடிப்படையாகக் கொண்டு, நோர்வேயின் சமாதான முன்னெடுப்பை விமர்சிக்கும் நோக்குடனேயே இம்மாநாட்டை நடாத்தியது. நோர்வே அரசாங்கத்தின் நெகிழ்வுப் போக்கினைப் புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கை களுக்குச் சாதாகமாகப் பயன்படுத்துகின்றனர் என்ற காட்டமான பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்து, பல வழிகளிலும் தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக இம்மாநாடு நடாத்தப்பட்டது.

மாநாடு நடைபெறுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் (ஒகஸ்ட் 16) "கிளஸ்ச கம்பன்" (klasse kampen) என்ற நோர்வேஜிய நாளிதழ், இம்மாநாடு நோர்வேயின் சமாதான முன்னெடுப்பினைக் கேள்விக்குள்ளாக்குவதோடு கடுமையாகத் தாக்கும் நோக்கம் கொண்டது என்ற செய்தியை வெளியிட் டிருந்தது. அதுமட்டுமல்லாமல், இது கடும்போக்காளர்களின் மாநாடென்றும் வர்ணித்திருந்தது.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த சமயத்துறைப் பேராசிரியரும் ஆய்வாளருமான பீற்றர் சாக் அவர்கள் 1970களிலிருந்து இலங்கைப் பிரச்சினையை அவதானித்து வருபவர். இது தொடர்பாக அவ்விதழுக்கு கருத்துத் தெரிவித்த பீற்றர் சாக், இம்மாநாட்டின் முக்கிய பேச்சாளர்களில் ஒருவரான சுசாந்த குணத்திலக பற்றி குறிப்பிடுகையில், தான் குணதிலகவைப் பல தடவைகள் சந்தித்துப் பேசியதாகவும், அவர் ஒரு கடும்போக்கு இனவாதி என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்றும் தெரிவித்தார். அத்தோடு இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான ஆழமான கருத்துக்களை யுடையவரும் சமூக-அரசியல் ஆய்வாளருமான நோர்வேஜியர் ஒய்வின் புக்லறூ அவர்களும் இம்மாநாடு, நோர்வேயின் சமாதான முன்னெடுப்பினை கடுமையாகத் தாக்கும் இலக்கைக் கொண்டது என்று கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒஸ்லோவில் இம்மாநாட்டிற்கான ஒத்துழைப்பினை வழங்கி, ஒழுங்குகளைச் செய்து கொடுத்த நோர்வேஜியர், 1997ல் வெளிநாட்டவர் ஒருவரைக் கொலை புரிந்த கொலை யாளி என்றும், மூளைக்குழப்பம் என்ற காரணத்தைக் காட்டி குறைந்த பட்ச தண்டனை அனுபவித்து வருபவர் என்ற தகவலும் மாநாடு ஆரம்பமாவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னர் வெளியாகியிருந்தது. நோர்வே மொழியில் வெளிவரும் "ஊத்துறூப்" (Utrop) என்ற இணைய இதழ் இச்செய் தியினை உறுதிப்படுத்தியிருந்தது.

இன்றைய காலகட்டமானது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு திருப்புமுனையான ஒரு காலகட்டம். சந்திரிகா வினதும் கதிர்காமரினதும் அப்பட்டமான பொய்ப்பரப் புரைகளையும் கபட நாடகங்களையும் மறுதலித்து, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் சர்வதேச மயப்பட்டுள்ள காலம் இது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை சர்வதேசம் புரிந்து கொள்ளத் தலைப்பட்டுள்ள காலம். அத்தோடு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப் பதற்கான விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற யதார்த்தத்தினையும் அனைத்துலக சமூகம் ஏற்றுக்கொள்கின்ற நிலைக்கு நகர்ந்துள்ளதை சிங்கள இனவாத சக்திகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக வரைபினை ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகம் வரவேற்றிருப்பது கூட கடும்போக்கு சக்திகளைக் கடுப்படைய வைத்துள்ளது.

எனவே, விடுதலைப் புலிகளைப் போர் வெறியர்களாகச் சித்தரித்து, புலிகள் போருக்கான தயார்ப்படுத்தல்களை முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றார்கள் என்ற தோற்றப் பாட்டை வெளிநாட்டு சமூகங்கள் மத்தியில் உருவாக்கி, சமாதான முயற்சியைச் சீர்குலைத்து, புலிகள் மீது வலிந்து போரினைத் திணிப்பதே இனவாத சக்திகளின் தலையாய நோக்கம் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

இம்மாநாட்டின் பின்னணியில் சிறீலங்காவின் அரசுத் தலைவர் சந்திரிகாவின் மறைமுக ஆதரவும் ஜே.வி.பி.யின் நேரடி ஆதரவும் இருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தமையும் கவனம் கொள்ளத்தக்கது. நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளை சந்திரிகா பல தடவைகள் கடுமையாக விமர்சித்தவர் என்பதையும், ஜே.வி.பி வெளிப்படையாகத் தொடர்ந்து நோர்வேயின் தலையீட்டினை எதிர்த்து வருவதையும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டமையையும், பிக்குகள் முன்னணியினர் நோர்வேயின் தேசியக்கொடியினை தீயிட்டு எரித்த நிகழ்வுகளையும் நாம் இத்தருணத்தில் மீட்டுப் பார்ப்பதன் மூலம் இம்மாநாட்டின் பின்னணிச் சக்திகளை இனங்காண முடியும்.

வெளிநாட்டு உளவு நிறுவனங்களுடன் தொடர்புடைய பிரித் தானிய, கனடிய, அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த சிங்கள இனவாதத்தின் ஆதரவாளர்கள் மூவர் இம்மாநாட்டில் கலந்து கொண்டு விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்ற சிங்கள கடும்போக்காளர்களின் குற்றச்சாட்டிற்கு வலுவூட்டும் வகையில் கருத்துரைத்தனர். இவர்களில் பிரித்தானியாவைச் சேர்ந்த போல் கரிஸ் என்பவர் சந்திரிகாவின் ஆலோசகராக இருந்து, ரணில் அரசாங்கத்தால் சிறீலங்காவிலிருந்து வெளியேற்றப்பட்டவர். கனடாவைச் சேர்ந்த ஸ்ருவாட் பெல் என்பவர் கனடாவில் வெளிவரும் நாசனல் போஸ்ட் இதழில், தமிழர்களைப் பயங்கர வாதிகளாகச் சித்தரித்துப் பல கட்டுரைகளை எழுதி வருபவர்.



ஈ.பி.டி.பி. சின்ன பாலாவின் மரணச் சடங்கில் உரையாற்றும் சிங்கள இனவாத அமைப்பான ஜே.வி.பி.செயலர் விமல் வீரவன்ச

இம்மாநாட்டு மண்டபத்தில் ஆரம் பத்தில் பதினைந்து வரையிலான நோர்வேஜியர்கள் காணப்பட்டார்கள். மாநாடு தொடங்கிய பின்னர் பலரும் மண்டபத்தை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து பத்திற்குட்பட்ட நோர்வேஜியர் களே அங்கு பார்வையாளர்களாக இருந்தனர். இதிலிருந்து இம்மாநாடு தனது நோக்கத்தில் படுதோல்வி அடைந்துள்ளது என்பதை உறுதிபடக் கூற முடியும். இருபது வரையிலான சிங்களவர்களும் தமிழ் தேசவிரோத குழுக்கள் சார்பாகச் சில தமிழர் களும் கலந்து கொண்டிருந்தனர்.

நோர்வே மீது கடுமையான விமர் சனங்களை முன்வைத்த சிங்கள கடும் போக்காளர்கள், நோர்வே புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு தீவிரவாதத்தை வளர்த்து வருகின்றது என்றும் குற்றம் சாட்டினர். நோர்வே அரச தரப்பு பிரதி நிதியாக கலந்து கொண்ட வெளிநாட் டமைச்சின் சிறப்பு ஆலோசகர் லீசா கோல்டனிடம் காரசாரமான கேள்வி களைத் தொடுத்து நோர்வேயைப் பலத்த விமர்சனத்திற்கு உட்படுத்தினர்.



நோர்வேயின் சமா தான சிறப்புத்தூதுவர் எரிக் சூல்கைம், பிரதி வெளிநாட்டமைச்சர் வீதார் கெல்கிசன் மற் றும் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தலைவர் துறொண்ட் புறுகொவ்டே ஆகியோர் மீது நாகரிகமற்ற முறை யிலான விமர்சனங் களையும் கட்டவிழ்த்து விட்டனர். அமைதிக் கான நோபல் பரிசினை வழங்கிவரும் நோர்வே, எதிர்காலத்தில் பயங்கரவாதத்திற்கான பரிசினை வழங்கும் நாடாக மாறும் என்ற பாணியில் பௌத்த சிங்கள அடிப்படைவாதச் சிந்தனையில் ஊறிய சாந்த கென்ன நாயக்கா என்ற பேச்சாளர் கேலி பேசினார்.

இம்மாநாட்டின் பேச்சாளர்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான பொய்களையும் புரட்டுக்களையுமே அவிழ்த்து விட்டிருந்தனர். "சிறீலங்கா அரச பயங்கரவாதம்" தமிழர் வாழ்வில் ஏற்படுத்திய அவலங்கள், கட்டவிழ்த்துவிட்ட ஈவிரக்கமற்ற படுகொலைகள் என்பன பற்றி இவர்களில் யாருமே வாயே திறக்கவில்லை. (கடும்போக்கு இனவாதிகளிடமிருந்து அதனை எதிர்பார்க்கக்கூடாதென்பது இன்னொரு விடயம்.)

மகிந்தபால என்ற சிங்கள புத்திஜீவி(?) பேசுகையில், இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை, யாழ்ப்பாணத் தமிழர் - மட்டக்களப்புத் தமிழர்- முஸ்லிம்கள்- மலையகத் தமிழர் என்ற பிரதேச வேறுபாடே இலங்கைப் பிரச்சனைக்கான அடிப்படை என்றும் சிங்களவர்கள் தமிழர் களுக்கெதிராக ஒரு கல்லைக்கூட தூக்கிப் போடவில்லை என்ற பாணியில் கண்ணீர் வடித்தார். தனிச்சிங்களச் சட்டம், கல்வித் தரப்படுத்தல் போன்ற தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்கும், நசுக்கும் நோக்கில் சிங்கள அரசுகளால் அமுல்படுத் தப்பட்ட சட்டங்களைக்கூட புதிய காரணங்களைக் கூறி நியாயப்படுத்த முனைந்தனர். மேற்குறிப்பிட்டவை சில உதார ணங்களே. இவர்கள் அதி உச்சக்கட்ட இனவாதத்தையும் தமது தமிழ் விரோதக் கருத்துக்களையும் கக்கி நின்றனர்.

தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாநாட்டு மண்டபத்திற்கு வெளியில் நின்று, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளையும் தமிழ் மக்கள் மீதான சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் உச்சக்கட்ட கொடுமைகளையும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமை மீறல்கள், படு கொலைகளின் கொடுமைகளை வெளிக்கொணரும் ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட ஆவணத்தொகுப்பு ஒன்றினையும் தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதத்தின் அகோரங்களை வெளிக்கொணரும் படங்கள் உள்ளடங்கிய இலத்திரனியல் தட்டு ஒன்றினையும் மாநாட்டில் கலந்து கொண்ட நோர்வேஜியர்களுக்கு வழங்கினர்.

இது (Media war) ஊடகப் போர்க் காலம். தமிழ் மக்களாகிய எமக்கு இங்கே பரப்புரை சார்ந்த இரண்டு சவால்கள் இருக் கின்றன. ஒன்று எமது மக்களின் விடுதலைக்கான போராட்டத்தின் நியாயப்பாடுகளை உலகிற்கு உணர்த்தும் பரப்புரைப் பணி. அடுத்த முக்கிய பணி முறியடிப்புப் பரப்புரைப்பணியாகும். சிங்கள இனவாதிகளால் இது போன்ற சமாதான விரோத மாநாடுகள் மேலும்? பல வெளிநாடுகளில் நடாத்தப்படவிருப்பதாக அறிய முடிகின்றது. பொய்ப்பரப்புரைகளை சிங்கள இனவாதி களால் மிக இலகுவாகக் கட்டவிழ்த்து விட முடிகின்ற தென்றால், உண்மையும் நியாயமும் எமது பக்கமிருக்கும் போது தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆதரவை எம்மால் ஏன் திரட்ட முடியாது என்ற கேள்வியை நாம் எமக்குள் எழுப்ப வேண்டும். எனவே, தமிழ் மக்கள் மத்தியில் மட்டும் விழிப்புணர்வுப் பரப்புரைகளை முடுக்கி விடுவதோடு எமது கடமை முடிந்து விடவில்லை என்பதை உலகத் தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து நாடு களிலும், அந்தந்த நாட்டு மக்களை நோக்கிய பரப்புரைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, செயல் முன்னெடுப்புக்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

**- ரூபன் சிவராஜா -**



# தமிழீழத்துக்காக ஆயுதமேந்தியவர்கள் தமிழீழத்தை எதிர்ப்பதேன்?



> …1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இத்தீர்மானத்தையொட்டிய `இழந்த தமிழரசை மீண்டும் அமைப்போம்' என்ற கோரிக்கையை முன்வைத்து தாயக மக்களின் ஆணையை தமிழர் கூட்டணி பெற்றிருந்தது. இன்று இந்த தமிழர் கூட்டணியின் தலைவர் என்று கூறிக்கொள்ளும் ஆனந்தசங்கரியார் கூட சிங்கள ஆதிக்க சக்திகளுக்குச் சாதகமாக தமிழீழப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்திக்கொண்டிருக்கிறார். இதுவும் புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத் தீர்வுகாண்பதற்கான முயற்சிகளுக்கு முன் இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை அமைக்கப்படவேண்டுமென்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. மக்களின் விருப்பமும் அதுவே.

இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை அமைப்புப் பற்றிய வரைபுத் திட்டமொன்றை விடுதலைப்புலிகள் தயாரித்து ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியிலிருந்தபோடு விடுதலைப்புலிகள் சமர்ப்பித்தனர். ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசீய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது சம்பந்தமாக விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தமுன்வந்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன் போரினால் பாதிக்கப்பட்ட, புலம்பெயர்ந்துவாழும் மக்களுக்கு புனர்வாழ்வும் புனரமைப்பும் வழங்குவதற்கு இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்று அவசியம் தேவை என்பதை பேச்சுக்களில் கலந்துகொண்ட இருதரப்பும் ஏற்றுக்கொண்டன.

இந்த இடைக்கால நிர்வாகசபை பற்றி ஜனாதிபதி சந்திரிகாவும் தமது தேர்தல் பிரசார சமயத்தில் குறிப்பிட்டிருந்ததும் இப்பேச்சுக்களில் சுட்டிக்காட்டப்பட்டது. இதே சமயம் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை ஈ.பி.டி.பி. யினர் செயலரளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் முன்னர் முன்வைத்திருந்தார்.

ரணிலின் அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சை ஆரம்பித்தபோது இந்த இடைக்கால நிர்வாக சபை யோசனையை ஏற்றுக்கொண்டது. இதன்படி இடைக்கால நிர்வாகசபை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை அரசாங்கம் தயாரித்து முன்வைத்தது. எந்த அதிகாரமுமில்லாத ஒரு சபையை அமைப்பதில் அர்த்தமில்லை என்று விடுதலைப்புலிகள் இதை நிராகரித்தனர்.

இதன்பின் மீண்டும் ஒரு திட்டத்தை அரசு தயாரித்து பேச்சுவார்த்தையில் சமர்ப்பித்தது. இத்திட்டத்திலும் எந்தப் பயனுமில்லை என்று கருதிய விடுதலைப்புலிகள் தாங்களே ஒரு திட்ட வரைபைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தனர். இதை அரசு பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டனர். உள்நாட்டில் சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்த விடுதலைப்புலிகள் வெளிநாடுகள் பலவற்றுக்கும் சென்று அரசியலமைப்பு வல்லுநர்கள், சட்டவல்லுநர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடி, இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபை அமைப்பதற்கான திட்டவரைபு ஒன்றை பலமாதங்களாக ஆராய்ந்து தயாரித்து ரணில் அரசிடம் சமர்ப்பித்தனர்.

இந்த வரைபுத் திட்டம் வெளியானதும் வழமைபோல சிங்களப் பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் மட்டுமல்ல இந்திய `ஆய்வாளர்கள்' சிலரும் சில இந்திய பத்திரிகைகளும் இத்திட்டம் நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச் செல்லும் என்று எதிர்ப்புக்குரல் கொடுத்தன.

அரசின் தரப்பில் பேச்சுக்களுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இத்திட்டத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத அம்சங்கள் பல இருந்தாலும் இதன் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடரலாம் என்று தெரிவித்திருந்தார்.

இந்தவரைபுத் திட்டத்தை சந்திரிகா அம்மையாரும் அவரது கட்சியைச் சார்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. இத்திட்டத்தின் அடிப்படையில் ரணில் அரசு பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தி சமாதான முயற்சியில் தடைகளைத் தாண்டி வெற்றிப்படிகளில் முன்னேறிச் சென்றுவிடுமோ என்ற அச்சம் சந்திரிகா அம்மையாருக்கு ஏற்பட்டது. பிரதமர் ரணில் அமெரிக்கா சென்றிருந்த சமயம் பார்த்து மூன்று அமைச்சர்களைப் பதவிநீக்கி அமைச்சுக்களைப் பொறுப்பேற்று இறுதியில் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பொதுத் தேர்தலுக்கும் உத்தரவிட்டார்.

தேர்தலில் சந்திரிகா அம்மையாரின் கூட்டணிக் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அரசின் பெரும்பான்மைப் பலத்தை இன்னமும் நாடாளுமன்றில் நிருபிக்கமுடியாத நிலையில் பல்வேறு தந்திரங்களை அம்மையாரும் ஆளும்கட்சியினரும் கையாண்டு வருகின்றனர்.

இனப்பிரச்சனைக்கு சுமுகமான நிரந்தரத் தீர்வுகாண்பதே தங்கள் நோக்கமென்று சந்திரிகா அம்மையாரும்சரி மற்றும் சிங்கள ஆதிக்க சக்திகள் கூறிவந்தபொழுதிலும் விடுதலைப்புலிகளை எப்படிப் பலவீனப்படுத்துவது என்பதிலேயே குறியாயிருந்து குதர்க்க வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்த் தலைமைகளைப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் கடந்த ஐம்பதாண்டுகளுக்குமேலாகவே நடந்து வருகின்றன.

1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டத்தை சந்திரிகாவின் தகப்பன் எஸ்.டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயகா கொண்டுவந்தபோது வடக்குக் கிழக்கிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் தமிழ்ப் பிரதிநிதிகள் அத்தனைபேரும் எதிர்த்து வாதாடியதுடன் எதிர்த்தும் ஒற்றுமையாக வாக்களித்தனர்.

இந்த ஒற்றுமையைக் கண்டு அஞ்சிய சிங்கள ஆதிக்க சக்திகள், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் ஒற்றுமைப் பலத்தை உடைத்தெறிவதில் ஈடுபட்டன. முதலில் முஸ்லிம் பிரதிநிதிகள் சிலர் ஆளும்கட்சிப் பக்கம் சாய்ந்தனர். இந்த ஒற்றுமையைக் குலைப்பதில் சிங்கள ஆதிக்க சக்திகள் தொடர்ந்து முயற்சி செய்து அதில் பெருமளவில் வெற்றியும் கண்டனர்.

ஜனநாயகமும் சாத்வீகப்போராட்டமும் தமிழ் மக்களிடையில் வேற்றுமையை ஏற்படுத்தவும் தமிழ் இன அழிப்புக்கும் சிங்கள ஆதிக்க சக்திகளுக்கும் பெருவாய்ப்பாக அமைந்தது.

ஜனநாயகமும் சாத்வீகப் போராட்டங்களும் தமிழ் இனத்தின் அழிவுக்கே வழி வகுத்தன. இதனால் தமிழ் இளைஞர்கள் தம்மையும் தமிழ் இனத்தையும் தமிழ் மண்ணையும் பாதுகாப்பதற்கு ஆயுதம் ஏந்திப் போராடுவதைத் தவிர வேறுவழியில்லை என்பதை உணர்ந்து ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினார்கள். இவர்களில் சிலர் தமது சுகபோக வாழ்க்கைக்காக திசை மாறிச் சென்றனர். ஈழவிடுதலைக்காக ஆயுதம் ஏந்தி சிங்கள அரச பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடத் தொடங்கினர். பின்னர் தமது சுகபோக வாழ்க்கைக்காக எந்தப்படையினரை எதிர்த்துப் போராடினார்களோ அவர்களுக்குத் துணைப்படையாகவும் போராட்டத்தைக் காட்டிக்கொடுப்பவர்களாகவும் மாறினர். இதுமட்டுமல்லாது சிங்களப்புலனாய்வுத் துறைக்கும் இவர்கள் எடுபிடிகளாகச் செயல்படத் தொடங்கினர்.

இவர்களை வைத்துக்கொண்டுதான் புலிகளைப் பலவீனப்படுத்திப் பேச்சுவார்த்தை மேசைக்குக்கொண்டு வருவதற்காகப் போர் புரிகிறோம் என்று அரசுத் தலைவர்களும் அரச படைத்தளபதிகளும் கூறிவந்தனர்.

ஆனால் புலிகளைப் பலவீனப்படுத்தமுடியாமல் அரச படைகளே பலவீனப்பட்டன. இதில் தோல்விகண்ட சிங்கள ஆதிக்க சக்திகள் விடுதலைப்புலிகளில் கோடரிக்காம்பொன்றைக் கண்டுபிடித்து பிரதேசவாதத்தைக் கிளப்பி தமிழ் மக்களைப் பிளவுபடுத்தி அதன்மூலம் விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்திவிடலாமெனக் கனவு கண்டன.

சந்திரிகா அம்மையார் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு நாள்குறித்து தமது கட்சியின் வெற்றிக்காகப் பிரசாரம் மேற்கொண்டபோது தேர்தல் முடிந்து புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும்போது நாம் பலம்வாய்ந்த நிலையிலிருந்து பேசக்கூடியதாக இருப்போம் என்று சொன்னார். கோடரிக்காம்பை வைத்து என்னவெல்லாமோ செய்து பிடிக்கலாமென அம்மையார் கனவுகண்டார். இதற்கு அவரது `விசுவாசமிக்க' அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உதவி செய்தார்.

ஜனநாயக வழிக்கு கோடரிக்கு காம்பு வழிகாட்டுவதாக டக்ளஸ் சொன்னார். ஆனால் எல்லாம் வெறும் கனவாகவே முடிந்தன. என்றாலும் சிங்கள ஆதிக்க சக்திகள் சளைக்காமல் தொடர்ந்து தமது சதிநடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டுதானிருக்கின்றன.

தமிழீழவிடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைக்கு ஒரு படியாகக் கருதப்படும் இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை வரைவுத் திட்டத்தையும் தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களையும் சிங்களப் பேரினவாதிகளும் சிங்கள ஆதிக்க சக்திகளும் மூர்க்கமாக எதிர்ப்பதில் அவர்களைப் பொறுத்தவரையில் நியாயமிருக்கலாம். அவர்களையும் அவர்களின் செயற்பாடுகளையும் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் பாதுகாப்புக்காகவும் ஆயுதம் ஏந்தியவர்களும் பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொண்டிருப்பதாகவும் கூறிக்கொள்ளும் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் தமிழீழ விடுதலைப்போராட்டத்தையும் இடைக்கால தன்னாதிக்க அதிகார சபையையும் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.


தமிழ் மக்களின் விடுதலைக்காக அதாவது இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைப்பதற்கு பண்ணாகத்தில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணி (தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி) தீர்மானம் நிறைவேற்றியது. 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இத்தீர்மானத்தையொட்டிய `இழந்த தமிழரசை மீண்டும் அமைப்போம்' என்ற கோரிக்கையை முன்வைத்து தாயக மக்களின் ஆணையை தமிழர் கூட்டணி பெற்றிருந்தது. இன்று இந்த தமிழர் கூட்டணியின் தலைவர் என்று கூறிக்கொள்ளும் ஆனந்தசங்கரியார் கூட சிங்கள ஆதிக்க சக்திகளுக்குச் சாதகமாக தமிழீழப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திக்கொண்டிருக்கிறார். இதுவும் புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

எமது தாயகத்தின் பெரும் பகுதி இப்பொழுது விடுதலை பெற்றிருக்கிறது. முழுத்தாயகமும் விடுதலை பெறுவதற்கு சிங்களப் பேரினவாதிகளும் ஆதிக்க சக்திகளுமே இடையூறாக இருப்பதைவிட தமிழீழ விடுதலைக்காக ஆயுதம் ஏந்தியவர்களும் மேடைதோறும் தொண்டைகிழியக் கத்தியவர்களும்தான் பெரும் இடையூறாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல துரோகத்தனமாகவும் இவர்கள் நடந்துகொள்கிறார்கள். இதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

**எஸ்.எம்.ஜி**

# கருணா – ஈ.பி.டி.பி. குழுவினருக்கிடையேயான உள்முரண்பாடுகளே படுகொலைகளுக்கு காரணம்!

## “நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற படுகொலைகள் யுத்தநிறுத்தத்தை ஒரு அபாயகரமான நிலைக்குக் கொண்டு செல்லும்”



கருணா குழுவில் இருந்து தப்பிச் சென்றவர்களும் ஈ.பி.டி.பி. யினரும் இணைந்து கொழும்பில் செயற்பட்டுக் கொண்டிருப்பதும், அங்கு அவர்களுக்குள் உள்முரண்பாடுகள் ஏற்பட்டு மோதல்கள் உருவாகி தங்களுக்குள்ளேயே அவர்கள் தாக்குப்பட்டு கொலைகள் மேற்கொள்ளப்பட்டு அதில் இருந்து தப்பி வந்து தங்களிடம் சரணடைந்த பலரும் இருக்கிறார்கள். அவர்களுடைய தகவலின்படி அவர்களுக்குள்ளேயே பிளவுகளும் பிரச்சினைகளும் உக்கிரமடைந்திருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர்.

கடந்த 25ம் திகதி புதன்கிழமை, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறுஹொவ்டே கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். அதன் பின்னர் ஊடகவியாலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே சு.ப.தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்துள்ளார். கிழக்கில் தங்கள் உறுப்பினர்கள் தொடர்ந்தும் படுகொலை செய்யப்பட்டு வருவது நிறுத்தப்படும் வரை, அங்கு படையினருடனான சந்திப்புகளை விடுதலைப் புலிகள் மீண்டும் ஆரம்பிக்கப் போவதில்லையென கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்ததாகவும் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் சுமார் ஒரு மணிநேரத்திற்கும் அதிகமாக இடம்பெற்ற இச்சந்திப்பில், கண்காணிப்புக் குழுத் தரப்பில் ஜெனரல் பியூ ஹொவ்டேயுடன் அதன் பேச்சாளர் உட்பட மூவர் பங்குபற்றினர். விடுதலைப் புலிகள் தரப்பில், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலித் தளபதி கேணல் சூசை, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், கடற்புலிகளைச் சேர்ந்த செழியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு நிலைமைகள் குறித்தும், கடற்புலிகளின் கடல் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இச்சந்திப்பின் பின்னர் தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அளித்த பதில்களை இங்கு தொகுத்து தருகின்றோம்.

**கேள்வி:–** ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க படையினரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுப்ப வேண்டி வருமென கூறியிருப்பது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?.

**சு.ப.தமிழ்ச்செல்வன்:–** எங்களைப் பொறுத்தவரையில் யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறையில் உள்ளது. இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறித்தான் அப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆகவே, அவ்வாறு நடைபெற்றால் அந்தக் கணத்தில் இருந்து யுத்தநிறுத்தம் இல்லாமல் போகும். ஆனாலும், ஜனாதிபதியின் கருத்துக்களில் எது அதிகாரபூர்வமான கருத்து, எது அதிகார பூர்வமற்ற கருத்து என்று அறியாமல் நாங்கள் கருத்துகளைச் சொல்வது பொருத்தமில்லை. ஆனாலும் நாளுக்கு நாள் அவர்களுடைய கருத்துகள் வித்தியாசமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனினும் எங்களைப் பொறுத்தவரையில் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவரும், அனுசரணையாளர்களும் தருகின்ற உத்தரவாதங்களின் அடிப்படையில் செயற்படும் அதே நேரம், அவர்களும் யுத்தநிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

**கேள்வி:–**- முல்லைத்தீவு சம்பவங்கள் பற்றி என்ன விளக்கம் கொடுத்திருக்கின்றீர்கள்?.

**சு.ப.தமிழ்ச்செல்வன்:–** முல்லைத்தீவு விடயத்தை பொறுத்தவரை இன்றைய சந்திப்பில் கடற்புலிகளின் தளபதியும் கலந்துகொண்டிருக்கின்றார். அவர் நிலைமைகளை தெளிவாக விளக்கியிருக்கின்றார். எங்களுடைய கடற்பிரதேசத்திற்குள் எங்களுடைய கலங்களின் நடமாட்டங்களும், பயிற்சிகளும் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றை வைத்துக் கொண்டு யுத்தநிறுத்த மீறல் அல்லது கடற்புலிகள் மீது தவறான குற்றச்சாட்டை சுமத்துவது பொருத்தமில்லாதது.

அதாவது இரண்டு தரப்பும் மோதல் நிலைக்கு வந்து யுத்தநிறுத்த மீறல் நடைபெறுகின்ற பொழுது தான் கண்காணிப்புக் குழு வந்து விசாரணைகள் செய்து உண்மையை அறியலாம். தவறான தேவையற்ற குற்றச்சாட்டுகளை கூறி கண்காணிப்பாளர்களை இக்கட்டுக்குள் சிக்க வைப்பதை அவர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்பதை இன்றைக்கு எங்களுடைய கடற்புலிகளின் தளபதி தெளிவாக விளக்கியிருக்கிறார்.

**கேள்வி:–** முல்லைத்தீவுச் சம்பவத்தில விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் கொண்டு செல்வதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி என்ன கூறியிருக்கிறீர்கள்?.

**சு.ப.தமிழ்ச்செல்வன்:–** கடற்படையும், இலங்கைப் படைத்தரப்பும் ஆயுதங்களைக் குவித்துக் கொண்டிருக்கின்றன. புலிகள் ஆயுதங்களை கொண்டு, வருவது அல்லது அவற்றைப் பெற்றுப் பலப்படுத்துவது யுத்தநிறுத்த மீறலல்ல. எங்களைப் பொறுத்தவரை அவர்களுடைய குற்றச்சாட்டுகள் அர்த்தமில்லாதவை. புலிகள் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வது பற்றிய ஆயுத ரீதியாக தங்களைப் பலப்படுத்திக் கொள்வது குறித்தும், யுத்தநிறுத்த உடன்பாட்டில் எதுவுமில்லை. அதேவேளை அவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லை.

**கேள்வி:** கிழக்குச் சம்பவம் தொடர்பாக நீங்கள் ஏற்கனவே போர் நிறுத்த கண்காணிப்பு குழுவிற்கு கடிதம் எழுதினீர்கள். இன்று அது சம்பந்தமாக என்ன தீர்மானம் எடுக்கப்பட்டது? அரசாங்கத்திடம் இருந்து எவ்விதமான பதில் உங்களுக்கு தரப்பட்டது?.

**சு.ப.தமிழ்ச்செல்வன்:–** அரசாங்கத்திடமிருந்து எந்த உத்தரவாதங்களும், பதில்களும் கிடைக்கவில்லை. இதுபற்றி கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டாலும் இது பற்றி எங்களுடைய தலைமைப்பீடம் நேரடியாகவும் வலியுறுத்தியிருக்கின்றது. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ள சரத்துகளின் அடிப்படையில், வடக்கு, கிழக்கில் ஆயுதக் குழுக்கள் செயற்படுவது தடை செய்யப்பட வேண்டும். அவர்கள் இப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பது இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டில் இரண்டு தரப்பும் ஏற்றுக்கொண்ட நடைமுறை.

தற்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்திலே கருணா குழுவும், ஈ.பி.டி.பி. குழுவும் படைத்தரப்போடு இணைந்து இயங்க அனுமதித்திருப்பது இந்த யுத்தநிறுத்த சூழலை பேணிச் செல்வதற்கு பாரிய அச்சுறுதல் ஏற்படும் என்பதை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். இன்றும் எமது தலைப்பீடத்தின் அந்த கரிசனையை நேரடியாகவும் வலியுறுத்தியிருக்கின்றோம்.


**கேள்வி:–** கிழக்குப் பகுதியில் இடம்பெறும் கொலைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. அரசாங்கத் தரப்பினால் உங்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து நீங்கள் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் என்ன தெரிவித்தீர்கள்?.


**சு.ப.தமிழ்ச்செல்வன்:–** அண்மைக்கால நிகழ்வுகளானது கருணா குழுவிற்கும் ஈ.பி.டி.பி. க்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கத்தால் ஏற்பட்டவை. யுத்த நிறுத்தத்தை சீர்குலைப்பதற்காக தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இவர்களது செயற்பாடுகள் ஏற்கனவே அறிந்த ஒன்று, ஏனெனில் கருணா குழுவில் இருந்து தப்பிச் சென்றவர்களும் ஈ.பி.டி.பி.யினரும் இணைந்து கொழும்பில் செயற்பட்டுக் கொண்டிருப்பதும், அங்கு அவர்களுக்குள் உள்முரண்பாடுகள் ஏற்பட்டு மோதல்கள் உருவாகி தங்களுக்குள்ளேயே அவர்கள் தாக்குப்பட்டு கொலைகள் மேற்கொள்ளப்பட்டு அதில் இருந்து தப்பி வந்து எங்களிடம் சரணடைந்த பலரும் இருக்கிறார்கள். அவர்களுடைய தகவலின்படி அவர்களுக்குள்ளேயே பிளவுகளும் பிரச்சினைகளும் உக்கிரமடைந்திருக்கின்றன. அதனுடைய விளைவாகத்தான் அவர்களுக்குள்ளே இந்தக் கொலைகள் நடக்கின்றன எனச் சந்தேகிக்கின்றோம். இதில் புலிகள் மீது குற்றம் சுமத்துவது எந்த விதத்திலும் அர்த்தமில்லாத ஒன்று.

**கேள்வி:–** அரசாங்கத்தால் மாற்றுயோசனைத்திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டு அது விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன, அது தொடர்பாக ஏதாவது கூறுவீர்களா?.

**சு.ப.தமிழ்ச்செல்வன்:–** இதுவரை எந்த மாற்று யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை. மாற்று யோசனைகளை முன்வைத்தாலும் அதை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். ஏனெனில் கடந்த காலங்களில் அரசாங்கங்கள் பல திட்டங்களை முன்வைத்து அவை எந்த வகையிலும் மக்க







ளுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யாததாலும் கள யதார்த்தத்தையும், மக்களுடைய அபிலாசைகளையும் எந்த விதத்திலுமே பூர்த்தி செய்யாத காரணத்தாலும் நாங்கள் பலதடவை நிராகரித்திருக்கின்றோம்.

அந்தக் கட்டத்தில் தான் சர்வதேச அபிப்பிராயத்திற்கும் எல்லோருடைய அபிப்பிராயத்திற்கும். அமைவாக விடுதலைப் புலிகள் தங்களுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்த முன்வந்தனர். அந்த வகையில் தான் எங்களுடைய மக்களின் முழு ஆதரவோடும், முழுப்பலத்தோடும் எமது தலைமைப்பீடம் ஒரு திட்ட வரைபை தயாரித்து இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபை யோசனையை அனுசரணையாளர்கள் ஊடாக சிறீலங்கா அரசாங்கத்திடம் கையளித்திருக்கிறது. இதனை கடந்த தேர்தலிலும் மக்கள் முன்வைத்து, மக்களின் அங்கீகாரமாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்றிருக்கின்றது.

**கேள்வி:–** விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான யோசனைகள் தனிநாடு உருவாகுவதற்கான முதற் படியாக அல்லது அதற்கான ஆயத்த நிலை என்று ஜே.வி.பி. பிரசாரம் செய்து வருகின்றது. இந்த நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கின்றதே?

**சு.ப.தமிழ்ச்செல்வன்:–** தமிழர் தரப்பு தங்களுடைய நியாயங்களை, தங்களுடைய அபிலாசைகளை முன்வைக்கின்ற போதெல்லாம் சிங்கள தேசத்தில் இனவாதத்தை அவர்கள் காலம் காலமாக வெளிப்படுத்தி வருகின்றார்கள். இன்று, நேற்றல்ல இது காலாகாலமாக தொடர்கின்றது. இதனாலேயே யதார்த்த பூர்வமாக எங்களது மக்களுடைய அபிலாசைகளை உள்ளடக்கி ஒரு திட்ட வரைபை தயாரித்து அவர்களிடம் முன்வைத்திருக்கின்றோம்.

இதற்கு மதிப்பளித்து மக்களுடைய அபிலாசைகளை புரிந்து கொண்டு பேச்சுக்கு முன்வரும் பொழுது தான் இங்கோயொரு சமாதானம் உறுதியடையும், நிரந்தர சமாதானத்தை முன்னோக்கிச் செல்லலாம். அது தான் யதார்த்தம்.

**கேள்வி:–** கிழக்கில் நடைபெறும் படுகொலைகள், யுத்த நிறுத்த உடன்பாட்டை நெருக்கடிக்குள் தள்ளுவதாகக் கூறப்படுகிறது அது தொடர்பாக?

**சு.ப.தமிழ்ச்செல்வன்:–** யுத்தநிறுத்த மீறல்கள் நடக்கும் போதெல்லாம் அது நெருக்கடி தான். அந்த வகையில் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற படுகொலை எல்லாமே யுத்தநிறுத்தத்தை ஒரு அபாயகரமான நிலைக்குக் கொண்டு செல்லும் என்றே நாம் கருதுகின்றோம்.

***



# அம்மையாரின் பேரிகை

வார்த்தைகளில் பொறி பறக்கிறது. அறிக்கைகளின் கனம் தாங்காமல் திணறுகின்றன. ஊடகங்களும் மக்களின் மனங்களும் ஊடகங்களுக்கு அறிக்கைகளின் உள்ளர்த்தம், வெளியர்த்தம் தேடுவதும் அதை வைத்துப் பல்வேறு விதமான ஊகங்களை வெளியிடுவதுமாக வெகு பிஷியான காலம் இது. அதற்கு மறுதலையாக பொதுமக்களுக்கு அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு யுத்தம் வாசற் படிக்கு வந்து விட்டதோ? என்ற எண்ணத் தகிப்பு.

தலை, வால், கால் என்று கொழும்பின் மட்டங்களுமே எகிற்றிக் கொண்ட சூழலுக்கு, கிளிநொச்சியும் ஏறக்குறைய அதே பொருள்பட சற்று இராஜதந்திரமான மொழியில் பதிலளித்திருக்கிறது. இதைவிடவும் அரசியற் சிந்தனையாளர் ஒருவர் கிளிநொச்சியில் நடைபெற்ற வெளியீட்டு விழா ஒன்றில் உரையாற்றுகையில் இதனையே எதிரொலித்திருந்தார்.

இலங்கைத் தீவின் இரண்டு நிர்வாகத் தலைநகர்களும் இரத்தம் சிந்தாத யுத்தத்திலிருந்து இரத்தம் சிந்தும் யுத்தத்திற்கு தாவப் போகின்றனவா? என்ற ஐயத்தினை கடந்த வாரத்தின் அரசியற் களம் தோற்றுவித்திருந்தது. உண்மையில் சிறீலங்காவின் நாடாளுமன்றில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் அரசுத் தலைவரின் சகோதரனுமாகிய அனுரா பண்டாரநாயக்கா தான் இந்த வகையிலான அறைகூவலை தமிழர்களை நோக்கி விடுத்திருந்தார். சிலவேளைகளில் தான் போடும் வித்து, இந்தளவு வேகமாக பூதாகாரமாகக் கிளைபரப்பும் என அனுரா எதிர்பார்க்காமல் இருந்திருக்கக் கூடும்.

தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை நோக்கி, இது நாடாளுமன்றம். வன்னிக்காடு அல்ல. என்று அறிவுறுத்திய அனுரா அதனைத் தொடர்ந்து உதிர்த்த வார்த்தைகளே முக்கியமானவை.

"வன்னியில் இருக்கும் உங்கள் தலைவர்களிடம் போய்ச் சொல்லுங்கள். போர் என்றாலும் சரி, சமாதானம் என்றாலும் சரி தயாராகவே இருக்கின்றோம்" என்று.

இதுவே அனுரா அனுப்பிய செய்தி. எச்சரிக்கை.

**சிறீலங்காவின் பொருண்மியம் ஓரளவுக்கு நிமிர்ந்து, அம்மையாரின் அரசியற் கணக்குகள் ஓரளவுக்காவது சரிவருகின்ற வேளையில் அவரது தெரிவாக யுத்தம் நிச்சயம் அமையும்.**

இதைத் தொடர்ந்து வந்தது அவரது சகோதரியும் அரசுத் தலைவருமான சந்திரிகா அம்மையாரின் அதிர்வேட்டு. "கிழக்குப் பகுதியில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்தால் அதனைக் கட்டுப்படுத்த புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் அணிவகுத்துச் செல்லும் படி படைகளுக்கு ஆணையிடுவேன்." என்றார் அவர்.

இங்கே எச்சரிக்கை ஏறக்குறைய யுத்தப் பிரகடனமாகவே பரிணமித்திருந்தது. "எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள். எங்களை யுத்தத்திற்குள் தள்ளாதிர்கள்." என்றார் ஆளும் கூட்டணியின் தலைவரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான ரத்னசிறீ விக்கிரமசிங்க நாயக்க. பாதுகாப்பு அமைச்சரின் கூற்றை இன்றும் ஆக்ரோசமாக வழிமொழிந்திருந்தார் பிரதி பாதுகாப்பு அமைச்சர்.

அடுத்து வந்தது படைத்தளபதியின் உத்தரவு. தாக்குதலுக்கான உத்தரவு. "உங்களை யாராவது தாக்கினால் உங்களிடமுள்ள வளங்கள் அனைத்தையும் திரட்டி முழுப்பலத்துடன் திருப்பித் தாக்குங்கள்." என்பதாக அமைந்தது அது.

இதன் பின்னர் கிளிநொச்சியும் இவற்றுக்குப் பதிலளிக்கத் தொடங்கியது. அதே பாணியிலல்ல. சற்றே அங்கதமாக, இராஜதந்திர மொழியில் இந்தப் பதில் வந்தது. ஒரு ஒலிப்பதிவு நாடாவின் அறிமுக விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட புலிகளின் படையணிகளில் ஒன்றின் முதல் தளபதி தான் வாயைத் திறந்தார்.

"விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டு விட்டதாக யாராவது நினைத்தால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்." என்பதாக அமைந்தது அந்தப் பதில். இதன் உள்ளர்த்தம் என்னவென்பதை போரிலும், போரியல் மொழியிலும் ஊறிய தமிழர்களுக்குப் புட்டுக்காட்டத் தேவையிருக்காதென்றே நினைக்கிறேன். மறு வளமாக போரின் வலியை சற்றே மறந்துவிட்டிருக்கும் சிங்கள தேசத்துக்கும் பழைய நினைவுகளை அது கிளறிவிட்டிருக்கக் கூடும்.

முத்தாய்ப்பாக வெளிப்பட்டது. அரசியற்துறைப் பொறுப்பாளரின் செய்தி, நளினமான வார்த்தைகளில், தேர்ந்த இராஜதந்திரியின் நுட்பத்துடன் அவர் பத்திரிகையாளர்களிடம் பேசினார்.

"எமது பகுதிக்குள் என்று சந்திரிகா படைகளை அனுப்புகிறாரோ, அக்காலத்திலிருந்தே போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வரும்" இது அவரின் உரையின் சாரம்.

தலையை ஒரு தடவை உலுக்கிக் கொண்டீர்களா? ஆம், உங்களுக்குப் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் நினைவுக்கு வருகின்றன. அல்லவா? ஒரு தரப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாயின் 14 நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டுமென்பது விதி. இந்த விதியைக் காற்றிலடித்துச் சென்று விட்டதே அம்மையாரின் எச்சரிக்கை.

அதைச் சமன் செய்திருக்கிறது. அரசியற்துறைப் பொறுப்பாளரின் பதில். என்று அரச படைகள் எமது பகுதிக்குள் கால் வைக்கின்றவோ அன்று, அக்கணத்திலேயே புரிந்துணர்வு உடன்படிக்கை தனது ஆயுளை முடித்துக் கொண்டு விடும் என்பது யதார்த்தமானதே. அதாவது அந்த நேரத்தில் புலிகளின் படை ரீதியான பதிலளிப்பு என்பது எந்தவித முன்னறிவித்தலுமின்றி நடாத்தப்படும் என்பது இந்தப் பதிலில் தொக்கி நிற்பதை சிங்களத்தின் இராஜதந்திரிகள் நிச்சயமாக அவதானித்துத்தான் இருப்பார்கள்.

அதேவேளை குறித்த பத்திரிகையாளர் சந்திப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் மற்றுமொரு விடயத்தையும் வலியுறுத்தினார். முல்லைத்தீவு சாலைக் கடற்பரப்பில் கடற்புலிகளின் இழுவைப் படகொன்று ஆயுதங்களை இறக்கியதான சிறீலங்கா கடற்படையின் குற்றச்சாட்டுக் குறித்துக் கேட்கப்பட்ட போது, ஆயுதங்களைச் சேகரிக்க கூடாது என்று புரிந்துணர்வு உடன்படிக்கையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. அதன்படி புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வந்தால் அது ஒப்பந்தத்தை மீறுவதாகும் என்பது அவரது பதிலின் ஒரு பகுதியாக வந்தது. ஆனால் அந்த ஒரு பகுதிப் பதில் வெளிப்படுத்திய செய்திகளமானது. தீவிரமான தாக்கத்தை சிங்கள தேசத்துக்குத் தரவல்லது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் புலிகளின் கைகளைக் கட்டிவிட்டு, ஒருபுறம் தமது பலத்தை மீளச் செய்யவிட்டு அதிகரிக்கும் அதேவேளை, இயன்ற வரைக்கும் பல்வேறு திசைகளிலும் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற மூலோபாயம் புலிகளிடம் பலிக்காது அல்லது எடுபடாது என்பதை சிங்களத்தின் கொள்கை வகுப்பாளர்களுக்கு இப்பதில் நிச்சயம் உணர்த்தித்தான் இருக்கும்.


ஆனால் உண்மையிலேயே சிறீலங்காவினால் ஒரு முழு அளவிலான யுத்தத்துக்கு முகங்கொடுக்க முடியுமா? அல்லது அவ்வாறானதொரு யுத்தத்தை சந்திரிகா அம்மையார் விரும்புகிறாரா? என்ற கேள்விகளை நாம் எழுப்புவோமாக இருந்தால் எதிரிடையாகவே இவற்றுக்கான பிரதிபலிப்பு நிச்சயம் இருக்கும்.

ஏனெனில் சிங்களத்தின் பொருண்மியம் சேடம் இழுத்துக் கிடக்கிறது. அதனைத் தட்டி நிமிர்த்தி 'சேலைன்' ஏற்றி ஒப்பேற்றி ஒருவகையாக ஓடவிடச் சந்திரிகா அம்மையார் படும்பாடு இருக்கிறதே. அந்தோ பரிதாபம். இந்த நிலையில் 'பேச்சுப் பல்லக்கு, தம்பி கால் தடை' என்று அந்தரிக்கும் சந்திரிகாவுக்கு யுத்தம் என்ற மாற்றுத் தெரிவு எந்தளவுக்குச் சாத்தியமானது? யுத்தத்துள் குதித்தால் கிடைக்ககூடிய உதவிகள் அவரது சொந்த அரசியல் எதிர்பார்க்கைகளை எட்டிப்பிடிக்க உதவக்கூடும். உண்மையில் அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் எட்டப்பட்டுள்ளதும் எட்டப்பட்டுக் கொண்டிருப்பதுமான இருதரப்புப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் யுத்தத்தில் எந்தளவுக்குக் கைகொடுக்கும்?! யுத்தத்தின் தீவிர அழுத்தத்துக்கு முகங்கொடுக்கப்போகும் சிங்கள மக்கள் அதை எந்தளவுக்கு தாங்கிக் கொள்வார்கள்? ஏற்கனவே கலகலத்துப் போய்விட்ட அம்மையாரின் கட்சியின், அரசியல் எதிர்காலத்தை இது எவ்விதம் பாதிக்கும்?

இப்படித் தொடரும் கேள்விகளுக்கான விடைகள் அனைத்துமே அம்மையாரின் உடனடித் தெரிவாக யுத்தம் இருக்கப் போவதில்லை என்பதையே கோடிகாட்டுகின்றன. சிறீலங்காவின் பொருண்மியம் ஓரளவுக்கு நிமிர்ந்து, அம்மையாரின் அரசியற் கணக்குகள் ஓரளவுக்காவது சரிவருகின்ற வேளையில் அவரது தெரிவாக யுத்தம் நிச்சயம் அமையும்.

அதுவரையும், அம்மையாரின் கணக்குகள் பொருந்தி வரும் வரையிலும் மக்களின் கவனத்தை ஏனைய விடயங்களிலிருந்து திசை திருப்பிச் சூடேற்றிக் கொண்டிருக்க யுத்த பேரிகையை அம்மையார் அடிக்கடி முழக்கிக் கொண்டிருக்கத்தான் போகிறார்.

**- பு. சத்தியமூர்த்தி -**



**சிங்கப்பூரில் உங்கள் இல்லம்**

*01-22 Belilios lane, off serangoon road, 219962 Singapore*

கட்டணங்கள் s$40ல் இருந்து. குளிரூட்டப்பட்ட சகல அறைகளிலும் தொலைக்காட்சி, தொலைபேசி, சிறிய குளிர்காப்புப்பெட்டி, இணைந்துள்ள குளியல் அறை வசதிகள் உள்ளன.

கடைகளுக்கும் போக்குவரத்துக்கும் சுலபமாகச் செல்லும் வழி

திருமணச் சேவைகள், சுற்றுலா ஒழுங்கு செய்தல். விமான நிலையத்திலிருந்து ஏற்றிச்செல்லல். உங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒழுங்கு செய்யப்படும்.

முன்கூட்டியே தொலைபேசியூடாகப் பதிவுசெய்வதற்கு: **65 : 63 96 55 00**

அல்லது **Email: newkinn@singnet.com.sg**

**CEYLON INN**

'தமிழில் பேசுவோம் தாய் மொழியை வளர்ப்போம்'




# புது வசந்தம்

**-இ.சிவனேஸ்வரன்-**

அவள் ஏன் என்னை விரும்புகிறாள்....? நான் அழகாய் இருப்பதனாலா....?

அல்லது நான் வரைந்த ஓவியங்களை அவள் நேசிப்பதனாலா?

இந்த வினாக்களுக்கு விடைதேடி திரவியனின் உள்ளம் அலைந்துகொண்டிருந்ததனால் நள்ளிரவைத் தாண்டியபோதும் நித்திராதேவி இன்னும் அவனை அரவணைத்துக்கொள்ளவில்லை.

மாரி காலம் ஆதலால், மழையும் பேரிரைச்சலுடன் பெய்துகொண்டிருந்தது. அந்த மழையைத் தாக்குப் பிடிக்க முடியாமல் தன் ஓலைக்குடிசை தவிப்பதை மழைத்துளிகள் வீட்டினுள் கோலம் போடுவதை வைத்து அவனால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

மழைத்துளிகள் தனது ஓவியங்களையும் பதம் பார்த்து விடுமோ என்ற பயத்தில் அவைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காக எழுந்து, கைவிளக்கைப் பற்றவைக்க, அது காற்றிற்கு அணைந்து போவதுமாய் இருக்க, அவனிற்கும் கைவிளக்கிற்கும் இடையே நடந்துகொண்டிருந்த போராட்டம் சில நிமிடங்கள் தொடர்ந்து கொண்டிருக்க,

உன்னைக் கொல்லாமல் விடமாட்டன் ... உன்னைக் கொல்லாமல் விடமாட்டன்...திரவியன் என்னை அவிழ்த்துவிடடா... அப்பாவை கொல்லுறான்கள்! என ஆவேசமாகக் கத்தும் தாயின் அலறல் அவனைத் தடுமாற வைக்கிறது.

ஊர் உறங்கிக் கொண்டிருக்கும் அந்த நள்ளிரவின் நிசப்தத்தை அந்தத் தாயின் அழுகுரல் ஊடறுத்துக் கலைத்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை!

பெற்ற தாயை இரும்புச் சங்கிலியால் பிணைத்து வைத்திருக்கும் துர்ப்பாக்கியம் தனக்குக் கிடைத்திருப்பதை எண்ணி அவன் மனம் நொந்து கொள்கிறது.

அந்தக் கொடூரமான நிகழ்வு தன் தாயை இந்தக் கோலத்தில் பார்க்க வைக்கும் என திரவியன் இம்மியளவும் எதிர்பார்க்கவில்லை.

காரணம்: அப்போது அவனுக்குப் புரியாத வயது.

அன்று பிற்பகல் நான்கு மணியிருக்கும். இவர்களது வீட்டிற்கு இராணுவ உடையில் வந்தவர்கள் வீட்டிற்குள் படுத்திருந்த திரவியனது தந்தையை வெளியில் இழுத்துவந்து ஏதோ வினவினார்கள்.

அப்போது இவனது தந்தை தாயைப் பார்த்து, `இவையள் கொழும்புப் பாசையில் கதைக்கினம் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை' என்று கூறினார்.

அந்தவேளையில் பயத்தினால் திரவியன் தாய்க்குப் பின்னால் ஒளிந்துகொள்வதும், பின்பு அந்தப் புரியாத பாசையில் கதைப்பவர்கள் தந்தையை என்ன செய்கிறார்கள் என்பதை எட்டிப் பார்ப்பதுமாக நின்றான்.

அக்கணம் திடீரென ஓர் வெடிச்சத்தம் கேட்க, அவன் திகைத்து தடுமாறிப்போய் தாயைப் பற்றிப் பிடிக்க தந்தை நிலத்திலே வீழ்ந்து கிடந்தார். அதைக் கண்டதும் அவனது தாய் தனது இரு கரங்களையும் தன் மார்பிலே ஓங்கி அறைந்து, அலறி அலறத் தொடங்கினார்.

ஆனால் இவனது தந்தை திரும்பவும் எழுப்பவேயில்லை.

ஆனால் இக் கோரச் சம்பவம் அத்தாயின் உள்ளத்தை மிகவும் பாதித்து விட்டதனால் ஏற்பட்ட `சித்தப்பிரமை' இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இவனது தந்தை இறக்கும்போது இவன் நான்காம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான். படிப்பில் நல்ல கெட்டிக்காரன் என்ற பெயரும் பாடசாலையில் இவனுக்கிருந்தது. ஆயினும் இவர்களுக்கு உறவுகள் என்று சொல்லிக்கொள்ளுவதற்கு யாருமில்லாத காரணத்தினாலும், சித்தம் இழந்து தவிக்கும் தன் தாயைக் காப்பாற்றவேண்டிய கடமை இவனுக்கு இருந்தமையினாலும், நான்காம் வகுப்புடன் தன் எதிர்காலத்தையும் தொலைத்துவிட்டு தாய்க்குத் துணையாக இருந்தான்.

இந்நிலையில் இவர்களது துயர் கண்டு பண உதவி புரிந்து பாசத்தோடு பராமரித்தவர் பக்கத்து வீட்டு பங்கஜம் பாட்டிதான்.

இந் நன்றிக் கடனுக்காக `பாட்டி வளர்க்கும் கால்நடைகளை மேய்ப்பவனாக சில வருடங்கள் உரண்டோடின.

இதற்கு பாட்டி செய்யும் கைமாறு இவர்களது வயிறுகள் காய்ந்து போகாமல் இருப்பதற்கும் அவ்வப்போது உதவின.

பங்கஜம் பாட்டி மிகவும் நல்லவர். அவரைப்போல் ஓர் நல்ல உள்ளம் கொண்டவரை இவனும் தன் வாழ்நாளில் இதுவரைக்கும் சந்தித்ததேயில்லை.

கூப்பிட்ட குரலுக்கு ஓடிச் சென்று உதவிகள் செய்யும் அந்த மூதாட்டிக்கு ஊர்ச் சனங்களிடத்திலும் நல்ல மதிப்பிருந்தது.

பிள்ளைகள் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள் என்ற பெருந்தன்மையில்லாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

அவர் நினைத்திருந்தால் தன் பிள்ளைகளுடன் வெளிநாடு ஒன்றில் சந்தோசமாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் தன் குடும்பம் நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதற்காக வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த உழைத்த தனது கணவர் வாழ்ந்த இந்த மண்ணைவிட்டு பிரிய மனமில்லாத காரணத்தால்தான் சொந்த மண்ணிலேயே வாழவேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டவர் இந்த அன்னை.

அதுமட்டுமல்ல திரவியனது உள்ளத்திலே ஒழிந்திருந்த ஓவியக் கலைக்கு புத்துயிர் அளித்த பெருமையும் இத்தாயையே சாரும்.

திரவியன் வரைந்த ஓவியங்கள் அக்கிராமத்து மக்கள் மனங்களில் இடம் பிடித்து விட்டதனால், இந்த நல்ல உள்ளங்கள் நன்றியுணர்வோடு அவனுக்கு இட்ட பெயர் `ஓவியன்' ஆகும்.

இன்று ஓவியன் என்றால் அங்கு அவனைத் தெரியாதவர்கள் எவருமே இருக்க முடியாத அளவுக்கு பெருமையைத் தேடித்தந்த இந்த ஓவியக்கலையை எண்ணி தன்னுள் மகிழும்போது ஏற்படுகின்ற அந்த இரட்டிப்புச் சுகத்தை தன் தாயுடன் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் தனக்குக் கிடைக்காதா...? என ஏங்கி அவன் மனம் தவித்து நின்ற நாட்களும் பலவுண்டு.

பற்ற வைத்த கைவிளக்கின் உதவியுடன் தாயை எட்டிப் பார்த்தான். அப்போது அவர் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தார்.

அவ்வேளையில் பங்கஜம் பாட்டி அம்மாவைப் பற்றிச் சொன்ன கதை இவன் ஞாபகத்திற்கு வந்தது.

திரவியனது தாய் மிகவும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாம். செல்லமாக வளர்க்கப்பட்ட அவர் பிறந்த வீட்டின் குலப்பெருமையை புகுந்த வீட்டில் நிலை நாட்டவேண்டும் என்று மனப்பால் குடித்த பெற்றவர்களை மதிக்காமல், பள்ளிக்கூடக் காதலுக்கு மதிப்பளித்து, மனதுக்குப் பிடித்தவருக்கு மாலையிட்டுக்கொண்டதனால் மனங்குமுறி `ஓடுகாலி' என்ற பெயர் சூட்டி பெற்றோரும் உடன் பிறந்த சகோதரனும் ஒதுக்கிவைத்தனராம்.

ஆயினும் இவர்களது வாழ்க்கைப் பயணம் சலனங்கள் இன்றி சந்தோசமாகவே நகர்ந்து கொண்டிருந்ததாம்.

இந்தவேளையில் காலத்தின் கட்டாயத்தால், அம்மாவின் பெற்றோர் ஒருவர் பின் ஒருவராக இறந்துபோக அம்மாவின் ஒரேயொரு சகோதரன் தங்கவேல் மாமா சொந்த நாட்டில் நிலவிய அமைதியின்மையைக் காரணமாக வைத்துக்கொண்டு, தம் குடும்பத்தினருடன் அகதிகள் என்ற பெயரோடு ஐரோப்பிய நாடொன்றில் குடியேறிவிட்டாராம்.

அன்று தொடக்கம் இன்றுவரையும், அம்மாவைப் பற்றிய துளி சிந்தனை கூட இல்லாத மாமா இன்று தாய்நாட்டில் நிலவும் அமைதிச் சூழலைப் பயன்படுத்தி மகள் தமிழரசியுடன் நாடு திரும்பியிருப்பது அம்மாவைப் பார்க்கத்தான் என நான் நினைப்பது மடமைதான்!

இவ்வாறு திரவியனது சிந்தனைகள் சிறகடித்துப் பறந்தன.

ஏனெனில் தன் மாமன் தங்கவேல் இங்கு வந்து இரண்டு கிழமைகள் உருண்டோடிவிட்ட போதிலும், தங்கையின் குடிசைப் பக்கம் எட்டி இடக்கண்ணாலும் பார்த்ததில்லை.

ஆனால் தமிழரசி மட்டும் இவர்களது குடிசைக்கு அடிக்கடி வருவதும் குசலம் விசாரிப்பதும், ஐரோப்பிய நாடுகளில் எம்மவர்களது வாழ்க்கைத் தரங்களையும், எமது கலாச்சாரங்களிற்கு ஒவ்வாத ஐரோப்பிய கலாச்சாரங்களிற்கு அடிமையாகும் பிள்ளைகளால் பெற்ற மனங்கள் அனுபவிக்கின்ற வேதனைகளையும் அவள் துல்லியமாக வெளிப்படுத்தும் போது, பிறந்த மண்ணின் மீது இம்மங்கைக்குள்ள பற்றுதலின் ஆழத்தை இவன் மனம் இனங்கண்டு ஊகித்துக்கொள்ளும்.

தொடர்ந்து சுமைகளைத் தாங்கி நொந்துபோய் இருந்த அவன் இதயத்தை, தமிழரசி அவன்பால் காட்டும் அன்பும் அனுதாப அலைகளும் உரசிச் செல்லும்போது; ஏற்படுகின்ற சுகங்களிற்கு சொந்தக்காரிதான் காரணம் என்பதை உணரும்போது, சுமைகளை ஓரங்கட்டி வைத்துவிட்டு இந்த இதயம் சுகங்களில் மட்டும் திளைத்திருக்கும்.

இவ்வாறு சுகமாக நகர்ந்து கொண்டிருந்த நாட்களுள் ஒருநாள் தமிழரசி கேட்டாள்.

`திரவியன் உங்களோட நான் கொஞ்சம் தனியாகக் கதைக்க வேணும்' என்று

அதற்குச் சற்றுத் தடுமாற்றத்துடன் ஏன்...? இப்பவும் நான் தனியாகத்தானே இருக்கிறன், கதைக்கலாமே என தமாசாகப் பதில் சொன்னேன்.

அருகில் இருந்த அவன் தாய் சிரித்தார்!

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது! வெளிநாட்டில இருந்ததனால வெட்கப்படுகிறாள்போல... என்னெண்டுதான் போய் கேளன் என்றார் தாய்.

இந்தத் தாய் சிலவேளைகளில் இப்படித்தான் எல்லோரையுமே ஏமாற்றிவிடுவார்! தமையன் இங்கு வந்த பின்பு, அன்றொருநாள் பங்கஜம் பாட்டி அவரைப்பற்றிச் சொன்னவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டுதான் தமிழரசியை அடையாளம் கண்டு கதைக்கிறாவா...? என்பது அவனுக்குப் புதிராக இருந்தது.

ஆனால், தன் தாய் இப்படியே இருந்துவிடக்கூடாதா...? என அவன் உள்ளம் அந்தக் கணப் பொழுதிலும் கூட கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டது.

தாயின் வார்த்தைகளையும் தமிழரசியின் வேண்டுதலையும் ஏற்றுக்கொண்டு, மறுநாள் அந்தி மயங்கும் வேளையில், சிறு வயதில் தமிழரசியுடன் மணல்வீடு கட்டி விளையாடி மகிழ்ந்த அந்தக் கடற்கரை ஓரத்தில் அவளுக்காகக் காத்திருந்தான்.

நாழிகை நகர்ந்துகொண்டிருந்தது. நாயகியைக் காணவில்லை! அவன் மனதினுள் பலவித போராட்டங்கள் விஸ்வரூபம் எடுத்தன... அவள் வருவாளா...? வரமாட்டாளா...? என உள்ளம் ஆதங்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில், திரவியனது கண்களை அந்த மெல்லிய மெதுமையான கரங்கள் பொத்திக்கொள்கின்றன.

அது தமிழரசிதான் என்பதை உணர்ந்துகொண்டு, பொத்திப் பிடித்த கரங்களைப் பாசத்தோடு பற்றிப்பிடித்து விலக்கிக்கொள்கிறான்.


கலகலவெனச் சிரித்த தமிழரசி பயந்து விட்டீர்களா...? என்றாள்.

நீ சிறு வயதில் செய்த குறும்புகளில் இதுவும் ஒன்றுதானே...? எப்படி மறப்பது எனக் கூறி அவனும் புன்னகைத்தான்.

அந்த நொடிப்பொழுதில் அவளது இடதுதோளை, தனது வலது கரத்தால் அழுத்திப்பிடித்து அவனருகில் அமர்ந்துகொண்டாள்.

எப்படித்தான் சொந்தக்காரியாக இருந்தாலும், ஒரு பருவப் பெண்ணோடு மிக நெருக்கமாக அமர்ந்திருந்து கதைப்பதைத் திரவியனது மனசாட்சி ஏற்றுக்கொள்ள மறுத்ததால், அவன் சற்று விலகி அமர முயற்சிக்க, `சுத்தப்பட்டிக்காடு எனக் கூறி, புன்னகையோடு மீண்டும் அவன் அருகில் உரசியபடி அமர்ந்துகொள்கிறாள்.'

தொடரும்




# கதை முற்றம்

## தீர்வு

ஒரு குடியானவனின் குடும்பம் எந்த நேரமும் சண்டை, சச்சரவுக் குள்ளாகியிருந்தது. அவனுடைய இரண்டு புதல்வர்களும் ஒருவனுடன் ஒருவன் தொடர்ச்சியாக மோதிக்கொண்டேயிருந்தனர். அந்தச் சச்சரவைப் பேச்சுவார்த்தைகளால் தீர்த்து வைப்பதற்குத் தந்தை முயன்றார். அவரால் முடியவில்லை. ஆகவே ஒரு நடைமுறை உதாரணத்தின் மூலம் அதைத் தீர்க்க முடியும் என்று நினைத்தார். தனது புதல்வர்களைக் கூப்பிட்டு ஒரு கட்டுத் தடிகளைக்கொண்டு வரும்படி கூறினார். ஒவ்வொருவராக அந்தத் தடிக்கட்டை முறிக்கும்படி கூறினார். அவர்கள் ஒவ்வொருவராக முயன்றார்கள். அவர்களால் அந்தக் கட்டுத்தடியை முறிக்க முடியவில்லை. அந்தத் தடிக்கட்டை அவிழ்த்து ஒவ்வொரு தடியாக முறிக்கும்படி சொன்னார். இலகுவாக அவர்கள் அத்தடிகளை முறித்து முடித்தார்கள். `நீங்கள் ஐக்கியப் பட்டிருக்கும்வரை எந்த எதிரியையும் உங்களால் முறியடிக்க முடியும். நீங்கள் பிரிந்தால் உங்களால் அது இயலாது. ஆகவே நீங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும்' என்று தனது புதல்வர்களுக்குச் சொன்னார்.

## நடிப்பு

ஒரு கழுதை துரதிர்ஷ்டவசமாக, பசிகொண்ட ஓநாய் ஒன்றைச் சந்திக்க நேரிட்டது. `என்மீது இரக்கம் காட்டுங்கள். நான் ஒரு நோயாளி. இதோ பாருங்கள் என்னுடைய பாதத்தில் ஒரு பெரிய முள் ஏறிக் கிடக்கின்றது.' பயத்தில் நடுங்கிக்கொண்டே கூறியது கழுதை.

`உண்மைதான் உனது பரிதாபத்திற்குரிய நிலைமை எனக்கு வேதனையைத் தருகின்றது. மனமறியச் சொன்னால் உன்னைத் துயரத் திலிருந்து விடுவிப்பதற்கு நான் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்' ஓநாய் சொல்லிக்கொண்டே கெஞ்சி மன்றாடிய கழுதையைக் கடித்து துண்டு துண்டாகக் குதறியது.

# அறிஞர் முற்றம்

மனித வரலாற்றில் 1969ம் ஆண்டு யூலை மாதம் 20ம் திகதி ஒரு முக்கியமான திருப்புமுனை ஏற்பட்டது. அன்றுதான் மனிதர்களுள் ஒருவன் வானத்தில் ஏறிச் சென்று நிலவில் காலடி எடுத்து வைத்தான். அவன் பெயர்தான் நீல் ஆம்ஸ்ட்ரோங்...

நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் காலடி எடுத்து வைத்ததும் பின்வரும் செய்தியை உலகத்துக்கு அறிவித்தார். இலட்சக்கணக்கான மக்கள் தொலைக் காட்சி மூலம் அந்தக் காட்சியை அவதானித்துக்கொண்டிருந்தனர்.

அவர் கூறினார்...

`நான் சந்திரனில் எடுத்து வைக்கும் இந்த முதல் காலடி மனித குலத்தின் மிகப் பெரிய பாய்ச்சலுக்கு சமமானதாகும்'



நீல் ஆம்ஸ்ட்ரோங்
(பிறப்பு -1930)

இந்த வார்த்தைகள் அன்று அக்காட் சியைப் பார்த்துக்கொண்டிருந்த சகலரதும் காதுகளில் `கிங்கிணி' நாதமென ரீங்காரம் செய்தன. இவ்வாறு அண்ட வெளியில் உள்ள மற்றுமொரு கிரகத்தில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதன் என்ற பெருமையை நீல் ஆம்ஸ்ட்ரோங் பெற்றுக்கொண்டார்.

நீல் ஆம்ஸ்ட்ரோங் 1930ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5ம் திகதி அமெரிக்காவின் ஒகியோ மாநிலத்தில் பிறந்தார். பெர்டியூ பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டத்தையும், தென் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டத்தையும் பெற்றார்.

1949 முதல் 1952ம் ஆண்டு வரையில் விமானப் படையில் விமானியாகத் தொழில் செய்தார். 1955ம் ஆண்டு விமானத்துறை தொழில் நுட்ப ஆலோசனைச் சபையிலும் பின் `நாஸா' விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலும் பணி புரிந்தார். 1962ம் ஆண்டு `நாஸா' விண்வெளி ஆராய்ச்சி நிலையம் இவரை விண்வெளி வீரராகத் தெரிவு செய்தது. 1966ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் திகதி அவர் `ஜெமினி 8' விண்வெளிக் கப்பலில் பறப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின் பல்வேறு விண்வெளிப் பயிற்சிப் பிரயாணங்களில் கலந்து கொண்டார்.

1969ம் ஆண்டு நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனுக்குப் புறப்பட்டார். அவருடன் எட்வின் அலட்ரின், மைக்கல் கொலின்ஸ் ஆகிய வேறு இரண்டு விண்வெளி வீரர்களும் சென்றிருந்தனர். இவர்கள் ஏறிச் சென்ற விண்வெளி வாகனத்தின் பெயர் `அப்பலோ 11' என்பதாகும். இந்த விண்வெளி வாகனமே அண்டவெளியில் உள்ள வேறு கிரகமொன்றில் இறங்கிய முதல் விண்வெளி வாகனமாகும்.

இந்த விண்வெளி வாகனம் `சனி 5' என்ற ஏவுகணையையும் கொண்டு அமைந்திருந்தது. அது கட்டளைப் பணியகம், சேவைப் பணியகம், விண் வாகனம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டு இயங்கியது. பிரயாணத்தின் ஆரம்ப கட்டங்களில் விண்வெளி வீரர்கள் `கொலம்பியா' என்றழைக்கப்படும் கட்டளைப் பணியகத்திலிருந்து இயங் கினர். பின்னர் இவர்களில் நீல் ஆம்ஸ்ட்ரோங்கும், எட்வின் அலட் ரினும் `கழுகு' என்றழைக்கப்பட்ட விண்வாகனத்தில் ஏறிக்கொண்டு சந்திரனின் மேற்பரப்பு நோக்கிச் சென்றனர். மைக்கல் கொலின்ஸ் தொடர்ந்தும் கட்டளைப் பணியகத்தி லிருந்து சந்திரனைச் சுற்றி வலம் வந்துகொண்டிருந்தார்.

நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் தமது விண்வெளி வாகனத்தை இறக்கினார். வரலாற்றுப் புகழ் வாய்ந்த அந்த `முதற்காலடியை' அவர் எடுத்து வைத் தபோது தனக்கு ஏற்பட்ட அனுபவம் மிக அற்புதமானது என்று கூறியுள்ளார். ஆம்ஸ்ட்ரோங்கைத் தொடர்ந்து எட்வின் அலட்ரினும் சந்திரனின் மேற்பரப்பில் இறங்கினார். அவர்கள் இருவரும் சில மணித்தியாலங்கள் சந்திரனின் மேற்பரப்பில் உலாவினர். அவர்கள் சந்திரனின் மேற்பரப்பை புகைப்படம் எடுத்தனர். சந்திரக் கற்களையும், மண்ணையும் சேகரித்துக்கொண்டு 1969, யூலை 24ம் திகதி பத்திரமாக பூமியை வந்தடைந்தனர்.

அதன் பின் பல விண்வெளி வீரர்கள் சந்திரனுக்குச் சென்று விஞ்ஞான ஆய்வுகள் செய்து வந்துள்ளனர். இறுதியாக சந்திரனுக்குச் சென்ற விண்வெளி வாகனம் அப்பலோ 17 ஆகும்.

விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங் ஒருமுறை இலங்கை வந்திருந்தார். இவர் தான் சந்திரனிலிருந்து கொண்டு வந்த பாறையின் ஒரு துண்டை இலங்கைக்குப் பரிசளித்தார். அது இலங்கை அரும்பொருட் காட்சியகத்தில் கண்காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

நீல் ஆம்ஸ்ட்ரோங் செய்தியொன்று பொறிக்கப்பட்ட ஞாபகார்த்தக் கல்லொன்றை சந்திரனின் தரையில் நட்டுவிட்டு வந்தார். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

`பூவுலகில் இருந்து வந்த மனிதர்கள்
1969 யூலை மாதத்தில் இவ்விடத்தில்
தமது முதற்காலடியை எடுத்து வைத்தனர்.
மனித குலத்துக்கு சமாதானம் வேண்டி
அவர்கள் இங்கு வந்தனர்.'

- இரா. சடகோபன்.

# பொன்மொழிகள்

1. இறைவனைக் கண்டு பேச விருப்பமா? அப்படியானால் அதிகாலையில் எழுந்து விடுங்கள்!
–ஜே.ஆர்.லோவேல்

2. நன்மைக்கு நன்மை செய்யுங்கள் தீமைக்கு நீதி வழங்குங்கள்!
–இங்கர்சால்

3. இரக்கம் காட்டுங்கள். ஆனால் ஏமாந்துபோய் விடாதீர்கள்!
–மாத்யூக்ரீன்

4. ஆயிரம் நண்பர்கள் இருப்பதில் பெருமை இல்லை. ஒரு எதிரிகூட நமக்கு முளைத்துவிடாமல் பார்த்துக்கொண்டால்தான் பெருமை!
–எமர்சன்

5. கவலைகளும் பிரச்சினைகளும் வருவதுபடி வரட்டும். இப்போது இந்த நிமிடம் மகிழ்ச்சியாய் இருங்கள்! செய்யவேண்டிய கடமையை மகிழ்ச்சியுடன் செய்து முடியுங்கள்!
–சி.ஜோன்சன்

6. கடுமையான கசப்பான சொற்கள் பலவீனமான கொள்கையின் அறிகுறி!
–விக்டர் ஹ்யூகோ

7. மேலான மனிதன் எப்போதும் அறம் பற்றியே சிந்திக்கிறான். பாமர மனிதன் சுகம் பற்றியே எண்ணுகிறான்!
–கன்பூஷியஸ்

8. உங்களுக்குத் தேவையான சக்தியும் செயல் ஊக்கமும் உங்களிடம்தான் இருக்கிறது என்பதை முழுமையாக நம்பினால்த் தான் இவ்விரண்டும் நீர்வீழ்ச்சி போல தங்குதடையின்றி உங்களுக்குக் கிடைக்கும்.
–நோர்மன் வின்சென்ட் பீல்

9. உண்மைக் காதல் அனைத்திற்கும் பரஸ்பர மதிப்பே அடிப்படை
–ஜோன் பக்கிங்ஹாம்.

10. மனிதன் புத்தகங்களைப் படிப்பதைவிட மனிதர்களைப் படிக்கவேண்டும் மனிதப் பண்புகளைப் படிக்கவேண்டும் பண்பாட்டைப் படிக்க வேண்டும்!
–தமிழண்ணல்

# கவிதை முற்றம்

## எண்ணுகிறேன்...

தாயவளின் வயிற்றறையில்
தனித்திருந்த காலமதை
தரைவந்து எண்ணுகிறேன்!
குழந்தையாய் நானிருந்து
சிறுமியாய் ஆனவுடன்
மண்ணுலகின் மகிமைதனை
மனதார எண்ணுகிறேன்!

சிறுமியாய் நானிருந்து
குமரியாய் ஆனவுடன்
குடும்பமதை நேசிக்கின்றேன்
பெற்றோரும் உறவினரும்
பொக்கிசமாய் எனைக் கருதும்
பெருமையினை எண்ணுகிறேன்!

காலத்தின் சோதனையாய்
கழிகின்ற வாழ்க்கையினை
உலகத்தின் சாதனையாய்
ஆக்கிவிட எண்ணுகிறேன்!

இவ்வுலகம் தனைவிட்டு
நான் மறையும் போதினிலே
நானிலங்கள் எனை பேசும்
நல்லுலகை எண்ணுகிறேன்

தாய் நாட்டின் புகழனைத்தும்
தரணியெங்கும் ஓங்கிடவே
பாவை நான் எண்ணுகிறேன்!

ஆக்கம்: பாத்திமா பசீனா





# உலக நாடுகளிடம் பெற்ற உதவிகளும் சிறீலங்கா எமக்கே கொடுத்தது

## - நோர்வே தமிழ்ச் சங்கத்தில் பாலகுமார் தகவல் -

சிறீலங்காவின் கடந்தகாலப் போரியலிற்கு பல நாடுகள் உதவி புரிந்தன. ஆனால் எங்களுக்கோ சிறீலங்கா என்ற நாடே உதவி செய்தது. அது தனக்குக் கிடைத்த பல நாடுகளின் உதவியுடன் தன்னிடமிருந்த மிச்ச சொச்சங்களையும் சேர்த்து எமக்கு உதவி செய்தது என நோர்வே தமிழ்ச்சங்கத்தின் வெள்ளி விழாவில் பேசிய விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு.கா.வே.பாலகுமார் தெரிவித்தார்.

எங்களிற்கு கிடைத்தற்கரிய வகையில் காலத்தின் வரவாகக் கிடைத்திருக்கும் ஒப்பரிய ஒரு தலைவனின் காலத்தில் நாம் எமது விடுதலையை அடைந்தே தீருவோம் எனத் தெரிவித்த பாலகுமார், அந்த அற்புதமான மனிதனின் மதிப்பிடுதற்கரிய ஆற்றலை தெரிவிக்க வேண்டிய கடப்பாடு தனக்கு உண்டென்று தெரிவித்ததோடு, உலக வல்லரசுகளின் அடுத்த கட்ட நகர்வுகளை புன்சிரிப்போடும், தற்துணிவோடும், தயரான நிலையிலும் இருந்து கொண்டே இந்த நகர்வுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் என்றும் தெரிவித்த பாலகுமார் அவர்கள்,

'ஜெயசிக்குறு' என்பது உண்மையிலேயே உலகத்தினுடைய யுத்தம் எனவும், விடுதலைப் போராட்ட அமைப்புகளிற்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் பலநாடுகள்

(தொடர்ச்சி 30ம் பக்கம்)

# மக்களின் கோரிக்கையே....

(17ம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் பலமடைந்து, அந்தப் பலத்தோடு பேச்சுக்கு போகின்றபோது அவர்கள், பேசுவதற்கு பின்தங்குகிறார்கள் என்று தேசியத் தலைவர் சொல்வார்.

இந்த நிலையில் நாங்கள் அமைதிக்காக குரல்கொடுக்கிற அதேவேளையில், சிங்களவர்கள் எம்மைப்பற்றி இன்னும் உணர்வதற்கு நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திப்பதற்காகத்தான் நமக்கு நேரம் பிடிக்கிறது.

கேள்வி:- **தற்போதுள்ள சூழ்நிலையில் தன்னாதிக்க அதிகாரசபை நிராகரிக்கப்பட்டால்... அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும்?**

பதில்:- நல்ல கேள்வி கேட்டீர்கள். இன்றைக்கு இந்தக் கோரிக்கையை தூக்கிப்பிடித்துக்கொண்டு கனக்கப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே நாங்கள் மிகக்குறைந்தளவு கோரிக்கையை தொடக்கத்தில் முன்வைத்தபொழுது இதே கருத்தைத்தான் சொன்னார்கள். அதாவது நீங்கள் இன்னும் குறைத்துக் கேளுங்கள் என்று. அன்றில் இருந்து இன்று வரைக்கும் எடுத்துப் பார்த்தால், 1920ம் ஆண்டிலிருந்து பார்த்தோமேயானால்... தமிழ் தலைவர்கள் என்று சொல்லப்படுகிற அனைவருமே பேச்சுவார்த்தைக்கான கோரிக்கையை முன்வைத்துக்கொண்டே இருந்திருக்கிறார்கள். அத்தகைய கோரிக்கைகளை நியாயபூர்வமாகவும் அல்லது தர்க்கரீதியாகவும் வைத்திருக்கின்றார்கள்.

நாங்கள் இன்றைக்கு தனியாக கோரிக்கை எதனையும் வைக்கவில்லை. எங்களைப் பொறுத்தவரை நாங்கள் கோரிக்கை எதனையும் வைக்கவில்லை. 75ம் அல்லது 77ம் ஆண்டுக்குப் பிறகு கோரிக்கை வைப்பதற்கு எங்களுக்கு எதுவுமே கிடையாது. ஏனென்று சொன்னால் இறுதிக்கோரிக்கையாக தமிழீழக் கோரிக்கை வைக்கப்பட்டாகிவிட்டது. இதுவரை வைக்கப்பட்ட கோரிக்கைக்கு புறம்பான ஒரு கோரிக்கையாகத்தான் இடைக்கால அதிகாரசபைத் திட்டம் அமையும். நாங்கள் இதையேன் செய்கிறோம் என்று சொன்னால், ஒரு வாய்ப்பு இன்றைக்கு வழங்கப்பட வேண்டும் என்று சொல்லி உலகம் நியாயமான முறையில் எங்களைக் கேட்டபோது, நாங்களும் அதற்கேற்ற ஒரு முன்மாதிரியாக நடந்துள்ளோம்.

1920ம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்த வரலாற்று நிலையில் இருந்து ஒவ்வொரு காலகட்டத்தையும் நாங்கள் இணைத்துப்பார்த்து 85ற்குப் பின்பு, திம்பு அடிப்படையில் வைக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கைகளையும் உள்வாங்கி, இன்றைக்கு சொல்லப்படுகின்ற இணைப்பாட்சி என்கின்ற அடிப்படையையும் வைத்துக்கொண்டு, இன்றைக்கு உலகத்திலே வழங்கப்பட்டிருக்கின்ற தீர்வு திட்டங்களை சூடான் போன்றவற்றையும் எடுத்து ஆராய்ந்து, நாங்கள் எங்களுக்கு ஏற்றமாதிரி, ஒரு பண்பான முறையில் அனைவருமே சமத்துவமாக பண்போடு வாழ்வதற்கு ஒரு திட்டத்தை முன் வைத்திருக்கின்றோம். இந்தத் திட்டம் என்பது எங்களுடைய திட்டமல்ல. தமிழ் மக்களுடைய திட்டம்.

இதற்குமேல் கோரிக்கை எதுவும் வைப்பதற்கான திட்டம் எதுவுமில்லை. இதுதான் கடைசிக் கோரிக்கை. நாங்கள் பொறுமையுடன் காத்திருக்கின்றோம். நாங்கள் சமாதானப் பாதையில் செல்கின்றோம். இதனால்தான் நாங்கள் எவருக்கும் கடமைப்பட்டவர்களாக வாழவில்லை.

கேள்வி:- **பேச்சுவார்த்தை நீண்டுகொண்டிருக்கிறது. இது வழக்கம்போல காலங்கடத்தும் ஒரு முயற்சியாகவும் இருக்கிறது. இதனை முறியப்பதற்கு காலக்கெடு விதிக்கும் நோக்கம் எதுவும் இருக்கிறதா?**

பதில்:- நல்ல கேள்வி ஒன்று கேட்டிருக்கின்றீர்கள். இந்த நிலைமை தொடர்பாக எமது தலைமை ஆழமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கின்றது. நாங்கள் ஒரு நெருக்கடி நிலையை உருவாக்கவில்லை. இங்கு நாங்கள் வந்திருப்பதன் நோக்கம். எங்களுடைய செய்தியை நாங்கள் தெளிவாகச் சொல்லி, இதனை பூரணமாக உலக நாடுகளுக்கு உணர்த்தி, அதனை விளங்கப்படுத்தி, அதற்கூடாக எல்லைகளை வகுப்பதற்கு நாங்கள் முயற்சியெடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

கேள்வி:- **இதுதொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும்?**

பதில் :- எங்களைப்பொறுத்த வரையில் வழமையாக வெற்றி அல்லது தோல்விக்கு பின்னாலே இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படும்பொழுது பலவீனப் படுத்தப்பட்ட தரப்பை முற்றாகப் பலவீனப்படுத்தி ஆயுதங்களை கையளிக்க ஏற்பாடு, செய்து தேசிய நீரோட்டம் என்று சொல்லி அதிகாரங்களை வழங்கி,

ஆசைகாட்டி இவ்வாறு வெற்றிகொண்ட வரலாறு இருக்கின்றது. அவ்வாறு ஈடுபட்டவர்கள் இன்று திகைத்துப்போய் நிற்கின்றார்கள். உண்மையிலே சொல்லப்போனால் அவர்கள் என்ன செய்வது என்பதற்காக நாங்கள் இடம்விட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். அதாவது நீங்கள் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யுங்கள், உங்களுக்கு நாங்கள் அவகாசம் தந்துவிட்டோம். ஆனால் எங்களை எதுவும் செய்துவிட முடியாது என்பதையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளுங்கள் என்று உணர்த்தியிருக்கின்றோம்.

கேள்வி:- **சிங்கள அரசின் நோக்கம் ஆயுதங்களைப் பறிப்பதிலேயே குறியாக இருக்குமே தவிர, கோரிக்கைகளை பரிசீலித்து ஒரு தீர்வை எட்டும் என்பதாக இருக்காது என்கிறீர்கள்?**

பதில்:- உலகத்திலை நாங்கள் ஒரு முன்மாதிரியாக நடந்திருக்கின்றோம். நாங்கள் விட்டுக் கொடுத்திருக்கின்றோம். நாங்கள் பேச்சுக்கு சென்றிருக்கின்றோம். போர் நிறுத்தம் செய்திருக்கின்றோம். அதைவிட முக்கியமானது சிங்கள மக்களுடன் இணக்கமான உறவை வளர்த்து வருகின்றோம். அதையும் விட முக்கியமானது 'மாற்றுக் கோரிக்கை' ஒன்றை வைத்திருக்கின்றோம். இவ்வளவையும் நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொன்னால், அதனுடைய காரணம் என்னவென்றால் நாங்கள் சரியான பாதையில் செல்கிறோம். ஆனால், ஏமாறுவதற்கு நாங்கள் இளிச்சவாயர்கள் அல்ல. அதைத்தான் நான் சொல்லிக்கொள்ள முடியும். எங்களுக்கு சொந்தப்பாடம், அனுபவம் இருக்கிறது, எமது தலைவருடைய ஆற்றலுக்கு ஊடாக நாங்கள் ஒரு புதிய பாடத்தை இந்த உலகத்திற்கு கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்று நான் நினைக்கிறேன். அந்தப்பாடத்தை கற்பதற்கான அவகாசத்தை நாங்கள் கொடுத்திருக்கின்றோம்.

கேள்வி:- **இலங்கையில் தமிழர்களுக்கான உரிமைகள் வழங்கப்படாது தொடர்ந்தும் அவர்கள் அடக்கு முறைக்கு உட்படுத்தப்படுவார்களேயானால், சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப பிரிந்து சென்று தனியான ஆட்சியொன்றை அமைப்பதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது என கலாநிதி எதிரிசிங்க போன்றவர்கள் சமஷ்டி ஆட்சி பற்றி வலியுறுத்தி, மீண்டும் மீண்டும் பேசத் தொடங்கியுள்ளது குறித்து உங்கள் கருத்து....**

பதில்:- இன்றைக்கு உண்மையிலேயே இந்தக் கருத்தை ஒருவராக இல்லாமல் பலரும் பேசும் நிலையொன்று உருவாகவேண்டும். சிறீலங்கா அரசு அவலப்பட்டு நிற்கிறது. கையறுந்த நிலையில் என்ன செய்வதென்று தெரியாது திக்குமுக்காடிக்கொண்டிருக்கின்ற வேளையில், அதனைப் பயன்படுத்த நாங்கள் விரும்பவில்லை. எங்களுக்கு அப்படியொரு அவசரமும் கிடையாது. அதற்கிடையில் எதிரி தன்னைப் பலப்படுத்திவிடுவான் என்ற கவலையும் எங்களுக்கு கிடையாது.

சிலவேளைகளில் ஜே.வி.பி. பலம்பெற்று வந்தால், அது இன்னொரு கதையாக நீளும்.

கேள்வி:- **ஒஸ்லோ மாநாட்டில் ஒரு யோசனை வைக்கப்பட்டது. அவ்வாறாயின் சமஷ்டி ஆட்சி பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கூட, தன்னாட்சி அதிகாரசபை கொடுத்தால் தானே அதனைப் பேசமுடியும்.?**

(தொடர்ச்சி 28ம் பக்கம்)




மோகன் ஜுவலரி மார்ட்

201 Rue du fg. st. Denis, 75010 Paris.

Tel: 01 42 05 65 26 / Fax: 01 42 05 65 79

Mº: La Chapelle / Gare du Nord

தங்க நகைகளுக்கு தவணை முறையில் செலுத்தும் கடன் வசதியுடன்!



# கௌத்தமருடன் மரணித்த பௌத்தம்!

முழுமை -நிறைவு (Fullness) இல்பொருள் நிலை -ஒன்றுமில்லா நிலை (Nothingness)ஆகிய இரண்டும், இரண்டு கோணங்களில் ஒன்றையே குறிக்கின்ற சொற்பதங்களாகும்.

இருள், இறப்பு, ஆழ்துயர் நிலை, ஏக்கம் ஆகியனவற்றைக்கொண்டுள்ள இவ்வுலகத்திலிருந்து பார்க்கும்போது வெறுமையே மிஞ்சி நிற்கும். ஏனெனில் இவை யாவும் உண்மையிலேயே இல்லாதவை. ஆனால், ஆழ்துயரும் இருளுமில்லாத நிலையில் வெளிக்காட்டப்படுவதைப் பார்க்கும் பொழுது நாங்கள் ஒளி நிரம்பிய-அழகு செறிந்த-அருள் நிறைந்த பேரானந்தம் நிரம்பியவர்களாக இருப்போம் என்பது புலனாகிறது. இதுவே நிறைவு. உலக இன்பங்களின் இல்லாமையே உண்மையின் உள்ளமையாகும். போலிகளின் இல்லாமையே உண்மையின் நிறைவாகும். எனவே `நிறைவு' `ஒன்றுமில்லா நிலை' ஆகிய இரண்டும் ஒன்றிற்கொன்று முரணானவை அல்ல. இரு வேறு நோக்குகளில் அவை ஒரே அனுபவத்தைத்தான் சுட்டி நிற்கின்றன. இறுதியான -காலங்கடந்த அனுபவத்தின் தரிசனத்திற்கு ஒன்றுமில்லா நிலையை - வெறுமையைத் தொடக்கமாக உபயோகித்தவர் புத்தர் ஒருவரே. உலகின் ஏனையோர்களோ, நிறைவை-முழுமையைத்தான் இறுதியான அனுபவத்தைப் பெறுவதற்கான வழிமுறையாக உபயோகித்தனர். `இப்பொருள் நிலை' என்ற எதிர்மறை நிலையை கௌத்தம புத்தர் ஏன் தேர்ந்தெடுத்தார் என்பது நாமெல்லாம் ஆழச் சிந்திக்க வேண்டிய ஒரு வினாவாகும். இதனை வெறுமனே தத்துவ விசாரணைகளுக்காக அல்லாமல் எங்களது சொந்தத் தேடலுக்காகவும் ஆன்மீக மேம்பாட்டிற்காகவும் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

`நிறைவு,' `முழுமை,' `கடவுள்,' `யாவும் கடந்தது' ஆகியவை ஐயத்திற்கிடமற்ற நெகிழ்வு விரிவற்ற, தனி நிலையான,உளதாம் தன்மை குறித்த, இன்மை மறுத்த, நேர் படியான (Positive) சொற்பதங்களாகும். மனித மனத்தின் தந்திரங்களைக் கண்டு புத்தர் வியப்படைந்தார். பெரும்பான்மையான ஞானிகள் தங்களது முடிவான அனுபவத்தையே ஆன்மீக விளக்கத்திற்கு உபயோகித்தனர். எனவேதான் நேர்படியான கருத்துக்களால் தங்களது போதனைகளை மேற்கொண்டனர். அவர்கள், ஆழ்துயர் நிலைபற்றியோ, இருள் பற்றியோ, இறப்புப் பற்றியோ பேசத்தலைப்படவில்லை. அவர்களுடைய கணத்தில் உடனிருப்பு நிலையிலிருந்தே (Isness) அவர்கள் பேசினர். இத்தகைய போதனைகளைப் பல பல நூற்றாண்டுகளாகத் தந்திரமிக்க மனித மனங்கள் அப்படியே ஏற்றுக்கொண்டு அவற்றைத் தங்களுக்குச் சாதகமாகவும் உபயோகிக்கத் தொடங்கியும் விட்டன. தந்திரமிக்க சூழ்ச்சித் திறன்மிக்க மனித மனத்திற்கு இந்த முழுமை-நிறைவு பற்றிய நேர் படியான கருத்துக்கள் அதன் அகந்தைப் பயணத்திற்கே உதவின. `நான் கடவுளாக வேண்டும்,' `நான் பிரம்மாவை அடையவேண்டும்,' `நான் வீடு பேற்று நிலையை அடைய வேண்டும்' என்றெல்லாம் கூறிக்கொண்டு `நான்' என்ற முனைப்பினுள்ளேயே மனிதன் செயற்படத் தொடங்கினான். அதுவே இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. `நான்' என்ற முனைப்பிற்கு எந்தவொரு காலத்தைக் கடந்த இலக்கும் இருக்க முடியாது.


`நான்' என்பது ஒரு தடையாக இருக்குமேயன்றிப் பாலமாய் இருக்காது. எனவே சகல நேர்படியான (Positive) பதங்களும் துஷ்பிரயோகிக்கப்படுகின்றன. அவை, `நான்' என்பதை ஒழிப்பதற்குப் பதிலாக, அதனை ஊட்டமளித்து மெருகூட்டுகின்றன. அழகுபடுத்துகின்றன. `கடவுள்' ஓர் இலக்காகும்போது, அதனை நாங்கள் அடையவேண்டும். எனவே நாங்கள் எங்களது இலக்காகிய கடவுளையும் விடப் பெரியவர் ஆகின்றோம். ஆனால் இலக்கு எங்களை விடப்பெரிதாக இருக்கமுடியாது. இது மிகவும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய உண்மையாகும். இதனைப் புரிந்து கொள்ள முடியாத ஞானியர்களின் அறியாமையினாலேயே சமயங்கள் தோல்வியுறுகின்றன. இவ்வணுகு முறையிலேயே கௌத்தம புத்தர் ஏனையோரை விஞ்சி நிற்கின்றார். மற்றவர்கள் இங்கேதான் தங்களையும் அறியாமல் மனித மனங்களின் சூழ்ச்சிகளுக்கும், பலவீனங்களுக்கும் இடங்கொடுக்கிறார்கள் என்பதைப் புத்தர் புரிந்துகொண்டிருந்தார். இதனால் தான் யாவும் கடந்த உண்மையென்னும் இலக்குக்கு மனிதனுடைய மமதையை அழிப்பதற்கு உறுமெய்ம்மையை - உளதாம் தன்மை குறித்த -நேர்படியான தனி நிலையைக் குறிக்கும் எச்சொற்பதத்தையும் உபயோகிக்காமல் விடுவதெனத் தீர்மானித்தார். அதாவது, `நான்' என்ற முனைப்பானது எவ்வித அனுகூலத்தையும் பெறக்கூடிய சகல சொற்பிரயோகங்களையும் முற்று முழுதாகவே நிராகரித்தார் அவர். யாவும் கடந்ததை -ஒன்றுமில்லா நிலையை - வெறுமையை -இல்பொருள் நிலையை




**கந்தையா நவரேந்திரன்**

குறிக்கப் `பூஜ்யம்' என்ற சொல்லையே தேர்ந்தெடுத்தார். `தான்' என்ற முனைப்பு எப்படி பூஜயத்தை இலக்காகக் கொள்ள முடியும்? யார்தான் பூஜயமாக விரும்புவர்? ஒவ்வொருவரும் தான் பூஜயமாவதைத் தவிர்க்கவே விரும்புவர். புத்தர் இந்தப் பூஜயத்தை `நிர்வாணம்' என்ற நிலையை காலங்கடந்த அனுபவத்தைக் குறிப்பதற்குப் புத்தர் `நிர்வாணம்' (Nirvana) என்ற அருமையான, அழகான சொற்பதத்தைத் தேர்ந்தெடுக்கக் காரணம் தான் யாது?

`நிர்வாணம்' என்றால் `மெழுகுவர்த்தியை அணைத்தல்' என்று பொருள். ஏனையவர்கள், நாம் பிரமாண்டமான ஓராயிரம் சூரியன்களின் ஒளித்தொகுதியை எம்மகத்தே கொண்டுள்ளோமெனக் கூறிக்கொண்டிருக்கும்போது புத்தர் மட்டும் `நிர்வாணம்' என்ற சொல்லைத் தெரிவு செய்யக் காரணமில்லாமலில்லை. மக்களுக்கு நிலையான வாழ்வு தேவைப்படும்போது கௌத்தம புத்தர் மட்டும் முடிவான இறப்புப் பற்றிப் பேசுகிறாரேயெனப் பலர் அங்கலாய்த்தனர். கடும் ஒளி அல்லது அளவுக்கு மிஞ்சிய ஒளி இருளாகவே தோன்றும். ஒரு சூரியனையே ஒரு சில நொடிகள் தானும் நேரடியாக எங்களால் பார்க்க முடியாதுள்ளபோது, ஓராயிரம் சூரியன்கள் எமது அகத்தே ஒளிர்ந்தால் அதன் தரிசன அனுபவம் காரிருளாக இருக்குமேயன்றி ஒளியாயிராது. ஒரு சூரியனே எங்கள் கண்களைக் குருடாக்கும்போது ஓராயிரம் சூரியன்கள் எங்களை நிரந்தர குருடர்களாக்



காதா?

மனித மனத்தின் சூழ்ச்சித்திறனை அனுபவ ரீதியாக மிகவும் நன்றாகவே புரிந்துகொண்டதனாலேயே புத்தர் கடவுளைப் பற்றிக் கூறவில்லை. `கடவுள்' என்ற சொற்பதத்தையே எச்சந்தர்ப்பத்திலும் உபயோகிக்காமல் அதனை மறுத்தார். அவர் மனிதனின் `தான்' என்ற முனைப்பை மறுத்தார். `தான்' என்ற முனைப்புக்கு எவ்வித ஆதாரமும் கொடுக்கக் கூடாதென்பதில் அவர் மிகவும் கவனமாக இருந்தார்.

கடவுள் ஓர் ஆதாரமாக வருமானால் கடவுள் இல்லை என்று பொருட்படுமென்றோ? கடவுளைப் பற்றிய கருத்துக்களை -அறிவுகளைக் கோட்பாடுகளாகவும், சம்பிரதாயங்களாகவும், சடங்குகளாகவும், ஆச்சாரங்களாகவும் ஆண்டாண்டு காலங்களாக மனித மனத்திற்குள் சுமையாய் ஏற்றி விட்டுப் பின்பு வேதாந்தம் பேசியே மனிதன் தன் வாழ்நாளை வீணே கழித்துக்கொண்டிருக்கின்றான். போதாக்குறைக்குத் தனது மனத்தின் படைப்பாகிய கண்டுபிடிப்பாகிய `கடவுள்' என்ற வெறும் சொற்பதத்திற்குப் பல வியாக்கியானங்கள் அளித்து, அதனைக் கோயிலில் குடியேற்றிக் கும்பிட்டுக்கொண்டுமிருக்கின்றான். எண்ணச் சுமைகளை, கழுதையின் முதுகில் ஏற்றும் சுமைகளைப்போல், அளவு கணக்கில்லாமல் மனக் கழுதையில் ஏற்றிவிட்டுப் பின்பு அதிலிருந்து மீண்டும் வெறும் சொற்களால் ஞானம் பேசுவதில். ஏது பயன்?

வேதம் -அறிவு-அந்தம்-முடிவு என்றும் காலத்திற்குட்பட்ட மனத்தின் படைப்பாகிய அறிவின் முடிவிலேயே ஞானம் ஒளிர்கிறது என்றும் மீண்டும் மீண்டும் கோட்பாடு ரீதியாகவே வேதாந்தம் பேசுகின்றோம் நாம். இந்தப் போலி வேதாந்தம் மனிதனை நிரந்தரமாக உளவியல் ரீதியாகப் புற்றுநோய் போல் மாய்த்துக்கொண்டிருப்பதைப் புத்தர் கண்டார். நாங்கள் பூரணமாய்ப் பூஜ்யமாகும்போது அங்கே ஆழ்துயர் நிலையிராது. உலகைப் பொறுத்தமட்டில், `தான்' என்ற முனைப்பு நிலையில் வெறுமையும், மெய்ம்மையின் வெறுமையுமே உண்மையான நிலையென்று தனது சொந்த ஆளுமையால் விலக்கினார். பௌத்தம் இந்தியாவிலிருந்து மறையப் பல காரணங்கள் இருந்த போதிலும் அவற்றுள் மிகவும் முக்கியமானதைக் கவனிப்போம். சகல இந்திய ஞானியர்களும், மெய்யுணர்வாளர்களும், தத்துவஞானியர்களும் நேர்படியான (Positive) கோட்பாடுகளையே பயன்படுத்தினார்கள்.

புத்தருக்கு முந்திய பல எண்ணற்ற ஆண்டுகளாக இந்தியர்கள் அனைவரும் நேர்படியான ரீதியாகவே சிந்தித்துக்கொண்டிருந்தனர். எதிர்மறை (Negative) அணுகுமுறையென்பது அவர்கள் கேட்டறியாததொன்று.

(தொடர்ச்சி 28ம் பக்கம்...)



## எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...

## வீரவேங்கை அருட்சுடர்

யாழ்ப்பாணம் கொக்குவில் என்ற கிராமத்தில், குலசேகரம் யோகம்மா தம்பதியினருக்கு மூன்றாவது புதல்வியாக வீரவேங்கை அருட்சுடர் என்ற வீர மகள் பிறந்தாள். இவளுக்கு பெற்றவர்கள் இட்ட பெயர் குலேந்தினி. குலேந்தினியின் இன்னொரு பெயர் குமுதா. குமுதா என்று செல்லமாக அழைக்கப்பட்ட அருட்சுடர், தன் ஆரம்பக்கல்வியை யாழ்.கொக்குவில் உ.உ பாடசாலையிலேயே கற்றாள் அதனைத்தொடர்ந்து ஆண்டு 6—8 வரை யாழ். சிறி இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் கற்றாள். கொக்குவில் கருவேலடி வீதி யாழ்ப்பாணத்தை சொந்த முகவரியாக கொண்ட குமுதாவிற்கு ஒரு மூத்த சகோதரியும், இரண்டு இளைய சகோதரிகளும் ஒரு சகோதரனும் உடன் பிறப்புக்கள்.

இப்படியே குடும்பம் கல்வி என்று வாழ்ந்த இளையவர்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவையை விளக்கிய பெருமை சிறீலங்காவின் ஆளும் கட்சிகளையே சாரும்.

குமுதா தன் கல்வி வாழ்விற்குள் நின்ற காலப்பகுதி அது. 1995 யாழ்ப்பாணத்தின் பாரிய இடம்பெயர்வு அவலம், அவளில் பல மாறுதல்களை ஏற்படுத்தியது. நீருக்காக வாய்திறந்த மழலைகள் நாவரண்டு இறந்ததும், மழைத்துளி வாயில் விழாதா என்று ஏங்கிய உறவுகளும் அவள் நெஞ்சைப் பிழியும் நினைவுகளாகின. அந்த இடப் பெயர்வின் நெரிசலில் வன்னிக்கு வந்த வழியில் தவறுதலாக பெற்றோர்கள் தவறவிட்டு இரண்டு மாதத்திற்கு பின்தான் அவர்களைத் தேடிப்பிடித்து சேர்ந்து கொண்டாள்.

கல்வி பாதிக்கப்பட்டது. வன்னிக் குடிசையே வாழ்வாகியது. வீட்டில் இருந்தவள் நாட்டிற்காக உழைத்த புலிகளுக்கு உதவினாள். பின்னாளில் கிராமியப் படையில் இணைந்து கொண்டாள். நாட்கள் நகர்ந்தன. விடுதலைக்கான தன் பணியில் வளர்ச்சிப்படியிலேயே ஏறி நின்றாள். பின்னர். எல்லைப் படையில் இணைந்து செயற்பட்டாள். அதன் பின் ஒரு நாள் தாயிடம்... “அம்மா நான் இயக்கத்திற்கு போகப் போறேன். இப்படி இருந்து என்ன செய்யிறது..?” என்றாள்.

கூறியவள் போராளிகளை உருவாக்கும் செயலகம் சென்றாள். அன்றில் இருந்து அவள் அருட்சுடராகினாள்.

இவள் ஆரம்பப் பயிற்சியை மைதிலி—01 பயிற்சிப் பாசறையில் முடித்துக் கொண்டு மாலதி படையணிக்குள் காலடியெடுத்து வைத்தாள்.

பல தாக்குதல் களங்களிற்கு சென்று வென்று வந்தாள். பல களங்களிற்குள் காலடியெடுத்து வைத்தவள், இரண்டுதடவை விழுப்புண் அடைந்தாள். விழுப்புண் ஆறமுன் களங்களுக்கு சென்றாள். தொடர்ந்து நடந்த போர்களில் எல்லாம் பங்கு கொண்டாள். தொடர்ந்து ஓயாத அலைகள்—3,4 சமர்க்களமெங்கும் நின்றாள். தன்கடமையென சிரமேற்கொண்டு செய்தாள்.

அன்றொரு நாள்... ஐந்து பேருடன் இவளது அணி எழுதுமட்டுவாள் பகுதிக்கு கடமைக்காகச் சென்றது. அச்சமயம் அங்கு எதிரியானவன் ஊடுருவி ஒரு பெரும் உக்கிரப் போர் தொடுத்தான். எதிரியோ வலிந்து தாக்குதலை தொடுத்து எறிகணைகளை ஒன்றன் மேல் ஒன்றாக அந்த இடத்தில் குவித்த வண்ணமேயிருந்தான். அந்த நெருப்புக் கக்கும் நெடிய பெரும் இடத்தில் நெஞ்சு நிமிர்த்தி நின்று வீரத்தோடு போராடினர், பெண்புலிகள். அச்சமரிலே தான் எங்கள் அருட்சுடர் மானத்தோடு மண்ணில் வீழ்ந்தாள், வித்தாக..!

- செய்மதி தளிர்

வாழ்வின் வதைபடலையே சொல்லிச் சொல்லி காலம் கழிவதா? சாம்பிக்கிடப்பதா? இனிமையாக ஏதும் இல்லையா? இந்தக் காலம் இனித் திரும்பி வராதோ என்ற ஏக்கம் வரவில்லையா? வசந்த காற்று வீசவில்லையா? சுகந்தமாக ஏதும் ஆகவில்லையா? மழை பெய்த காலம் என்று வந்ததில்லையா? கொளுத்தும் வெய்யிலில் சோளகம் குளிர்ந்ததில்லையா?

நேருக்கு உச்சி பிரித்து தலை இழுக்க எனக்குத் தெரிந்துவிட்டது. விபூதி பூசுவது விசர்வேலை என்பதும் புரிந்துவிட்டது. பெட்டைகள் என்ன நைக்குங்கள்?

சேர்ட்டுக்கு பட்டின் இல்லாதபோது அக்கா அதைத் தைத்துத்தாறா. அவ்வளவுதான். அல்ல, அவாவின் கிறீமை நான் எடுத்து முகத்துக்குப் பூசுகிறபோது, கண்டும்

இரவி அருணாசலம்

வந்து சேரும். நான் சாமம் போல கதவு திறந்து உள்ளே போய்ப் படுத்தேன். விடியப்புறத்தில் அப்பா எழுப்பினார். மேசை முன் குந்த அப்பா முட்டைக் கோப்பி தந்தார்.

முன் அறையின் யன்னல் திறந்தால் உடன் துளசி மாடம் தெரியும். சுற்றி திருநீற்றுப் பச்சை மரங்கள் தெரியும். அதன் மணம் வருமாப்போல இருக்கும். துளசி மாடமும் அம்மாளின் ஒரு வடிவம்தான் என்று அப்பா சொன்னார். எனக்கு அப்படி ஒன்றும் தெரியவில்லை. நான்

எழுதினேன். அதற்காக ஒரு பாசை உருவாக்கினேன். அப்படிச் சொல்லக்கூடாது. நானும் பராபரனும் சேர்ந்து உருவாக்கின பாசை அது. வேறொரு தேவைக்காக உருவாக்கியது.

ஆறாம் வகுப்பு படிக்கிறபோது நானும் சிவமும் ஒரு பாசை உருவாக்கினோம். மரம் என்றால் `பகும்' வேம்பு என்றால் `மதகி' வேப்பமரம் என்றால் `பகுமதகி' இப்பிடி புதிய சொற்களை நானும் சிவமும் செய்தோம். அக்கா கோள்மூட்டி என்றுதான் நைக்கிறேன். அப்பா அதை

பெண்கூட அவளே! எழுபத்தேழு எலக்சனிலை தளபதி அமிர்தலிங்கத்திற்கு வோட்டுப்போட எனக்கு வயது ஆகவில்லை. ஆயினும் காலமை ஆறுமணிப் பூசைக்கு அம்மாள் கோயிலிலை போய்க் கும்பிட்டிட்டு, சீனன் கலட்டிப் பள்ளிக் கூடத்திலை `பூத்' திறக்க போய் கள்ள வோட் போட்டன்.

நான் கள்ளவோட் போட்டிருக்கத் தேவையில்லை. அம்மாளைக் கூடக் கும்பிட்டிருக்கத் தேவையில்லை. அமிர்தலிங்கம் நல்ல மஜோரிட்டியோடை வெண்டிருப்பர். தந்தை செல்வாவின் தொகுதி இது. தமிழீழத்திற்காக சர்வஜன வாக்கெடுப்பு இந்த எலக்சன் எண்டு சொல்லியிருக்கினம். நல்ல மஜோரிட்டியோடை வெண்டால் அடுத்த தைப் பொங்கலுக்குள்ளை தமிழீழம் எண்டும் சொல்லியிருக்கினம்.



# காலம் ஆகி வந்த கதை

## 22

# என் கண்ணல்லவா நீ

எதுக்கும் நான் `இல்லை' என்று ஏதும் பதில் சொல்லமாட்டேன். எல்லாக் கேள்விகட்கும் `இருந்தது' என்று பதில் சொல்வேன். `ஒரு காலம் இருந்தது' என்று மேலும் ஒரு வரி சேர்ப்பேன். வசந்த காற்று வீசியது. சுகந்த காலம் வந்தது. மழை பெய்தது. சோளகம் குளிர்ந்தது. எல்லாம் ஒரு காலம். பிறகு ஏதும் ஆகவில்லை. எல்லாம் சோகத்தில் ஆழ்ந்தது.

என்னை அன்புகொண்டு ஆதரிக்க அம்மா இருந்தா. கருணை கொண்டு காத்திருக்க அப்பா இருந்தார். படுக்கை அறையில் போடப்பட்ட ஸ்பிறிங் கட்டிலில் வெய்யில் காலத்தில் வேர்வை என்று விலகி விலகிப் படுத்தாலும், மழைக்காலத்தில் குளிருக்கு நானும் அக்காவும் கட்டிப் பிடித்துக்கொண்டு படுத்தோம். அக்கா கலியாணம் முடித்த பிறகும் அப்பிடி என்னுடன் படுத்தா. நான் பள்ளிக்கூடம் வெளிக்கிட என் முகத்திற்கு அப்பாமல் அளவா பவுடர் பூசினா. உச்சி பிரித்து தலை இழுத்தா. விபூதி எடுத்து நெற்றியில் சின்னக்குறி இழுத்தா. நான் சிரிக்க கன்னத்தில் குழிவிழ, கன்னத்தை ஆசையாக் கிள்ளினா. கன்னத்திலை கொஞ்சினா. பொத்தான் இல்லாத சேர்ட்டை நான் போட ஊசி எடுத்து, வெளியாலை தெரியாதவாறு, பொத்தான் இருக்கிற இடத்திலை குத்தியும் விட்டா.

`ரவி இப்ப நல்ல வடிவா வாறான்' என்று நிர்மதியக்கா சொல்ல, அக்கா பெருமிதமாச்சிரித்தபோது, அக்காவுக்கு மூத்தவன் பாபுவும், இளையவன் கோபியும் பிறந்து விட்டனர். அக்காவுடன் பாபுவும் கோபியும்தான் படுத்தனர் என்பது போக, அப்பாமல் கையிலை கொஞ்சமாய் கொட்டி பவுடர் பூச எனக்குத் தெரிந்துவிட்டது.

காணாமல் இருக்கிறா. ஓடிக்கொலோனை எடுத்து சேர்ட்டில் தெளிக்கிறபோது வீடு முழுக்க மணத்தாலும், ஒன்றும் மணக்காத மாதிரி இருக்கிறா. `நல்லாப் படிக்கிறியோ? கவனமாப்படி' என்று விசாரிக்கிறா. மேலும் நான் கொப்பி, பேனை வாங்க சில்லறையும் தாறா.

வீட்டின் முன் அறையை எனக்காக ஒதுக்கினேன். மேசை விரித்தேன். அலுமாரியில் புத்தகம் அடுக்கினேன். மேசையில் படிக்கத் தேவையான புத்தகங்கள், கொப்பிகள், பேனை, பென்சில், மேலும் தேவையான சாமான்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டுக் கிடந்தன. மூன்று நேரத்திற்கு சாப்பாட்டுக் கோப்பையும், விடிகாலையிலும், பகல் பதினொரு மணி போலையும் பொழுதுபடவும் தேத்தண்ணிக் கோப்பையும் மேசைக்கு வந்தன.

அறைக்குள் கட்டில் போட முயன்றேன். அப்பா விடவில்லை. பாம்புப் பயம் என்றார். அந்த அறைக்கு சீற் போட்டிருக்கு. சீற்றினால் பாம்பு வந்துவிட முடியாது. வீட்டுக்குள்ளை ஓடுதான். அங்குதான் பாம்பு வாறது சுகம். இது பாம்புப் பயம் அல்ல. பேய்ப் பயமும் அல்ல, பேய்ப் பயமும் எனக்கு கொஞ்சம் கொஞ்சமா

போய்க்கொண்டிருக்கு. இது வேறேதோ பயம்.

எத்தினை மணியானாலும் நான் வீட்டினுள் சென்று படுக்க வேண்டும். அப்பதான் அப்பாவின் அம்மாவின் பயம் போகும். அவர்கள் நித்திரையில் நிம்மதி

பொழுதுபட்ட ஆறுமணிப் பூசைக்கு அம்மாள் கோயிலுக்கு அடிக்கடி போனேன். எனக்கு எதையும் செய்து தா என்று அம்மாளைக் கேட்பதில்லை. கேட்டுக்கேட்டு அலுத்துப் போனேன் என்றல்ல. அவளின் முன் கண்மூடி நிற்பதில் ஒரு சுகம். அவள் தீர்த்தம் குடிப்பதில் ஒரு திருப்தி. விபூதி, சந்தனம் பூசுவதில் ஒரு புனிதம். அம்மாள் என்றால் எனக்கு கொள்ளை ஆசை. வெறி மிகுந்த அன்பு. என்

தெய்வம் அவள். தேவதை அவள். சக்தி அவள். எனக்கு எல்லாமே அவள்! அவள் மூக்கைப் பிடிக்கவேணும். தலையைத் தடவ வேணும். கன்னம் கடிக்க வேணும். அவள் கைபிடித்து கனக்கக் கதை பேச வேணும். என் மகாசக்தி அவள்!

எனக்குப் படிக்க நிறைய இருந்தது. இலகுவா இருந்தது. எந்த நேரமும் படித்தேனல்லன். ஆனால் படிக்கிற நேரத்தில் படித்தேன். இரவாகிறபோது கட்டாயம் படித்தேன். பிறகு அன்றைய நாளின் நிகழ்வுகளை டயறியில் குறித்துவிட்டுப் படுத்தேன்.

என்னிடம், அழகிய, இலயிக்கக்கூடிய, இனிய கனவு போன்ற இரகசியங்கள் இருந்தன. பிறர் அறிந்தால் நான் வெட்கப்படத்தக்க, கூச்சப்படத்தக்க இரகசியங்கள் அவை. டயறியை அம்மா பார்க்கமாட்டா. கதவு திறந்திருந்தால் அப்பா சிலவேளை பார்க்கலாம். எனவே ஒருவருக்கும் விளங்காத பாசையில் நான் டயறி

அறிந்து விட்டு, கிணற்றடியில் இதரை வாழை மரத்தின் கீழே வைத்து எசினார். `நீங்கள் என்னடா தமிழை அழிக்கப்போறியளாடா?, தெலுங்கு, மலையாளம், கன்னடம் எல்லாம் இப்பிடித்தான். தமிழிலை

இருந்து வந்தது. நீங்களும் ஒரு புதுப்பாசையை கண்டு பிடிச்சு தமிழை அழியுங்கோ'

அப்பா திட்டிவிட்டுப் போன பிறகு `மாமாவுக்கு விசர். நாங்கள் தமிழை அழிப்பமே!' என்று சிவம் முணுமுணுத்தான். ஆயினும் தமிழை அழியவிட அவனும் விரும்பவில்லை. நானும் விரும்பவில்லை. பாசை உருவாகவில்லை.

ஆனால் நானும் பராபரனும் உருவாக்கின பாசை வேறு அது தமிழை அழிக்காது. அ,ஆ, என்கின்ற உயிர் எழுத்துக்களுக்கு 1,2 என்று போட்டோம். க்,ங்.. என்று மெய்யெழுத்துக்களுக்கு A,B என்று போட்டோம். `நந்தினி சிரித்தாள்' எண்டதை Hihg3 R3 c3 l3 gg2p என்று எழுதினேன். அப்படி நான் டயறியில் குறித்தேன். நந்தினி சிரிக்கிறதே அன்றைய பொழுதுக்கு சொகுசாக இருந்தது. சொர்க்கமாக இருந்தது.

என்னைப் பார்த்து எந்தப் பெண்ணும் அப்போது சிரித்ததில்லை. தூரத்தில் என்னைக் கண்டவுடனேயே மூஞ்சையை நீட்டினார்கள் என்று சொல்லலாம். என்னைப் பார்த்து முதல் அன்பாகச் சிரித்தவள் நந்தினி. கதைத்ததும் கூட அவள்தான். ரவி என்று பெயர் சொல்லிக் கூப்பிட்ட வேறொரு

அதுக்குப் பிறகும் தளபதியா இருந்து கொண்டு அமிர்தலிங்கம் வெல்லுறது கஷ்ரமே? ஆனாலும் தமிழீழம் கிடைக்கவேணுமெண்ட வெறி. அஞ்சு வோட் போட்டன்.

கணேசமாமா வீட்டிலை வேணு அண்ணை தேசிக்காயாலை பூசின மையை தேய்ச்சு தேய்ச்சு அழிச்சுவிட சிறீகாந்தனண்ணை ஆராற்றையோ பேரிலை துண்டுகளைத் தந்துவிட போய்ப்போய் வோட்டு போட்டன். பொலிஸ் வந்ததிலை அஞ்சு வோட்டோடை நிப்பாட்டிட்டன். மத்தியானம் பொலிஸ் ஜீப் வந்தபோது மடாரெண்டு மேசை இடிக்க வேணு அண்ணை மேசைக்குக் கீழே ஒளிச்சார். நான் கோடிக்குப் பின்னாலை ஓடி தப்பிப் பிழைச்சன்.

நந்தினி என்னைப் பாத்து, வாயிலை கையை வைச்சு ஆவெண்டு ஆசையாச் சிரிச்சிருக்காட்டிலும் நான் அஞ்சு வோட் போட்டிருப்பன். ஆனால் அவள் அப்பிடிச் சிரிச்சது தந்த சந்தோசம் மிகக்கூட. அன்று முழுக்க சிலிர்த்து சிலிர்த்துப் புளுகிக் கிடந்தேன். அம்மாளைக் கும்பிட்டிட்டு வந்து கியூவிலை நிக்கிறன். பொம்பிளைகளின்ரை கியூவிலை பாத்தால் நந்தினி! என்னைக் கண்டு வாயிலை கைவைச்சு ஆவெண்டு சிரிச்சாள்.

`ஓகோ, கள்ளவோட்போடப் போறியோ?'

(தொடர்ச்சி 28ம் பக்கம்...)

IVRY SUR SEINE (94) இல் 5 வருட காலமாக திறமையான ஊழியர்களைக் கொண்டு வெற்றிகரமாக இயங்கிவருகிறது !

SIVAS PROPRETE S.A.S

SIVAS PROPRETE S.A.S
BP-04 / 53 RUE MOLIERE
94201 IVRY SUR SEINE CEDEX
TEL: 01 46 70 15 08 / Fax: 01 46 70 15 88

-வீட்டின் அனைத்து திருத்த வேலைகள் – மின்சாரவேலைகள்-புல்வெட்டுதல்-பூச்சிக்கு மருந்துவைத்தல்- மற்றும் வீட்டின் தளபாடங்கள் ஏற்றி இறக்குவதற்கும் உள்ளூர் வெளியூர் பயணங்களுக்கும் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய வாகனங்கள் சாரதியுடன் வாடகைக்கு உண்டு

E-Mail: Sivas.proprete@wanadoo.fr - site:www.sivas-proprete.com

# :.ttn தமிழ்த் தொலைக்காட்சி இணையம்

நிகழ்ச்சி நிரல் 19-08-2004 முதல் 25-08-2004 வரை

| நேரம் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| 07:00 | மங்கள வாத்தியம் | காலைக் கலசம் | மங்கள வாத்தியம் | இசையருவி | மங்கள வாத்தியம் | காலைக் கலசம் | காலைக் கலசம் |
| 07:30 | யோகாசனம் | யோகாசனம் | அரும்புகள் | அரும்புகள் | யோகாசனம் | யோகாசனம் | யோகாசனம் |
| 08:00 | புத்தம் புதுக்காலை | புலரும் பொழுது புலரும் | சைவநிகழ்ச்சி | கிறிஸ்தவ நிகழ்ச்சி | புத்தம் புதுக்காலை | புலரும் பொழுது புலரும் | புலரும் பொழுது புலரும் |
| 08:30 | செய்தி நேரம் | செய்தி நேரம் | புலரும் பொழுது புலரும் | விளையாட்டு | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் | ஒளிக்கீற்று | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | இசைச் சிற்பிகள் | ஜன்னலைத் திறந்துவையுங்கள் | அப்பா வாரம் | வணக்கம் ஐரோப்பா | சித்திரம் பேசுதடி | வெள்ளித்திரை | நேருக்கு நேர் |
| 11:00 | என்றென்றும் புன்னகை | திரைமுகம் | | தாயகவலம் | என்றென்றும் புன்னகை | வைத்தியலிங்கம் ஷோ | நாடி |
| 11:30 | சிறகு சுப்பர் | படலைக்குப் படலை | | புதினக்கண்ணாடி | தாயகவலம் | கலிவூட் நேரம் | நையாண்டி மேளம் |
| 12:00 | வானவில் | வானவில் | | நாவூற வாயூற | வானவில் | வானவில் | வானவில் |
| 12:30 | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | பார்தேன் பகர்ந்தேன் | முளைஎவிடும்பதியன் | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | இன்றைய நேயர் |
| 13:00 | பஞ்சமி | பஞ்சமி | ஹலிவூட் நேரம் | திரைமுகம் | பஞ்சமி | பஞ்சமி | பஞ்சமி |
| 13:30 | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் |
| 14:00 | திரைவிருந்து | திரைவிருந்து | திரைவிருந்து | திரைவிருந்து | திரைவிருந்து | திரைவிருந்து | திரைவிருந்து |
| 16:30 | பார்த்தேன் பகர்ந்தேன் | ஒளித்தடம் [குறும்படம்] | வெள்ளித்திரை | திரையிசை வரிசை | நேருக்கு நேர் | புதினக் கண்ணாடி | முளைவிடும் பதியன் |
| 17:00 | உளவியலும் நாங்களும் | ஜேர்மன் நேரம் | நலவாழ்வு | விடுதலைப் பண்கள் | கலைச்சரம் | நினைவலைகள் | கலைமுற்றம் |
| 17:30 | அப்பாவுக்காக | அப்பாவுக்காக | வண்ணச்சிறகடித்து | ஓவியா | அப்பாவுக்காக | அப்பாவுக்காக | அப்பாவுக்காக |
| 18:00 | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது | குண்டக்கா மண்டக்கா | படலைக்குப் படலை | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது |
| 18:30 | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது | தாயக வலம் | ஒளித்தடம் [குறும்படம்] | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது | மயக்கும்மாலைப் பொழுது |
| 19:00 | அவளும் பெண்தானே | அவளும் பெண்தானே | கோலிவூட் பார்வை | வைத்தியலிங்கம் ஷோ | அவளும் பெண்தானே | அவளும் பெண்தானே | அவளும் பெண்தானே |
| 19:30 | அப்பா | அப்பா | கதிரவன் | கதிரவன் | அப்பா | அப்பா | அப்பா |
| 20:00 | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் | செய்தி நேரம் |
| 20:30 | கோபுரம் | கோபுரம் | ஜலக்கிரீடை | ஜலக்கிரீடை | கோபுரம் | கோபுரம் | கோபுரம் |
| 21:00 | அத்தை | தேசிய விளையாட்டு விழா 2004 | நையாண்டி மேளம் | விஞ்ஞானமும் நாமும் | கணினி விழிகள் | அத்தை | விழிகள் |
| 21:30 | விளையாட்டு | திரைவிருந்து | திரைவிருந்து[புதுப்படம்] | திரைவிருந்து | திரைவிருந்து | தாயகவலம் | ஜன்னலைத் திறந்து வையுங்கள் |
| 22:00 | மறக்கத்தகுமோ | | | | | எட்டாதகொப்பெல்லாம் தட்டிவா | ஆடுகளம் |
| 22:30 | மறக்கத்தகுமோ | | | | | எட்டாதகொப்பெல்லாம் தட்டிவா | ஆடுகளம் |
| 23:00 | சித்திரம் பேசுதடி | | | | | செய்திக் கண்ணோட்டம் | திசைகள் எத்தனை |
| 23:30 | இரவின் தாலாட்டு | | | | | | |

TTN,. 5-7, Rue Emile Zola, 93120 La Courneuve

Tél : 0033 1 48 39 34 29/Fax : 0033 1 48 39 31 36

த ர ணி எ ங் கு ம் வா ழு ம் த மி ழ ரி ன் பி ம் ப ம்




# பாசல் ரவி கடை

ஆம் இது நிஜம், புதிய டிசைன்களில், அனைத்தும் 70%கழிவில்



| | | |
|---|---|---|
| பஞ்சாபி | 5-SFRல் | இருந்து |
| டெனிம் | 5-SFRல் | இருந்து |
| சேட் | 5-SFRல் | இருந்து |
| சாறி | 7-SFRல் | இருந்து |
| T-Shirt | 1-SFRல் | இருந்து |
| Audio-CD- | 1-SFRல் | இருந்து |
| மணிக்கூடு | 9-SFRல் | இருந்து |





**தங்கநகைகள் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். கல்லு, முத்து, Bombay Design உட்பட ஒன்றுக்குமே கூலி அறவிடப்படமாட்டாது. எடைக்கு மட்டுமே பணம் செலுத்தினால் போதும்.**

பாசல் ரவி கடை - 061 / 272 90 30 - 061/272 09 90 - 079/356 22 78

# விழித்தெழுந்து ஒன்றிணைந்தால்

இதனை யாருமே மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் படிமுறை வளர்ச்சி இதனை உறுதியாய் வெளிப்படுத்துகின்றது. விடிவுக்கான பாதையில் பாதிக்கு மேல் தாண்டிவந்துவிட்ட இந்நிலை சாதாரணமாக வந்து விடவில்லை. எத்தனையோ உயிர்த்தியாகங்கள், எண்ணில்லா அர்ப்பணிப்புகள், கடுமையான உழைப்பு, ஒன்றிணைந்த செயற்பாடு. இத்தனைக்கும் மேலாக உயரிய உறுதியான தலைமை.


விடிவினைக் காணவேண்டுமெனில் உறுதியாக, உண்மையாக உழைக்கவேண்டும். அந்த வகையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்களின் வாழ்வில் ஒளி தோன்ற என்ன வழி என்று யோசிக்க வேண்டும். அதற்கு முதலில் அவசியமானது விழிப்புணர்வு. இந்த நிலையை ஏற்படுத்த ஒன்றிணைந்த உழைப்புத்தான் மிகமிக முக்கியமானது. எழுத்துக்களும் பேச்சுக்களும் விழிப்புக்கான தூண்டல்களை ஏற்படுத்தலாம். ஆனால் அத்தோடு நின்று விட்டால் போதாது. ஒன்று சேர்ந்து செயலாற்றவேண்டும். அவ்வாறு செயற்பட வேண்டுமானால் முதலில் செய்யவேண்டியது என்ன?

முதலில் பெண்கள் தம்மனதுக்குள் வைத்து குமுறும் வேதனைகளை மனம்விட்டுச் சொல்ல ஓர் நம்பிக்கையான இடம் வேண்டும். தாம் கூறும் விடயங்களைக் கேட்டுவிட்டு அதனை இன்னும் நாலுபேருக்கு கதையாகக் கூறி வேடிக்கையாக்கிவிடும் மனிதர்களிடம் சொல்லமுடியாது. அதனை உண்மையான உணர்வுடன் உள்வாங்கும் மனிதநேயம் மிக்கவர்களை இனம் காணவேண்டும். ஆனால் அதற்கு அவர்களின் வாழ்க்கைச் சூழலில் கிடைக்கும் சந்தர்ப்பம் மிகமிகக்குறைவு.

வீடு, குடும்பம் என்ற சிறிய வட்டத்துக்குள் வாழ்வதற்குத் தான் பெரும்பாலான பெண்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். குடும்பத்துக்காக உழைப்பது மட்டுமே அவர்களின் கடமையாகப் பணிக்கப்பட்டுள்ளது. அதற்காக வீட்டிலும் வெளியிலும் வேலை செய்யவேண்டிய நிலை. பெரும்பாலான ஆண்கள்? வெளியே சென்று உழைத்து குடும்பத்தின் பொருளாதார நிலையைக் கவனிப்பது மட்டுமே தமது கடமை என நினைத்துக் கொள்கின்றார்கள்.

அதனால் வீட்டுவெலைகள் முழுவதும் பெண்மேல் சுமத்தப்படுகின்றது. வெளியே வேலைக்குப் போய்வந்தாலும்கூட பெண்தான் அவற்றைச் செய்யவேண்டும். நாடுவிட்டு வந்து மேலைக்கலாச்சாரத்துள் வாழ்கின்றோம் என்று பெருமை பேசுபவர்களும் பெண்தான் வீட்டுவேலைகள் யாவற்றையும் செய்யவேண்டும் என்பதில் விடாப்பிடியாகவே இருக்கின்றார்கள். இதனால் பெண்களுக்கு வீடு, குடும்பம் என்ற எல்லையைத் தாண்டி சிந்திக்க வாய்ப்போ நேரமோ கிடைப்பதில்லை. வேலைக்குப் போகும் இடத்திலும் வீட்டைச் சுற்றிய சிந்தனைகள் மட்டுமே அவளுக்குள் நிறைந்திருக்கும். இதனைத்தவிர உறவினர், நண்பர்களின் பிறந்தநாள், திருமணம் உட்பட்ட குடும்பம் சார்ந்த நிகழ்வுகளுக்கு செல்லும்போதும் வீடு, குடும்பம் என்ற வட்டத்தைச் சுற்றிய உரையாடல்களே இடம்பெறும். அதனால் இந்தச் சிறிய வட்டத்தை விட்டு வெளியே வந்தால்த்தான், பெண்கள் தங்களுக்குள் குமுறும் நிலையில்மாற்றம்வரும். பரந்த அளவில் உலகத்தை பார்க்கும்போதுதான் அறிந்துகொள்ளவேண்டியவை பலப்பல என்பது தெரியவரும். தேடவேண்டும், தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவல் அதிகரிக்கும். இந்தவேளையில்த்தான் இவர்களுக்கு தங்களுக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்களை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அந்த ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும் என்ற ஆவல் அதிகரிக்கின்றது. இதனால் தம்மீது அதீத நம்பிக்கை வருகின்றது. சிந்தனைவிரியும்போது மனம் உறுதியாகும் என்பது உண்மை.

குடும்பம், வீடு என்ற சிறிய வட்டத்தை விட்டு வெளியே வருதல் என்னும் போது குடும்ப அமைப்பை விட்டோ, அதனைச் சிதைத்தோ அல்ல என்பதில் சரியான தெளிவு இருக்கவேண்டும். இதனை மனதில் பதித்து, உலகை நோக்கவேண்டும். தம் நிலையில் நின்று விழிகளை அகலத் திறக்கும் போதுதான் தடம்புரளாமல் உறுதியாக அடுத்த அடியை எடுத்து வைக்கமுடியும்.. உறுதியாகக் கால்பதித்து எழுந்து நின்றால்த்தான், தொடர்ந்து சரியாகச் செயற்படமுடியும். இந்த எண்ணங்களை மனதிலிருத்தி நல்லனவற்றை தேடித் தெரிந்து தம் ஆளுமைத்திறனை விருத்தி செய்ய பெண்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். முயற்சியை எடுப்பதற்கான முதல் அடியை எடுத்து வைப்பது கூட அவ்வளவு சுலபமான வேலை அல்ல. சோகங்களை தமக்குள் புதைத்து எவரிடமும் சொல்லி ஆறிட வழியின்றி தவிக்கும்



## விடிவு நிச்சயம்!

பெண்களின் வீதாசாரம் அதிகமாகும். இந்த சோகங்களிலிருந்து விடுபட்டால்த்தான் பெண்களால் தம்விழிகளை உலகச்செயற்பாடுகளை நோக்கி செலுத்தமுடியும். தம் துயரங்களை சொல்லக்கூடாதவர்களிடம் சொல்லிவிட்டு அவர்களிடமிருந்து விடுபடவும் முடியாமல், வேறு எவரிடமும் அதனைச் சொல்லவும் முடியாமல்த் தத்தளித்துத் திண்டாடும் பெண்கள் பலர். அதனால் முதலில் மனிதர்களை இனங்காணத் தெரிந்து கொள்ளவேண்டும். சிலரை குறுகிய காலத்துள் தெரிந்து கொள்ளலாம். இன்னும் சிலரை பலநாட்களின் பின் அறிந்து கொள்ளலாம். வேறு சிலரை எவ்வளவு காலம் சென்றாலும் தெரிந்து கொள்ளமுடியாது. மனிதர்களை இனம்கண்டு துயரங்களைச் சொல்வதற்கிடையில் சோகங்களுக்குள் புதைந்து நோயாளி ஆகிவிடக்கூடிய ஆபத்தும் உண்டு. அப்படியானால் இதற்கு வழி என்ன? அந்த வழிக்கான ஓர் முயற்சிதான், பெண்களுக்காக விரியும் இந்தப்பக்கம்.

அன்பான சகோதரிகளே!

உங்களுக்கானது இந்தப் பக்கம். உங்களின் உள்ளக் குமுறல்களை இதனூடாகப் பகிர்ந்து கொள்ளுங்கள். இப்பகுதி பெயர்களைப் பிரபல்யப்படுத்துவதற்கான படைப்புக்களை வெளியிடுவதற்கான பகுதி அல்ல. துயரங்களைச் சுமக்கமுடியாமல் சுமக்கும் பெண்களின் உள்ளத் தவிப்புக்கள் வெளிப்பட உதவும் களம் இது. துன்பங்களுக்கான அடிப்படைக் காரணங்கள், அதனால்த் தொடரும் சிக்கல்கள் உட்பட சகல விடயங்களையும் அறிந்து, ஆராய்ந்து அதனடிப்படையில் தீர்வுக்கான வழிகாண்பதே இந்த முயற்சியின் நோக்கமாகும். பெயர்களுக்காக எழுதுபவர்களுக்கு பல களங்கள் உண்டு.

ஆனால் இப்பகுதி வெறும் எழுத்துக்கான இடமல்ல. பெண்களின் விடிவுக்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகள், எங்கெங்கு பெண்களுக்கு பிரச்சனைகள் உள்ளதோ அதனை வெளிப்படுத்தல் (அவர்களின் பெயர்கள், முகவரிகள் உட்பட்ட சகலவிடயங்களுடன்), பெண்களின் முன்னேற்ற செயற்பாடுகள் (சமூகம் சார் நடவடிக்கைகளில் அவர்களின் சேவைகள் உட்பட்ட விடயங்களுடன்) போன்ற விடயங்களைத் தாங்கியே இப் பக்கம் வரவுள்ளது. அதனால் புலம்பெயர்ந்து வந்து துயரங்களே வாழ்வாகிவிட்ட பெண்களுக்கான விடிவுக்காக உழைப்பது பெண்கள் ஒவ்வொருவரின் கடமையாகும் என உளமார நினைக்கும் அனைவரும், இந்தப் பகுதியை பயன்படுத்த முன்வாருங்கள். இது உங்கள் பகுதி.

ஒருவரின் திறமை அவரை பிரபல்யப்படுத்த மட்டுமே காரணமாக அமையுமென்றால் அது பிரயோசனமற்றது. அவர்களின் ஆற்றல் சமூகமேம்பாட்டுக்கு, தேசமுன்னேற்றத்துக்கு பயன்படுமேயானால்தான் அதற்கு ஓர் அர்த்தமும், பெறுமதியும் உண்டு. எழுத்துக்களுடன் நின்று விடுவது அல்ல எமது நோக்கம். தவிர்க்க இயலாமல் மறைக்கப்படும் பெண்களின் பிரச்சனைகள் வெளிக்கொண்டுவரப்படவேண்டும். அவர்களின் துயரங்களை அனைவரும் அறியவேண்டும். அனைவரையும் ஒன்றிணைத்து அதற்கான தீர்வினை நோக்கி நகரவேண்டும் என்பதே எமது தீர்மானம். துயரங்களை மட்டுமல்லாமல் பெண்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் விதத்திலான தமது அனுபவங்களையும் பெண்கள் பகிர்ந்து கொள்ளலாம். அத்துடன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் வரவேற்கப்படும்.

பகிர்ந்து கொள்ளுங்கள் சகோதரிகளே!

இந்தப் பகுதியை சரியாகப் பயன்படுத்த முன்வாருங்கள். இதனூடாக உங்கள் துன்பங்களுக்கு முடிவுகட்டப்படும், தெளிவான விடிவு கிட்டும் என்ற நம்பிக்கையுடன் இதற்குள் வாருங்கள். எண்ணங்களை மேம்படுத்துங்கள் என்னும் நூலில் இருந்து பிரச்சனைகளைத் தீர்ப்பதில் முக்கியமாகக் கருதப்படுவது புரிந்து கொள்ளுதல் என்பது முக்கியமாகும். பிரச்சனையை தீர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்ற

மனோதத்துவ நிபுணர்கள், மனவியல் சிகிச்சை அளிப்பவர்கள், ஆலோசனை கூறுபவர்கள் ஆகிய அனைவருமே புரிந்து கொள்ளுங்கள் என்றுதான் சொல்லுகின்றார்கள். புரிந்து கொள்ளுதல் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் முக்கிய பங்கு வகிப்பதால், நம்முடைய வாழ்க்கையில் எல்லோருக்குமே தோன்றுகின்ற பிரச்சனை எதுவென்று பார்க்கலாம். பிரச்சனையிலிருந்து தப்பிப் போவதற்கு எவ்வளவு சக்தி தேவைப்படுகின்றதோ அதே அளவு சக்திதான் பிரச்சனையைப் புரிந்து கொண்டு வெற்றி கொள்வதற்கும் தேவையாக இருக்கின்றது.

பிரச்சனையிலிருந்து தப்பிப் போக முயன்றால் அது தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

பிரச்சனையைப் புரிந்து கொண்டு தீர்க்க முயலும்போது அது உங்களைவிட்டு முற்றிலுமாக நீங்கிவிடும்.

மனம் சம்பந்தப்பட்ட பல நோய்களுக்கும், உணர்ச்சி சம்பந்தப்பட்ட பல நோய்களுக்கும் தீர்க்கப்படாத பிரச்சனைகள் பளுவாகி விடுவதே காரணம். இதிலிருந்து விடுபட ஒரே வழி, தோன்றுகின்ற பிரச்சனைகளை அந்த அந்த வேளையிலேயே தீர்த்து விடுவதுதான். இதனால் பிரச்சனைகள் சேர்ந்து போவது தடுக்கப்படுகின்றது. ஆனால் இதை எப்படிச் செய்வது?

(அடுத்த வாரம்)

திருமணம் முடித்த காரணத்தால் யேர்மனி வந்து ஒரு வருடமேயான நிலையில் ஒரு இளம் பெண் இவ்வாறு கூறுகிறார்.

நான் ஏன் இங்கே வந்தேன்? இப்படியொரு வாழ்க்கைக்காகவா என்னுடைய பெற்றோர் இங்கே அனுப்பி வைத்தனர்? வேலைகள் எவ்வளவு செய்தாலும் நான் களைப்படையமாட்டேன். அதற்காக நான் என்றுமே கவலைப்படவில்லை. ஆனால் என்னை ஓர் பெண்ணாக, ஓர் மனிதப்பிறவியாக என் கணவர் எண்ண மறுப்பதைத் தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனது எந்த அபிப்பிராயத்தையும் கவனத்தில் எடுக்காமல் என்னை அவர் உதாசீனப்படுத்தும் ஒவ்வொரு சமயத்திலும் உடைந்து உடைந்து எனக்குள்ளேயே வேதனைகளைப் புதைத்து இன்று ஓர் மனநோயாளியாகி விட்டேன். அதற்கான மருந்துகளுடன் வாழுகின்றேன். இதற்கும் அவரிடம் நித்தம் ஏச்சுக்கள் தான். ஆனால் இதற்கு தான் தான் காரணம் என்பதை அவர் உணரவில்லையே. (தன் பெயரை வெளியிடவேண்டாம் என இப்பெண் கூறியதால் பெயரைக் குறிப்பிடவில்லை)


**அனைத்து தொடர்புகளுக்குமான முகவரி:**

T.F.O
POST FACH 1630
75406, MÜHLAHER
GERMANY

# நத்தார் தினத்தை முன்னிட்டு



## Financial Consulting Gmbh & Sarah Star Thun



## இணைந்து வழங்கும்
## சுவிஸ் ஜனரஞ்சகப் பாடல் போட்டி



## B.H அப்துல்கமீத்தின் பாட்டுக்குப் பாட்டு

சிறந்த பாடகர் பாடகிக்கான தெரிவும், சிறந்த பாடகர் பாடகிக்கான நேரடித்தெரிவில் வெற்றிபெறுவோருக்கு பி.எச் அப்துல்கமீத்தின் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். மற்றும் சுவிஸ்



Magic கரோலின் இசைக்குழுவின் இசைமெட்டுக்களும்

Bern, Zürich ஆகிய மாநிலங்களின் நடைபெறும் இந் நிகழ்ச்சியின் நுழைவாயிற் சீட்டுக்கான அதிர்ஸ்டலாபம் Zürich மாநிலத்தில் குலுக்கப்படும்.

சனி + ஞாயிறு ஆகிய 2 நாட்கள்

1- வது பரிசு 5 பவுன் நெக்லஸ்
2- வது பரிசு 4 பவுன் நெக்லஸ்
3- வது பரிசு 3 பவுன் நெக்லஸ்
4- வது பரிசு 2 பவுன் சங்கிலி
5- வது பரிசு 1 பவுன் சங்கிலி

மற்றும் 40 வரையான ஆறுதல்பரிசுகள்......

இடம்: 25.12.2004 சனி: Hotel National Bern, Bahnhof ற்கு அருகாமையில்( Hrischengraben)
26.12.2004 ஞாயிறு: Salmansaal, Schlieren Zürich

குறிப்பு: B.H அப்துல்கமீத்தின் நேரடித்தெரிவு நடைபெறுவதால் தெரிவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 30.10.2004 ற்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம். அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

Anisch Tel: 079.757 74 75 | 078.605 99 41
031.911 03 38

- எமது நிறுவனத்தால் ஏற்கனவே வாடிக்கையாளர்களாக (Credit) இருப்பவர்களுக்கும், எம்மிடம் வங்கிக்கடன் திட்டத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்வோருக்குமான பரிசுத் திட்டம். 25.12.2004 ல் சுவிஸ் ஜனரஞ்சகப் பாட்டுப் போட்டியில் 25 வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

இதேபோல் எமது நிறுவனத்தில் மருத்துவக்காப்புறுதி - (Krankenkasse)திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்தும் இணைந்து கொள்பவர்களுக்கும் பரிசுத்திட்ட முறை: பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: K.Anandan (Anisch)
Gantrischstr 11, 3052 Zollikofen
Tel:031.911 03 38 Fax:031.911 58 94
Natel: 079.757 74 75

Solo Movies GmbH
Audio.Video.Kommunikationtechnik
Swiss-London-Srilanka
Tel.032 652 52 45.078 733 30 76
www.solomovies.com
Mail:vasi@solomovies.ch

Ammu Travels

S.K.TRADING GMBH
Quellen str 1.
8005 Zürich

Sri Sai Enterprise
Sihlhallen str 19
8004 Zurich

சிகரம்

LUXURY TRAVELS
Badenerstr. 125
8004 Zürich

Mohan Jewellery & Textiles

Sakthy Jewellery

SPT Textile & Jewellery
Elisabethenanlage 9
4051 Basel

Ravi Jewellery

Jasijanauth

Suji Jewellery

AMBAL STORE
அம்பாள் ஸ்ரோர்ஸ்

## அதிசயம் ஆனால் உண்மை

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**விமல் விநியோக நிலையம்**
**VIMAL DISTRIBUTION**

1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98

குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

## போட்டோ பாலா

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
**Photo Bala**
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

## சிறிய விளம்பரங்கள் இப்பகுதியில் எதிர்பார்க்கப் படுகின்றன.

## Asha Video Movies

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073

Pub-Fr-39

## RESTAURANT ROYAL TANDOURI

உங்கள் வீட்டில் நிகழும் விசேட வைபவங்களுக்கான உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடன் வாங்கி உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்

## RESTAURANT ROYALTANDOURI

100 பேருக்குட்பட்ட கொண்டாட்டங்களுக்கு குளிரூட்டப்பட்ட மண்டம் ஒழுங்கு செய்து தரப்படும்
*Métro: Bellville*
தொடர்புகளுக்கு:
01 43 14 67 49
06 64 00 66 62
06 10 59 37 44

## பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி! உங்கள் பற்களில் பிரச்சினையா?



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52

என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

## EUROCONSULT SARL TRADUCTIONS

**மொழி பெயர்ப்பு நிலையம்**

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

## RHYTHM

விசேட விலைக் கழிவு !
விசேட விலைக் கழிவு !
விசேட விலைக் கழிவு !




- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

Telephone Cards ▶ Video Filming ▶ Photography ▶ Party Shop

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail : info@rhythmentertainments.com

Website :rhythmentertainment.com

## நித்தி வாகன சேவை

உங்கள் வீட்டுத் தளபாடங்களை பெரிய (20M³) வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி : 01 48050214/06 13342518/06 07348051

மங்கையர் மனம் கவரும் அசல் 22கரட் தங்க நகைத் தெரிவுகளுக்கு

## KMS JEWELLERS

கே.எம்.ஜுவலர்ஸ்
6, Rue Perdonnet
75010 Paris
Métro : La Chapelle

Tél : 01 44 72 08 02 - Fax : 01 44 72 04 78 - Port : 06 61 86 08 02

## சகல திருத்த வேலைகளுக்கும்

ரெஸ்ரோரண்ட் (BAR) அடித்தல், வீட்டு கூரை வேலைகள், சமயலறை அலுமாரிகள், படுக்கையறை அலுமாரிகள் அனைத்து வேலைகளுக்கும், மாபிள் பதித்தல், மின்சார இணைப்புக்கள், குடிநீர் இணைப்புக்கள், பேப்பர் ஒட்டி பெயின்ற் அடித்தல், இரும்பு வேலைகள், கடை இரும்பு சட்டர், P.V.C. ஜன்னல் மாற்றுதல் போன்ற சகல வேலைகளும் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்



தொடர்களுக்கு : கதிர் :-06 27 46 49 31

# பலதும் பத்தும்

## கார்க் காவடி..!



பால்க் காவடி, பன்னீர்காவடி, பறவைக்காவடி கூட பார்த்திருப்பீர்கள். கார்க் காவடி பார்த்துண்டா..? இதோ.... சென்னை தியாகராயநகர் டொக்டர் தொமஸ் வீதியில் உள்ள அருள்மிகு ஆதிபராசக்தி அம்மன் உற்சவ திருவிழா கடந்த 29ம் திகதி நடைபெற்றது. அதன்போதுதான் ஒரு பக்தர் அலகு குத்தி கார்க் காவடி எடுக்கின்றார். காரை அலகு குத்தி இழுத்துவந்த காட்சியை பக்தர்கள் மெய்யுருகப் பார்த்தனர். நீங்களும் தான் பாருங்களேன்...

## தக்காளித் திருவிழா

ஸ்பெயினில் வருடம் தோறும் நடைபெறும் தக்காளித் திருவிழா இம்முறையும் சிறப்பாக இடம்பெற்றிருக்கின்றது. ஆனால், இவ்வருடம் என்றுமில்லாதளவிற்கு இத் தாக்காளி எறிவதில் ஸ்பெயினின் கிழக்குப் பகுதியில் மட்டும் 40,000 பேர் கலந்துகொண்டுள்ளனர்.



இதற்காக 130 தொன் தக்காளி பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் தக்காளி எறிவதற்கு சுமார் ஒரு மணித்தியாலங்களே வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் இத் தக்காளித் திருவிழாவில் தக்காளியால் குளிப்பாட்டப்பட்டவர்கள் தங்களை கழுவிக்கொள்வதற்காக இப்பகுதியில் நூற்றுக்கணக்கான தண்ணீர் குழாய்களும் அமைக்கப்பட்டிருந்தன.

1940ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்விழா இன்றுவரை தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## புதிய கண்டுபிடிப்புகள் !



⌘ பல்கேரியாவில் 2400 ஆண்டுகளுக்கு முந்தைய தங்கத்திலானா முகமூடி ஒன்றை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது அந்நாளைய தார்சின் என்ற அரச பரம்பரையினர் பயன்படுத்தயது என நம்பப்படுகிறது. இத் தலை முடியின் நிறை 500 கிராம் ஆகும்.

⌘ தாய்லாந்தில் தமிழ் எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உரைகல் ஒன்றில் 'பெரும்பதன்கல்' எனப் பொறிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தாய்லாந்தின் க்வாசிர் அல்காதிம் என்ற துறைமுகத்திற்கு அருகிலும் பெரிகே என்ற இடத்திலும் கண்டெடுக்கப்பட்ட பாளை ஓடுகளில் கணன், சாதன், கொற்ற பூமான் ஆகிய தமிழ்ப் பிராமி எழுத்துக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

⌘ மலேசியாவில் உள்ள பேராக் மாநிலம் லெங்காங்கில் 8000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த பெண் ஒருவரின் எலும்புக் கூடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 148 செ.மீற்றர் உயரமுள்ள இந்த எலும்புக்கூடு அராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டபோது, இறந்த பெண்ணுக்கு 40 முதல் - 50 வயதிற்குள் இருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கும் மலேசியப் பல்கலைக்கழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி இயக்குநர் சுரைனைனா மஜீத், இதனை உறுதிப்படுத்தியுள்ளார். இந்தப் பெண் புதைக்கப்பட்ட இடத்தில் எலி மற்றும் குரங்கும் புதைகப்பட்டிருந்துள்ளன.

## 6 ஆயிரம் தேள்களுடன் வாழ்க்கை !



3000 தேள்களுடன் 31 நாட்கள் வாழ்ந்து சாதனைபடைத்த தாய்லாந்துப் பெண் காஞ்சனா கெற்கோவின் சாதனையை முறியடிக்க புற்பட்டுள்ளார் மலேசியப் பெண் ஒருவர். மலீனா ஹசான் என்று 24 வயதுப் பெண், கண்ணாடிப் பெட்டியொன்றுக்குள் 6000 விசத் தேள்களுடன் 31 நாட்களுக்கு மேலாக வாழ்க்கையை நடத்தத் தொடங்கியுள்ளார். கடந்த 17ம்



திகதி ஆரம்பிக்கப்பட்ட இவரது சாதனையை உலக சாதனை நூலான கின்னஸ் பதிவாளர்கள் கண்காணித்து வருகின்றார்கள். அத்துடன் விசத் தேள்களால் கடியுண்டால் சிகிச்சையளிப்பதற்காகவும் அவரது உடல்நிலையை கண்காணிப்பதற்காகவும் மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக் கண்ணாடிப் பெட்டியிலிருந்து ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் மட்டுமே இவர் வெளியே வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பூனைகளுக்கு அடித்த யோகம் !

உணவு விடுதிகள் இதுவரை மனிதர்களுக்காத்தான் திறக்கப்பட்டிருந்தது. இப்போது முதற் தடவையாக பூனைகளுக்காக ஒரு உணவகம் கடந்த வாரம் திறக்கப்பட்டுள்ளது. வேறு எங்குமல்ல விசித்திரமான சம்பவங்கள் நடக்கும் அமெரிக்காவில் தான் இது நிகழ்ந்துள்ளது.



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் மங்கத்தான் பகுதியில் தான் இந்த புதிய உணவு விடுதி திறக்கப்பட்டுள்ளது.



மியோ மிக்ஸ் கபே (Meow Mix Cafe) எனப்பெயரிடப்பட்டுள்ள இவ் உணவு விடுதி ஏன் திறக்கப்பட்டது என வினவியபோது, உணவு விடுதிகளுக்கு நாய்களுடன் செல்லும்போது, அவற்றுக்கு அங்கே உணவு கிடைக்கின்றது. ஆனால், பூனைகளுடன் சென்றால் அவற்றுக்குத் தேவையான உணவு கிடைப்பதில்லை. அதனால் யாரும் பூனைகளுடன் வெளியில் செல்ல முடிவதில்லை. எனவேதான் பூனைகளுக்கான உணவு விடுதியொன்றை ஆரம்பித்துள்ளதாக கூறியுள்ளார். எங்களுக்கு பூனையின் மகிழ்ச்சிதான் முக்கியம். அதற்காக இந்த உணவு விடுதியில் நாய்களுக்கு அனுமதியில்லை. இதனைக் கண்காணிப்பதற்காக வாசலில் கண்காணிப்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# "சமாதானச்சுருள்" திரை மாலை

யாழ்ப்பாணத்தின் யுத்தகாலத்துக்குப் பின்னர் உள்ள சூழலில் வாழும் பிஞ்சுக் குழந்தைகளின் வாழ்வியலை ஊடறுத்துச் செல்லும் உண்மைகளை திரையில் செதுக்கியிருக்கும் அருமையான படைப்புகளே சமாதானச் சுருள் 7 குறும்படங்கள்...

31.07.2004 சூடு தணியாத மாலை வேளையின் குறிக்கப்பட்ட நேரத்துக்குள் மண்டபத்துக்குள் நுழைய வேண்டும் என்ற ஆதங்கத்தோடு சினிமா ஆர்வலர்கள் வந்து அமர்கிறார்கள். 'இக்குறும்படங்களை 3வது தடைவையாக நான் பார்க்கப் போகிறேன்' என்கிறார் ஒரு நண்பர்.

'ஊரை விட்டு வெளியேறி வெகு காலமாகி விட்டது அந்த மண்ணைத் ஒரு முறை இப்படியாவது தரிசிக்க வேண்டும் என்ற ஆவல்' என்கிறார் மற்றொருவர்.

சுவிஸ் மக்களுக்கு இது புதியது. 'என்ன சொல்லியிருக்கிறார்கள்' என்று சுவிஸ் நாட்டவர் வினவுகிறார்.

'பார்த்து விட்டு சொல்லுங்களேன் உங்கள் கருத்தை...' என்கிறேன். மௌனமாகிறார். யோசிக்கிறார்.

மாலை 8.00 மணிக்கு Europe Movi Club தலைவர் மார்க்கஸ் பஸ்லர் வந்திருப்போரை வரவேற்கிறார்.

யாழ் திட்ட இணைப்பாளரும் அழுத்தம் குறும்பட இயக்குநருமான கா.ஞானதாஸ் மற்றும் போருக்குப் பின் இயக்குநர் ஜெயரஞ்சனி ஞானதாஸ் ஆகியோரை பார்வையாளருக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

அலட்டல் இல்லாமல் இரத்தினச் சுருக்கமாக இருக்கிறது அவரது அறிமுகம். பார்வையாளர்கள் கரகோசம் செய்கிறார்கள். திரு.திருமதி. ஞானதாஸ் இருவரும் அமைதியாக எழுந்து நிற்கிறார்கள். மீண்டும் கரகோசம்.

கரகோசத்தோடு சேர்த்து இருளை கவ்வத் தொடங்குகிறது மண்டபம்.

திரையில்...

**1. அதிகாலையின் இருள்**

களத்தில் கிடந்த ரவைகளைக் கூட புல்லாங்குழலாக்கி போரினால் ஏற்பட்ட ஊனத்தை மறந்து சமாதானத்துக்காக ஏங்கும் இளம் உள்ளங்கள்...

**2. அழுத்தம்**

கல்வியே கருந்தனம் என்று கருதும் யாழ்ப்பாண மத்தியதர வர்க்க நிலைப்பாட்டால் குழந்தைகளது சிந்தனைகள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகிறது....

**3. செருப்பு**

காலுக்கு செருப்பு வேண்டுமென கேட்ட சிறுமிக்கு கண்ணி வெடியின் கோரம் அதை சாத்தியப்பட வைத்ததா? ஒவ்வொரு படத்தின் இறுதியிலும் ஒரு சில நொடிகளின் அமைதிக்குப் பின், கரகோசம் வருகிறது...

3 குறும்படங்களின் திரையிடலுக்குப் பின்னர் 30 நிமிட இடைவேளை விடப்படுகிறது.

செருப்பு குறும்படத்தில், நிலக் கண்ணி வெடியில் மாட்டிக் கொண்டு காலையிழக்கும் காட்சியில் அதிர்ந்த சுவிஸ் பெண்கள் கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே வருகிறார்கள். குறும்படங்கள் முடிந்தவுடன் உள்ள கலகலப்பு இல்லாத ஒரு மயான அமைதி. யாரும் யாரோடும் பேசாதிருக்கின்றனர்.

யுத்தம் நிறைந்து கிடந்த யாழ் மண்ணின் ஒரு பகுதிக்குள் சென்று வந்த உணர்வாகவிருக்கலாம். அங்கு நடக்கும் இன்னல்களில் ஒரு சில துளிகளே இவை. என் நண்பர்கள் என்னைப் பார்ப்பதோடு சரி. என்னிடம் எதுவுமே கேட்பதாக இல்லை.

உணவகத்துக்குச் சென்று 30 நிமிடங்களுக்குள் கொஞ்சம் சாப்பிடுகிறார்கள்.

மீண்டும் மண்டபத்துக்குள் நுழைகிறார்கள். அழுது கொண்டு வெளியேறியவர்களைக் காணவில்லை.

உணவகத்தை நடத்தும் நண்பரிடம் கேட்கிறேன். வேறு யாராவது வெளியில் இருக்கிறார்களா என்று.

'இல்லை. அந்த பெண்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை' என்று சொல்லி விட்டுச் சென்று விட்டனர் என்கிறார். காட்சிகள் மீண்டும் குறும்படங்களாக திரையில் விரிகின்றன...

**4. தடை**

மருந்துகளுக்கான தடையினால் ஏற்படும் விபரீதங்கள்.

**5. மூக்குப் பேணி**

சுகபோகப் பொருட்கள் வழி கவரும் ஆக்கிரமிப்பாளர்கள், மனிதனின் புலனுக்குப் புரியாமலே, யுத்தத்தை உருவாக்கும் அபாயம்

**6. ஒளித்துப் பிடித்து**

27 இளைஞர்களின் கொலைக்கு வழி வகுத்த, பிந்துனுவெவ தடுப்பு முகாம் கொலைப் பின்னணி...

**7. போருக்குப் பின்**

இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமலிருக்கும் தந்தையைப் பற்றி அறியத் துடிக்கும், ஒரு சிறுவனின் ஆக்ரோசம்.

திரையிடலின் முடிவில் அனைவரது கரகோசமும் மண்டபத்தை நிறைக்கிறது. தலைவர் திரு.திருமதி. ஞானதாஸ் இருவரையும் அழைத்து அனைவரது கரகோசத்தின் நடுவே நினைவுப் பரிசில்களை வழங்குகிறார். குறும்படங்கள் பற்றி கலந்துரையாடப் போகிறீர்களா என்று பார்வையாளர்களைப் பார்க்கிறார். பார்வையாளர்கள் யுத்த கோரத்திலிருந்து இன்னும் விடுபட்டதாக இல்லை. அதிகமானவர்கள் சினிமா மீடியாவில் இருப்பவர்கள். அமைதியாகவே இருக்கிறார்கள். பேசுவதாக இல்லை.

திரு.ஞானதாஸ் அனைவருக்கும் நன்றி கூறியதோடு பார்வையாளர்கள் திரு.திருமதி. ஞானதாஸ் இருவரைச் சுற்றி நின்று பேசத் தொடங்குகிறார்கள். யுதார்த்தம் சினிமாவுக்குள் வரும் போது அது நிஜம்... சினிமா தெரிந்தவனைக் கூடப் பாதித்து மௌனமாக்கிவிடுகிறது என்பதற்கு இந்நிகழ்வு உதாரணம்.


திரைப்பட விழாக்களில் கேள்விகளைத் தொடுத்து இயக்குநர்களை விமர்சிக்கும் நண்பன் ஒருவனிடம் ஏன் இன்று பேசாமல் இருக்கிறாய் என்று கேட்கிறேன். இது கடினமாக இருக்கிறது. அமைதி தான் இங்கே சமர்ப்பணமாக வேண்டும் என்கிறான். சுவிஸ் மக்கள் யுத்தங்களைப் பார்த்தவர்கள் இல்லை.

எங்களால் இதைத் தாங்கிக் கொள்ள முடியாது. அதுவும் பச்சிளம் குழந்தைகள் பாடு நெஞ்சை நெகிழ வைக்கிறது என்கிறான்.

அமைதியோடு கலைகிறோம்...

மறு நாள் காலையில் மற்றுமொரு சுவிஸ் நண்பன் தொலைபேசி வழி 'உன்னிடம் சொல்லாமல் வந்து விட்டேன் என்று வருத்தமாக இருந்தது. என்னை மன்னித்துவிடு. நானும் எனது காதலியும் நேற்று இரவு பேசிக் கொள்ளவே இல்லை. இன்னும் இதயம் பாரமாகவே இருக்கிறது' என்று கூறி தொலைபேசித் தொடர்பைத் துண்டித்துக் கொள்கிறான். நானும் இப்போதைக்கு, அந்த 7 குறும்படங்களின் கலைஞர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் அமைதியாகவேதான் என் தாக்கங்களை வெளிப்படுத்தலாம்...

– அஜீவன் (அப்பால்-தமிழ்)



"போருக்குப் பின்"



"அதிகாலையின் இருள்"



"ஒளித்துப் பிடித்து"



"மூக்குப் பேணி"



"தடை"





"அழுத்தம்"



"செருப்பு"

# ஒலிம்பிக் – 2004

2004ம் ஆண்டு ஒலிம்பிக் முடிவுகள்.

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. அமெரிக்கா | 35 | 39 | 29 | 103 |
| 2. சீனா | 32 | 17 | 14 | 63 |
| 3. ரஷ்யா | 27 | 27 | 38 | 92 |
| 4. அவுஸ்திரேலியா | 17 | 16 | 16 | 49 |
| 5. ஜப்பான் | 16 | 09 | 12 | 37 |
| 6. ஜேர்மனி | 14 | 16 | 18 | 48 |
| 7. பிரான்ஸ் | 11 | 09 | 13 | 33 |
| 8. இத்தாலி | 10 | 11 | 11 | 32 |
| 09. கொரியா | 09 | 12 | 09 | 30 |
| 10. பிரித்தானியா | 09 | 09 | 12 | 30 |
| 11. கியூபா | 09 | 07 | 11 | 27 |
| 12. உக்கிரேன் | 09 | 05 | 09 | 23 |
| 13. கங்கேரி | 08 | 06 | 03 | 17 |
| 14. ரொமேனியா | 08 | 05 | 06 | 19 |
| 15. கிரீஸ் | 06 | 06 | 04 | 16 |
| 16. நோர்வே | 05 | 00 | 01 | 06 |
| 17. நெதர்லாந்து | 04 | 09 | 09 | 22 |
| 18. பிரேசில் | 04 | 03 | 03 | 10 |
| 19. சுவீடன். | 04 | 01 | 02 | 07 |
| 20. ஸ்பெயின் | 03 | 11 | 05 | 19 |
| 21. கனடா | 03 | 06 | 03 | 12 |
| 22. துருக்கி | 03 | 03 | 04 | 10 |
| 23. போலந்து | 03 | 02 | 05 | 10 |
| 24. நியூசிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| 25. தாய்லாந்து | 03 | 01 | 04 | 08 |
| 26. பெலாரஸ் | 02 | 06 | 07 | 15 |
| 27. ஒஸ்ரியா | 02 | 04 | 01 | 07 |
| 28. எதியோப்பியா | 02 | 03 | 02 | 07 |
| 29 ஈரான் | 02 | 02 | 02 | 06 |
| 30. சுலோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| 31 தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| 32. ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |
| 33. பல்கேரியா | 02 | 01 | 09 | 12 |
| 34. ஜமேக்கா | 02 | 01 | 02 | 05 |
| 35 உஸ்பெகிஸ்தான் | 02 | 01 | 02 | 05 |
| 36 மொறோக்கோ | 02 | 01 | 00 | 03 |
| 37. டென்மார்க் | 02 | 00 | 06 | 08 |
| 38. ஆஜென்ரீனா | 02 | 00 | 04 | 06 |
| 39. சிலி | 02 | 00 | 01 | 03 |
| 40. கஜகஸ்தான் | 01 | 04 | 03 | 08 |
| 41. கென்யா | 01 | 04 | 02 | 07 |
| 42. செக்குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| 43. தென் ஆபிரிக்கா | 01 | 03 | 02 | 06 |
| 44. குரோசியா | 01 | 02 | 02 | 05 |
| 45. லித்துஜேனியா | 01 | 02 | 00 | 03 |
| 46 எகிப்த் | 01 | 01 | 03 | 05 |
| 47. சுவிற்சர்லாந்து | 01 | 01 | 03 | 05 |
| 48. இந்தோனேசியா | 01 | 01 | 02 | 04 |
| 49. சிம்பாவே | 01 | 01 | 01 | 03 |
| 50. அஜர்பைஜா | 01 | 00 | 04 | 05 |
| 51. பெல்ஜியம் | 01 | 00 | 02 | 03 |
| 52 பகாமாஸ் | 01 | 00 | 01 | 02 |
| 53. இஸ்ரேல் | 01 | 00 | 01 | 02 |
| 54 கமறூன் | 01 | 00 | 00 | 01 |
| 55 டொமினிக்கன் | 01 | 00 | 00 | 01 |
| 56 அயர்லாந்து | 01 | 00 | 00 | 01 |
| 57 சவுதி அரேபியா | 01 | 00 | 00 | 01 |
| 58. கொரியா | 00 | 04 | 01 | 05 |
| 59 லத்வியா | 00 | 04 | 00 | 04 |
| 60 மெக்சிக்கோ | 00 | 03 | 01 | 04 |
| 61. போர்த்துக்கல் | 00 | 02 | 01 | 03 |
| 62. பின்லாந்து | 00 | 02 | 00 | 02 |
| 63. சேர்பியா | 00 | 02 | 00 | 02 |
| 64. சிலோவேனியா | 00 | 01 | 03 | 04 |
| 65. எஸ்தோனியா | 00 | 01 | 02 | 03 |
| 66. கொங்கொங் | 00 | 01 | 00 | 01 |
| 67. இந்தியா | 00 | 01 | 00 | 01 |
| 68 பரகுவே | 00 | 01 | 00 | 01 |
| 69 நைஜீரியா | 00 | 00 | 02 | 02 |
| 70. வெனிசுலா | 00 | 00 | 02 | 02 |
| 71. கொலம்பியா | 00 | 00 | 01 | 01 |
| 72. எரித்திரியா | 00 | 00 | 01 | 01 |

## முதல் இரு தங்கப் பதக்கங்களையும் சீனா கைப்பற்றியது

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 22 வயதாகும் சீன மாணவி டு லி முதல் தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார். 10 மீற்றர் `ஏர் ரைபிள்' துப்பாக்கி சுடுதல் போட்டியில் முதலிடம் பெற்றதன் மூலம் இப்பெருமையைப் அவர் பெற்றார். ஏதென்ஸில் சனிக்கிழமை இப்போட்டி நடைபெற்றது. அதுவே போட்டியின் முதல் தங்கப் பதக்கப் போட்டியாகவும் அமைந்திருந்தது. சீன வீராங்கனை டு லி 502 புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார். ரஷ்ய வீராங்கனை கால்கினா (501.5 புள்ளிகள்) வெள்ளிப் பதக்கத்தையும், செக். குடியரசின் குர்கோவா (501.1 புள்ளிகள்) வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். சீனா இப்போது அதிகளவு பதக்கத்தை கைப்பற்றிய நாடுகளில் இரண்டாவது இடத்தில் நிற்கின்றது. அமெரிக்கா முதல் இடத்தை வகிக்கின்றது.




இதேவேளை, ஒலிம்பிக்கின் 2வது தங்கப் பதக்கமும் சீனாவுக்கே கிடைத்தது. ஆடவர் 10 மீற்றர் `ஏர் பிஸ்டல்' போட்டியிலும் சீனாவுக்கே தங்கப் பதக்கம் கிடைத்தது. வாங் யூபு 690 புள்ளிகள் பெற்று தங்கம் வென்றார். 6வது ஒலிம்பிக்கில் பங்கேற்கும் 43 வயதாகும் யூபு 1992ம் ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். 1996 மற்றும் 2000ல் வெள்ளிப் பதக்கம் வென்றார். இப்பிரிவில் ரஷ்யாவின் மிக்கைல் நெஸ்துருவ் வெள்ளியும், ரஷ்யாவின் விளாதிமீர் இசகோவ் வெண்கலமும் வென்றனர்.

## சிறைக்காவலர்கள் ஒலிம்பிக்கை ரசித்தனர் கைதிகள் சிறையில் இருந்து தப்பியோடினர்

காவற்துறையினர் ஒலிம்பிக் போட்டியில் மூழ்கிப்போனதால் குற்றவாளிகள் இருவர் தப்பிச்சென்ற சம்பவம் தாய்லாந்தில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் கடந்த 16ம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. தாய்லாந்து வீராங்கனை போல்சாக் 53 கிலோ பளுதூக்குதல் போட்டியில் பங்கேற்றதை, பாங்கொக் பொலிஸ் நிலைய்த்தினர் தொலைக்காட்சியில் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். இத் தருணத்தைப் பயன்படுத்தி பொலிஸ் நிலையத்தில் இருந்த கொலைக் குற்றவாளிகள் இருவர் தப்பி ஓடிவிட்டனர். இதனால், அந்த காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதேவேளை, பளு தூக்கும் போட்டியில் அந்த வீராங்கனை தங்கம் வென்றுவிட்டார் என்பதும், இதுவே தாய்லாந்துக்குக் கிடைக்கும் முதல் தங்கப் பதக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தந்தை பெற்ற தங்கத்தை மகனும் பெற்றார்

!


ஒரே குடும்பத்தில் தந்தை பெற்ற தங்கத்தை மகனும் பெற்று வந்திருக்கிறார். ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. ஜப்பான் ஜிம்னாஸ்ரிக் வீரர் நயோயா சுக்ககாரா தங்கம் வென்றுள்ளார். 1968, 1972 மற்றும் 1976 ஆகிய ஆண்டுகளில் இவரின் தந்தை மிட்சுவோ ஜப்பான் அணி சார்பில் தங்கப் பதக்கங்களை வென்றார். இவரும் தந்தையைப் போல் அணி சார்பில் பதக்கத்தைப் பெற்றுள்ளார். 2ம் உலகப் போருக்குப் பின்னர் ஒலிம்பிக்கில் தந்தையும் மகனும் பதக்கங்கள் பெற்றது இதுவே முதற்தடவை. இதேவேளை, இந்தப் பிரிவில் ஜப்பான் 1984க்குப் பிறகு தங்கம் பெறவில்லை. அக்குறையை நயோயா தீர்த்துள்ளார். நயோயாவுக்கு 27 வயதாகிறது. கடந்த 11 ஆண்டுகளாக இவரது தந்தை தான் அவருக்குப் பயிற்சி அளித்து வந்திருக்கிறார்.

## ஊக்க மருந்து
## பதக்கத்தை பறிகொடுத்த ஹங்கேரி மல்யுத்த வீரர்

ஒலிம்பிக்கில் ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்குவோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. ஊக்க மருந்து உள்ளெடுத்ததாக ஹங்கேரியின் மல்யுத்த வீரர் பெரங்க் குயர்கோவிக்ஸின் வெள்ளிப் பதக்கம் பறிக்கப்பட்டது. இவர் 105 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார். இவர் ஊக்க மருந்து எடுத்தது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து இவரது பதக்கம் பறிக்கப்பட்டது. போர்டோரிக்காவின் மல்யுத்த வீராங்கனை மாபெல் போன்சிகா ஊக்க மருந்து எடுத்துக் கொண்டது நிரூபிக்கப்பட்டுள்ளது. மகளிர் 55 கிலோ ஃபிரீஸ்டைல் பிரிவில் பங்கேற்ற இவர், 5வது இடத்தைப் பிடித்திருந்தார்.

# அமைதியாக முடிவடைந்த ஒலிம்பிக் ஏதென்ஸிலிருந்து விடைபெற்றனர் வீரர்கள்

கடந்த 16 நாட்களாக உலகின் கவனத்தைக் கவர்ந்த ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள், நேற்றுடன் நிறைவடைந்தன. இதுவரை பதக்க வேட்டையாடிய வீர, வீராங்கனைகள் நேற்றைய அமர்க்களமான நிறைவு விழாவில் கண்ணீருடன் விடை பெற்றனர்.




இதேவேளை, ஒலிம்பிக் போட்டிகள் ஒரு சிறு பிரச்சினையும் இல்லாமல், அருமையாக நடந்து முடிந்ததால், ஒலிம்பிக் போட்டிக்குழு பெரும் திருப்தியில் இருக்கிறது. ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கும் முன், இம்முறை உலகமே பயந்தது. தீவிரவாதிகள் தாக்கிவிடுவார்களோ, அரங்கங்களின் பணி முடிவடையாததால், திட்டமிட்டபடி போட்டிகள் நடக்குமோ, நடக்காதோ என்று பெருமளவு பிரச்சினைகள். இதனால் பயந்து போன சர்வதேச ஒலிம்பிக் குழு நிர்வாகிகள் ஒரு புது உத்தரவு பிறப்பித்தனர்.

போட்டிகள் முடியும் வரை சர்வதேச ஒலிம்பிக் குழு நிர்வாகிகளும், ஏதென்ஸ் போட்டி அமைப்பாளர்களும் தினமும் ஒரு முறை கூடி விவாதிக்க வேண்டும். அன்று நடந்திருக்கும் விடயங்களை விவாதிப்பதுடன், அடுத்தநாள் என்னென்ன செய்யலாம் என்பது பற்றி இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் பயந்ததற்கு மாறாக, எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ஒலிம்பிக் போட்டிகள் அருமையாக நடந்து முடிந்துள்ளன.

விளையாட்டுத் திருவிழா என்று உலகம் வர்ணிக்கும் ஒரே போட்டி ஒலிம்பிக். பாரம்பரியம் நிறைந்த ஒலிம்பிக் போட்டிகள், பிறந்த மண்ணான கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் இம்முறை நடந்தன. 28வது நவீன கால ஒலிம்பிக் போட்டிக்கு, இதுவரை இல்லாத மாபெரும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தீவிரவாதிகளின் தாக்குதல் அபாயம் இருந்ததால், பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மட்டும் நூறு பில்லியன் ஈரோக்கள் வரை செலவிடப்பட்டது.


கடந்த 13ம் திகதி தொடங்கிய ஒலிம்பிக் போட்டிகள் நேற்று நிறைவடைந்தன. இந்த 16 நாட்களில் மனித முயற்சியின் மகத்துவத்தை உலகிற்கு உணர்த்தும் பல சாதனைகள், விநாடியில் நூற்றில் ஒரு பங்கு நேரத்தில் தங்கமும், வெள்ளியும் தவறிய சம்பவங்களை இம்முறை காணமுடிந்தது. தொழில்நுட்பம் புகுந்து விளையாடிய ஒலிம்பிக்காகவும் இது அமைந்தது. பல்வேறு புதிய சாதனையாளர்கள் உலகிற்கு அறிமுகமானார்கள். பழைய சாதனையாளர்கள் பலர் ஏமாற்றமும் அளித்தனர்.




ஏதென்ஸ், புராதன அரங்கில் நேற்று நடந்த நிறைவு விழாவில் உலகத் தலைவர்கள் பலர் பங்கேற்றனர். அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் பங்கேற்பதாக இருந்தது. ஏதென்ஸ் நகரில் நடந்த ஆர்ப்பாட்டங்களை அடுத்து, கடைசி நேரத்தில் தனது வருகையை நேற்று அவர் ரத்து செய்தார்.

தொடக்க விழா போலவே, நேற்றைய நிறைவு விழாவையும் மிகச் சிறப்பாக நடத்த கிரீஸ் ஒலிம்பிக் நிர்வாகம் முடிவு செய்திருந்தது. சுமார் 2 100 கலைஞர்கள் கிரேக்கப் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் நடத்தினர். தொடக்க விழா நிகழ்ச்சியின் போது அரங்கில் திடீரென 'வெள்ளம்' வருமாறு செய்து வியக்கவைத்தனர்.

நிறைவு விழாவில் கோதுமை விளைநிலம் போல அரங்கை செயற்கையாக மாற்றிக் காட்டினர். கிரேக்க திருமண வைபவங்களும் இந்த நிறைவு விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது. கிரேக்க பாடகரான ஸாக்கிஸ் ரோவாஸ், பல முன்னணிப் 'பொப்' பாடகர்கள் இசை நிகழ்ச்சி வழங்கினர்.



ஏதென்ஸ் நகர மேயர் தோரா ஒகோயானி ஒலிம்பிக் கொடியை பீஜிங் அதிகாரிகளிடம் முறைப்படி ஒப்படைத்தார். 2008 இல், பீஜிங் (சீனா) நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடக்கின்றன். இதையொட்டி சீன ஒலிம்பிக் சங்கம் சார்பில் எட்டு நிமிட கலை நிகழ்ச்சியும், நடத்தப்பட்டது. இதன் முடிவில், இத்தனை நாள், ஒரு குடும்பமாகப் பழகிய வீர, வீராங்கனைகள் கண்ணீருடன் தாங்கள் படைத்த சாதனைகளை மட்டும் அங்கே விட்டு விட்டு, அவரவர் நாட்டுக்கு விடைபெற்றுச் சென்றனர்.

## முதல் தங்கத்தை பெற்றது இஸ்ரேல்

ஒலிம்பிக்கில் இஸ்ரேல் முதல் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. ஏதென்ஸில் நடைபெற்ற பாய்மரக் படகுப் போட்டியில் கால் பிரிட்மான் முதலிடம் பெற்று இஸ்ரேலுக்கு தங்கப் பெருமை தேடித் கொடுத்துள்ளார். தங்கப் பதக்கம் கிடைத்தது குறித்து இஸ்ரேல் பிரதமர் மிகவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். நாட்டு மக்களும் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர் என அவர் கூறியுள்ளார். 1952 இல் முதன் முதலாக ஒலிம்பிக்கில் நுழைந்த இஸ்ரேல், 40 ஆண்டுகளுக்குப் பிறகு பார்சிலோனா போட்டியில் முதல் பதக்கத்தைப் பெற்றது. கால் பிரிட்மான் வென்றது 2வது பதக்கமாகும்.

## ஒலிம்பிக் கால்பந்தாட்டத்தில் முதன் முறையாக தங்கம் வென்று ஆர்ஜென்ரீனா சாதனை

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் கால்பந்து இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா முதல்முறையாகத் தங்கம் வென்று சரித்திரம் படைத்துள்ளது. இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா 1-0 என்ற கோல் கணக்கில் தென் அமெரிக்க நாடான பராகுவேயை வீழ்த்தியது. கடந்த 52 ஆண்டு காலத்தில் ஆர்ஜென்ரீனா முதல்முறையாக இந்தச் சாதனையைப் புரிந்துள்ளது. ஆர்ஜென்ரீனா தரப்பில் கார்லோஸ் டெவஜ் இந்தக் கோலை அடித்து அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார். ஒலிம்பிக் போட்டி களில் அவர் அடித்த 8 ஆவது கோல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டி க்கு வந்தும் தங்கத்தைக் கோட்டைவிட்ட பராகுவே அணி ஏமாற்றமடைந்தது. இறுதிப் போட்டியின் போது அந்த அணியின் இரண்டு வீரர்கள் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். இதனால் அந்த அணி 9 வீரர்களுடனேயே விளையாடியது.

தற்போதைய ஒலிம்பிக் போட்டியில் அதிகமான கோலடித்தவர் பராகுவே வீரர் ஜோஸ்கார்டோஜோ. 12 கோல் அடித்த இவர் காயம் காரணமாக இறுதிப் போட்டியில் பங்கேற்காதது பராகுவேக்கு பெரிய இழப்பாகும். இந்த அணி இறுதிப் போட்டியில் நுழைய ஜோஸ் முக்கிய பங்கு வகித்தார். ஆர்ஜென்ரீனா அணி இதுவரை உலகக் கிண்ண கால்பந்துப் போட்டியில் இரண்டு முறை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. ஆனால், ஒலிம்பிக்கில் ஒருமுறை கூட தங்கப் பதக்கம் வென்றது கிடையாது. 1920 மற்றும் 1996 ஆகிய இரண்டு ஒலிம்பிக்குகளிலும் அந்த அணி வெள்ளிப் பதக்கம் வென்றது.

## ஒலிம்பிக் தடகளத்தில் சீனாவுக்கு 2 தங்கம்

ஆண்களுக்கான 110 மீற்றர் தடை ஓட்டத்தின் இறுதிப் போட்டியில் சீனாவின் லியு ஜியாங், முன்னணி வீரர்கள் பலரையும் முந்திக் கொண்டு முதல் இடத்தைப் பிடித்தார். இவர் போட்டி தூரத்தை 12.91 விநாடிகளில் கடந்து தங்கத்தைக் கைப்பற்றினார். இதன் மூலம் 11 ஆண்டுகளுக்கு முன் பிரிட்டனின் கொலின் ஜான்சனின் 12.91 விநாடிகள் சாதனையை, ஜியாங் சமன் செய்தார்.

பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியிலும் சீன வீராங்கனையே தங்கம் வென்றார். ஜிங் ஹூய்னா இந்தத் தூரத்தை 30 நிமிடம் 24.36 விநாடிகளில் கடந்து முதல் இடத்தைக் கைப்பற்றினார். இதன் மூலம் ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில் தங்கம் வெல்லும் நான்காவது சீன வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றார்.

வெள்ளி மற்றும் வெண்கலத்தை எதியோப்பிய வீராங்கனைகள் தட்டிச் சென்றனர். ஜகாயு டிபாபா 30 நிமிடம் 24.98 விநாடிகளில் கடந்து இரண்டாவது இடத்தையும், இரண்டு முறை ஒலிம்பிக் சாம்பியனான தேரார்டு துலா 30 நிமிடம் 26.42 விநாடிகளில் கடந்து மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

## 56 ஆண்டுகளுக்குப் பின் எகிப்துக்கு தங்கப் பதக்கம்

ஒலிம்பிக்கில், 56 ஆண்டுகளுக்குப் பிறகு எகிப்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

அந் நாட்டின் மல்யுத்த வீரர் கராம் இப்ராஹிம் வியாழக்கிழமை நடைபெற்ற 96 கிலோ எடைப் பிரிவுக்கான போட்டி யில் முதலிடம் பெற்றதன் மூலம் எகிப்துக்கு இப் பெருமை கிடைத்துள்ளது. கிரேகோ ரோமன் போட்டி யில் பங்கேற்ற இப்ராஹிம் 12-1 என்ற ரீதியில் ஜோர்ஜிய வீரர் ரமாஸ் நோஸாட்ஸே வை வென்றார்.

# சந்திரிகாவின் அவதந்திரம்...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

இது அரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான தற்போதைய அமெரிக்க அரசுத் தலைவர் ஜோர்ஜ் புஷ்சுக்கு ஈராக் போர் பற்றிய மக்களின் சீற்றத்திலிருந்து தப்பி பிழைக்கும் ஒரு வழியைத் திறக்கும் என அக்கட்சி எதிர்பார்க்கிறது.

இப்போது கொழும்பு திரும்பி சந்திரிகாவின் சுூற்றை அலசுவோம். தற்போது கொழும்பில் நடப்பது என்ன? சந்திரிகாவின் கட்சி, தேர்தலுக்கு முன் சொன்னது என்ன?

ஐ.தே.கட்சி அரசாங்கம் வாழ்க்கைச் செலவை அதிகரித்து விட்டது. சமாதான முயற்சிகளைப் பிழையாகக் கையாளுகிறது ஆகிய இரு கோசங்களையும் முன்வைத்தே சந்திரிகா அம்மையாரின் கூட்டணி ஆட்சிக்கு வந்தது. ஆனால் நடப்பதென்ன?

அம்மையாரது ஆட்சியிலும் விலைவாசி விண்வெளியில் தான் சஞ்சரிக்கிறது. சமாதான முயற்சியோவெனில் சந்திரிகாவின் பூச்சாண்டிகளுக்கெல்லாம் அசைய மறுக்கிறது. இந்நிலையில் பொருண்மியத் தேரைக் கொண்டிருக்க முடியாமற் திணறும் அரசு, மக்களைப் பாதிக்கும் பலப்பல நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகிவிட்டது.

இது பற்றிய செய்திகளே இன்று ஊடகங்களை நிறைக்கத் தொடங்கி விட்டன. மக்களின் அன்றாட உரையாடல் இதைப் பற்றியதாகவே இருக்கிறது. வயிறு புகையும் போது வேறு எதைப் பற்றி ஐயா எண்ண முடியும்?

எனவே, இதிலிருந்து தப்பிக் கொள்ள இதனையும் விடப் பலமாக மக்களை உலுக்கவல்ல ஒரு அரசியல் குண்டினைப் போடவேண்டிய நிர்ப்பந்தம் அம்மையாருக்கு ஏற்பட்டு விட்டது. அதாவது ஒரு கோட்டினைச் சிறிதாக்க வேண்டுமெனில் அதைவிடவும் பெரியதொரு கோட்டினை அதன் அருகில் போடும் உத்தியே இது.

இனி ஊடகங்கள் இதைப் பற்றிப் பேசப் போகின்றன. விவாதங்கள், கண்டனங்கள், எல்லாமும் வரச் போகின்றன. மக்களுக்கு வயிறு கலங்கி விட்டது. இன்னமும் கலங்குவதற்கான அறிக்கைகள் இனிவரக் கூடும்.

ஆக, ஒட்டு மொத்தத்தில் அம்மையார் தனது அரசியல் வேலைத்திட்டத்தைப் பூர்த்தி செய்து விடுவார். அல்லது பூர்த்தி செய்து விட முனைவார்.

பாருங்கள்; சிங்கள தேசத்தின் தலைவர் அரசியல் பித்தலாட்டத்தினை மறைக்கக்கூட எங்கள் மீது யுத்தம் செய்ய முற்படுகிறார். ஆனால் இது அவதந்திரமானது. எப்போதுமே அவதந்திரம் தனக்கத்தரமாகத்தான் முடிவது வழக்கம்.

# மக்களின் கோரிக்கையே....

(17ம் பக்கத் தொடர்ச்சி)

பதில்:- பேச்சுவார்த்தை என்று சொல்லி காலம்கடத்திக்கொண்டு போகும்போது இலக்குகள் எல்லாம் பின்தள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது. ஆகவே நாங்கள் அந்த நிலைமையை தக்க வைத்துக்கொள்வதற்காக தனியாக இந்தக்கோரிக்கையை முன் வைத்திருக்கின்றோம். அது எங்களை ஏற்றங்கொள்வதற்கான கோரிக்கையல்ல. அதன் பின்னர் பேசுவதற்கு தயார் என்று தலைமைப்பீடம் சொல்லியிருக்கின்றது. ஆனால் எங்களுக்கு தெரிகிறது இவர்களால் எங்கள் கோரிக்கையை ஏற்கமுடியாது என்று. அதனால் எதிர்பார்க்கிறார்கள் ஏதாவது பெரிய வாய்ப்புக் கிடைக்குமா என்று. கருணா விடயத்தைக் கூட தூக்கிப்பிடித்துப் பார்த்தார்கள். ஏதாவது ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அழித்துவிட முடியுமா என்று பார்க்கின்றார்கள். இது வீண் முயற்சி. அங்கு நடக்கின்ற கொலைகளைப் பார்த்தீர்களேயென்று சொன்னால் நன்றாக விளங்கும். காலையிலும் கேட்டார்கள் ஏன் கொலைகள் நடத்துகொண்டிக்கின்றது என்று. உண்மையிலேயே கொலைகளை நிறுத்தவேண்டும் என்று சொல்லித்தான் நாங்கள் போர் நிறுத்தம்




செய்தனாங்கள். நாங்கள் போர்நிறுத்தம் செய்தபொழுது போர் நிறுத்தத்தைக் குழப்புவதற்கு யார் முண்டுகொடுத்தவர்கள் என்று பார்த்தீர்கள் என்றால் உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது தெளிவாக எல்லோருக்குமே தெரியும். எல்லோருக்கும் உண்மை உறைக்கிறது. நாங்கள் வந்து யாருக்கும் கடமைப்பட்டவர்கள் அல்ல. கடவுளுக்கோ அல்லது இயற்கைக்கோ கூட சாவுக்கோ அல்லது வாழ்வுக்கோ கூட எங்களுடைய வாழ்வை நாங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

கேள்வி:- நீங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு வரும்பொழுது இங்கு புலம்பெயர்ந்து வாழுகின்ற மக்களுக்கு தேசியத் தலைவர் எதாவது கூறியிருந்தாரா?

பதில்:- ஆமாம்... நான் தலைவருடன் பேசியபோது அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், நாங்கள் என்றைக்கும் இலக்குத் தவறமாட்டோம். புலம்பெயர் மக்கள் எலவே செய்த உதவிபோலவே தொடர்ந்து அந்த மக்கள் செய்யவேண்டும். வளரும் தலைமுறை தங்கள் அறிவுத்திறனை மேலும் வளர்த்து, புதியதொரு பலமான சமூகமாக வளர்வதோடு எங்கள் தமிழ் சமூகத்திற்கு தங்கள் அறிவுத்தினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்றும் என்ன செய்யவேண்டும் என்றும் பார்க்கவேண்டும்.

# கௌத்தமருடன் மரணித்த பௌத்தம்!

(18ம் பக்கத் தொடர்ச்சி)

....புத்தரது தனிப்பட்ட ஆளுமை காரணமாகவும், செல்வாக்குக் காரணமாகவும், அவரது புதிய புரட்சிகரச் சிந்தனை காரணமாகவுமே மக்கள் அவரைப் பின்பற்றத் தொடங்கினர். அவரது காலத்தோடு அவரைப் பின்பற்றுதலென்பதும் மறைந்தது. அவரது முன்னிலையிலேயே அவரது போதனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவரது போதனை அறிவு ரீதியாக மெய்ப்பித்துக்காட்ட முடியாததாகிவிட்டது. புத்தரது கண்களில் அவர் ஒன்றும் இல்லாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரகாசத்தைக் கண்டனர். ஆனபடியால் அவர்களுக்கு ஐயமோ அச்சமோ ஏற்படவில்லை. அவர்களும் ஒன்றுமில்லா நிலையிலிருக்க விரும்பினர். பூஜ்ய நிலை தங்களது கண்களிலும் அருளை - ஞானத்தைப் பொழியுமானால் தாங்களும் அம்மனிதருடன் செல்லத்தயாராக இருந்தனர். அத்தகைய மந்திர சக்தி புத்தருக்கு இருந்தது. ஆனால் தனியே அவரது போதனை மட்டும் அவர்களை ஈர்க்கவில்லை. ஏனெனில் அது அவர்களுடைய `தான்' என்ற முனைப்புக்குக் கவர்ச்சி ஊட்டுவதாக அமையவில்லை. பௌத்தம் இந்தியாவைத் தவிர சீனாவிலும், இலங்கையிலும், பர்மாவிலும், ஜப்பானிலும், கொரியாவிலும், இந்தோனேஷியாவிலும் என முழு ஆசியாவிலும் காலத்தைப் புறங்கண்டு வாழ்ந்தது. இந்நாடுகளில் பௌத்தம் பிழைத்து வாழ்ந்ததற்குக் காரணம், அங்கு பௌத்தத்தைப் பரப்பச் சென்றவர்கள் எதிர்மறைப் பதங்களைக் கைவிட்டு நேர்படியான-உடன்பாட்டுப் பதங்களைப் போதித்ததேயாகும். இதனை ஒரு பாரிய அடிப்படை விட்டுக்கொடுப்பென்றே சொல்லலாம். புத்தருடைய உண்மையான உள்நோக்கத்தைச் சரிவரப்புரியாது, அவருடைய எதிர்மறைப் பதத்தின் உன்னதத்தைப் புரியாது-எதிர்மறை அணுகு முறையின் மேன்மையைப் புரியாது, ஏனைய மதங்களிலுள்ளதைப் போல் நேர்படியான-உடன்பாட்டுப் பதங்களின் உதவிகளுடனேயே மேற்சொன்ன நாடுகளில் பௌத்தம் தாபிக்கப்பட்டது. விகாரைகள் கட்டியெழுப்பப்பட்டன. புத்த சிலை வழிபாடு உருவானது. உண்மையைச் சொல்லப்போனால், பௌத்தம், கௌத்தம புத்தருடைய மறைவுடன் மறைந்து விட்டது.

கௌத்தம புத்தரின் எதிர்மறை அணுகுமுறையை -யதார்த்தமான பூஜ்ய அணுகுமுறையைக் கைவிட்டதனால் இன்று இருப்பதாகச் சொல்லப்படும் பௌத்தத்திற்கும் கௌத்தம புத்தருக்கும் எந்த விதத் தொடர்பும், சம்பந்தமும் இல்லை.

`தான்' என்ற முனைப்புடைய மனித மனத்திற்குத் தனது எதிர்மறை அணுகுமுறை மக்கள் மத்தியில் பெரும்பாலும் தோல்வியுறும் என்பதை புத்தர் நன்கு உணர்ந்திருந்தபோதிலும், அவர் நேர்படியான-உடன்பாட்டு அணுகுமுறை என்ற மாயைக்குள் மக்களை வீழ்த்தி விட விரும்பவில்லை. இந்த உடன்பாட்டு முறையை `தான்' என்ற முனைப்புக் கொண்ட பௌத்த பிக்குமாரும், பௌத்த பீடங்களும், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர, ஒட்டு மொத்தமாக அனைவருமே தமது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்தினார்கள். பயன்படுத்திக்கொண்டுமிருக்கிறார்கள். இதனால்தான் பௌத்த மதம் தாபன ரீதியாக அரசுகளின் ஆதரவுகளுடன் பெரிதாக வளர்ந்துகொண்டிருந்தாலும், கௌத்தம புத்தரின் அடிப்படைப் போதனைகளிலிருந்தும் தூர விலகிச் சென்றுவிட்டது. கௌத்தமர் விலக்கிய உடன்பாட்டு அணுகு முறையை, அவரது சீடர்கள் என்று தம்மை அழைத்துக்கொள்வோர் அணைத்துக்கொண்டனர். புத்தர் அணைத்த எதிர்மறையை அவரது காவியுடை தாசர்கள் உட்பட தம்மை பௌத்தர்கள் என்று அழைத்துக் கொள்ளும் பெரும்பாலும் அனைவரும் விலக்கிக் கொண்டனர். இதனால்தான் ஏனைய மதங்கள் உதவுவது போல் பௌத்த மதமும் அரசியல்வாதிகளின் அரசியலுக்கும் உதவுகின்றது. இதனால்தான் பௌத்தத்தைக் கொன்றுவிட்ட பௌத்தர்கள் பிடாதிபதிகளைக் கொண்டும், பிக்குமார்களைக்கொண்டும் தங்கள் முதுகுகளைச் சொறிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த இதமான சுகமே தங்களை வீடுபேற்று நிலைக்குக்கொண்டு போக வல்லது என அவர்கள் நம்புகிறார்கள் போலும்!



# காலம் ஆகி வந்த கதை

(19ம் பக்கத் தொடர்ச்சி)

...என்கிறமாதிரி தலையை ஆட்டினாள். கண்ணையும் ஆட்டினாள். அவள் சிரித்தால் கன்னத்தில் றோஸ் நிறமா மினுங்கும். நான் அப்பிடி ஒன்றும் தலையை ஆட்டவில்லை. `எடி குட்டிப் பெட்டை' என்று ஆசையாச் சிரிச்சன். அவளும் கள்ளவோட் போடத்தான் வந்திருக்கிறாள். பயங்கரக் கள்ளி!

இரவு எலக்சன் முடிவு கேட்க றேடியோவைப் போட்டிட்டு இருந்தம். சாமம் போலை புதுவெள்ளம் எண்டு புதுப்பாட்டுக்கள் போட்டிச்சினம். `அந்தப்புரத்தில் ஒரு மகராணி...' எண்ட பாட்டு வந்தது. எனக்கு நந்தினியின் ஆவெண்டு சிரிச்ச முகம் திரும்பத்திரும்ப வந்துது. நானும் கண்ணை மூடிச் சிரிச்சன்.. பிறகு வந்த அம்மாள் கோயில் பூங்காவனத்துக்கு றொலெக்ஸ் லவுட்ஸ்பீக்கரிலை அந்தப் பாட்டுப் போனது. ஏனோ மனசு வெதும்பி வந்தது.

மேசைக்கு முன்னாலை நான் படிச்சுக்கொண்டிருக்க சோளகம்தான் அள்ளிக்கொண்டு வந்தது அந்தப் பாட்டை. பிறகு எனக்கு ஒன்றுமாய் ஏறவில்லை. யன்னலுக்குள்ளால் வெளியில் பார்க்க ஒன்றுமில்லை. வெளி இருட்டாக இருந்தது. கொப்பியை மூடினன். டயறியைத் திறந்தன். மனங்கலங்கினதை எழுதினன். அம்மா கோப்பையைக் கொண்டு வந்து மேசையிலை வைச்சா. மரக்கறியில் புட்டு மணத்தது...

(இன்னும் வரும்.)

IMPORTAS Asian Groceries

Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

| | | |
|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 ஈரோ |
| சென்ன பட்டூரா | 30X500 | 1.50 ஈரோ |

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45

சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports Tel: 0049 -24625557

# கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வாளர் ஊடுருவித் தாக்குதலில் முக்கியபங்காற்றியவர்

(30.08.04)

கொழும்பு புறநகர்ப் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவ புலனாய்வாளரான ரமேஸ் என அழைக்கப்படும் திஸ்ஸவீரசிங்கம் துஷ்யந்தன், புளொட் மோகனுக்கு அடுத்த நிலையில் சிறீலங்காப் புலனாய்வுப் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்து, இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்து பல தாக்குதல்களில் பங்கு கொண்டவர் என்றும் நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

கொழும்பு மிலேனியம் சிற்றி புலனாய்வுப் பாதுகாப்பு இல்லத்தை மையமாக வைத்திருந்து செயற்பட்ட இவர் இரு வருடங்களிற்கு முன்னர் ஆயுத விவகாரம் சம்பந்தமாக அப் பாதுகாப்பு இல்லம் பொலிசாரால் சோதனையிடப்பட்டப் போது, அங்கிருந்து புளொட் மோகனுடன் இவரும் தப்பியோடியிருந்தார்.



இச்சம்பவத்தின் போது கைது செய்யப்பட்ட ஏனையவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கிழக்கில் இடம்பெற்ற ஊடுருவல் தாக்குதல்களில் சிறீலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையுடன் இணைந்து முக்கிய பங்கு வகித்த இக் கூலிப்படையினன், கடந்த 2001ம் ஆண்டு யூன் மாதம் 14ம் திகதி நல்லதண்ணி ஓடைப் பிரதேசத்திலுள்ள வைத்தகல்மடுவில் வைத்து மட்டு - அம்பாறை மாவட்ட புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் நிசாம் மீதான தாக்குதலை நடாத்தியிருந்தார். இத் தாக்குதலில் லெப்.கேணல் நிசாம் கொல்லப்பட அவருடன் பயணித்தவர் படுகாயமடைந்திருந்தார்.

அதேபோன்று 2001ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ம் திகதி பத்தரைக்கடைச் சந்திப் பிரதேசத்தில் வைத்து கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் பரிவர்த்தனை மற்றும் வீடியோப் பிரிவின் பொறுப்பாளர் மனோ மாஸ்ரரின் மீதான தாக்குதலையும் இவரே, இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து மேற்கொண்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் தங்கியிருந்த வீட்டிற்கு சனி அதிகாலை 4.30 மணியளவில் சென்ற இருவர் பலதடவைகள் கதவைத் தட்டிய போதும் கதவு திறக்கப்படவில்லை என்றும், கதவுநிலையின் மேலிருந்த கண்ணாடித் தடுப்புக் கிறிலினூடாகக் கொக்கியை அகற்ற முயன்று அதுகூடக் கைகூடாத நிலையில் மேற்படி இருவரும் கதவின் மீது தமது பலத்தைப் பிரயோகித்து உடைத்தே உள் நுழைந்துள்ளனர்.

மேற்படி கூலிப்படையினன் பதுங்கியிருந்த அறைக்குள் சென்ற மேற்படி இருவரும், அவருடன் இருந்த பெண்ணை அங்கிருந்து செல்லுமாறு விரட்டிவிட்டே தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். கூலிப்படையினனின் பாதுகாப்பிற்கென ஒரு துப்பாக்கி மற்றும் கைக்குண்டு என்பன அவனது பாதுகாப்பிற்கென இராணுவத்தால் வழங்கப்பட்டிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட மேற்படி நபர் மீது கைக்குண்டு தாக்குதலும் நடத்தப்பட்டதாக ஒரு செய்தி தெரிவிக்கின்ற போதும், அந்நபர் கையில் வைத்திருந்த கைக்குண்டே அவர் சூடுபட்டு வீழ்ந்ததும் வெடித்ததாகவே பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது. இதேவேளை தாக்குதலை நடாத்தியவர்கள் மேற்படி நபரின் கைத்தொலைபேசியையும் எடுத்துச் சென்றுள்ளதாக நம்பப்படுகிறது. இவர் தங்கியிருந்த வீடு கொழும்பு நகருக்கு வெளியேயுள்ள பிரதேசம் என்பதும், முற்றாக சிங்களவர்கள்



வதியும் ஒரு பிரதேசம் என்பதும், இப்பிரதேசத்தினுள் நுழைந்து ஆயுததாரிகள் தாக்குதலை நடத்தியுள்ளதானது சிறீலங்காவின் பாதுகாப்புத்துறையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, இக் கொலை தொடர்பாக சிறீலங்கா குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவுப் பொலிசார் இன்று மட்டக்களப்புக்குச் சென்று அவரது மனைவியிடமும், அவரது மனைவியின் ஒன்றுவிட்ட சகோதரியிடமும் பொலிசார் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

கொல்லப்பட்ட நபர் வீட்டில் கடந்த 3 வருடங்களாக வசித்துவந்துள்ளார். ஆரம்பத்தில் தனது மனைவி பிள்ளைகளுடன் வசித்து வந்துள்ளார். இடையில் மனைவியின் ஒன்றுவிட்ட சகோதரியான இராஜேந்திரம் கீதாஞ்சலி வந்த பின்னர் கணவன் மனைவிக்கு இடையில் பிணக்குகள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

தகராறுகள் முற்றியதனால் மனைவி தனது பிள்ளையுடன் மட்டக்களப்புக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். அங்கு, தன்னையும் பிள்ளையையும் கணவர் எப்படிக் கொடுமைப்படுத்தினார் என்பது குறித்து அவர் தனது உறவினர்களிடம் தெரிவித்துள்ளார் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர். எனினும் இவரது கொலை தொடர்பாக இது வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## இராணுவப் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளராக பிரிகேடியர் சஹ்?

(30.08.04)

சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரான பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரண கூட்டுப்படைத் தலைமையகத்தின் புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் நாயகமாக பதவி உயர்வு பெற்றுள்ள அதேநேரம், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் புதிய பணிப்பாளராக பிரிகேடியர் ரிஸ்வி சஹ் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் இராணுவப் பதவி உயர்வில் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறி புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பதவியிலிருந்து பிரிகேடியர் கபில ஹெந்த விதாரண இராஜிநாமா செய்திருந்தார்.

இதையடுத்து, இவரை கூட்டுப் படைத் தலைமையகத்தின் புலனாய்வுப் பிரிவு இயக்குநர் நாயகமாகப் பதவியுயர்த்தியுள்ள பாதுகாப்பு அமைச்சு, புலனாய்வுப் பிரிவின் புதிய இயக்குநராக பிரிகேடியர் ரிஸ்வி சஹ்யை நியமிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வரும் பிரிகேடியர் சஹ், அடுத்த மாத முற்பகுதியில் நாடு திரும்பியதும் புதிய பதவியை பொறுப்பேற்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, கூட்டுப் படைகள் தலைமையகத்தின் புலனாய்வுப் பிரிவு இயக்குநர் நாயகமாக மேஜர் ஜெனரல் ஒருவரே நியமிக்கப்பட வேண்டுமென்பதால் ஹெந்தவிதாரணவை மேஜர் ஜெனரலாக நியமிப்பதற்கு சந்திரிகா அம்மையார் அனுமதி வழங்கியுமுள்ளார்.

## ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர்கள் சீனா, இந்தியா செல்கின்றனர்!

(30.08.07)

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் அடுத்த வாரம் இந்தியா மற்றும் சீனாவிற்கு பயணம் செய்யவுள்ளனர். செப்டெம்பர் மாதம் 3ம் திகதி தொடக்கம் 5ம் திகதி வரையிலான காலப் பகுதியில் சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெறவுள்ள ஆசிய நாடுகளது அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் செல்லவுள்ளனர்.

அடுத்த மாதம் 4ம் திகதி தொடக்கம் 6ம் திகதி வரை தமிழகத்தின் சென்னையில் இடம் பெறும் அகில இந்திய முற்போக்கு முன்னணியின் தேசிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கலாசார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான ராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோர் சென்னை செல்லவுள்ளனர்.

சீனாவின் பீஜிங் நகரில் நடைபெறும் மாநாடு இடதுசாரிக் கட்சிகளின் கூட்டுடனேயே இடம் பெறுகிறது. இலங்கையிலிருந்து இது வரை காலமும் இம்மாநாட்டில் இலங்கை கம்யூனிஸ் கட்சியே கலந்துகொண்டு வந்தது. இம்



முறை ஜே.வி.பி.க்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பை ஆசிய அரசியல் கட்சிகளின் சம்மேளனம் விடுத்துள்ளது. கடந்த காலங்களில் இந்தியாவை கடுமையாக எதிர்த்து, கடும் வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டுவந்த ஜே.வி.பி. இந்தியாவிற்கு செல்லவுள்ளது குறிப்பிடத்தக்கது.

S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

CREDIT
S.A.NATHAN

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா?
B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

# உலக நாடுகளிடம் பெற்ற.....

(17ம் பக்கத் தொடர்ச்சி)

சிறீலங்காவிற்கு தம்மாலியன்ற உதவிகளைச் செய்ததோடு மாத்திரமல்லாமல் யுத்தக்களத்திற்கே நேரடியாகச் சென்று ஆலோசனை வழங்கின என்றும், அவற்றின் எதிர்பார்ப்பை மீறி எவ்வாறு அந்தக் களம் அவர்களிற்கெதிரானதாக மாற்றியமைக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் எனவும் தெரிவித்ததோடு, ஜெயசிக்குறு உலகத்தின் யுத்தம் என்பது வெகுவிரைவில் வெளிச்சத்திற்கு வரும் எனவும் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான உயிர்களை விலையாக எடுத்த இப்போராட்டத்தில் எந்த ஒரு தலையீடும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது எனத் தெரிவித்ததோடு, இந்தச் சமாதான காலத்தின் வெற்றியாக தமிழரின் விடுதலை சம்பந்தமாக ஒரு கோடு தெளிவாக வரையப்பட்டுவிட்டது. எனவே இந்தக் கோட்டின் ஒரு பக்கத்திற்குள் மக்கள் தங்களை அடையாளப்படுத்த வேண்டியகாலம் வந்துவிட்டது எனவும் பாலகுமார் தெரிவித்தார்.

இந்தச் சமாதான காலகட்டத்தில் சிறீலங்காவின் அரசியல், இராணுவப் போக்குகளை தாங்களாகவே அம்பலப்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டு சிறீலங்கா தேசம், மிகுந்த சிக்கலிற்குள் தவிக்கிறது என்றும் ஆனாலும் நாங்கள் முதிர்ச்சியின் வெளிப்பாடாக இவற்றை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் எனவும் ஆனால் சிறீலங்கா போரை ஆரம்பித்தால் அதனை மீளமுடியாத சிக்கலிற்குள் தள்ளுமளவிற்கு நாம் வளர்ச்சி கண்டுள்ளோம் எனவும் பாலகுமார் தெரிவித்தார்.

எந்தக் கணத்திலும் தமிழர்களிற்கு வெற்றி வரும் என்பதனையே இன்று சந்திரிகா, ஜே.வி.பி மற்றும் இதர கட்சிகளின் நிலைப்பாடுகள் எடுத்தியம்பி நிற்கின்றன என்றும் சர்வதேசத்தின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப எமக்கான அங்கீகாரத்தை பெறுவதற்கான முனைப்பில் வெற்றிகண்டு சர்வதேச உறவுகளின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தியுள்ளோம் எனவும் இலங்கைத் தீவின் இரு தரப்பிற்குமிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்தியிருக்கிறோம் என்றும் பாலகுமார் தெரிவித்தார்.

தமிழர்களின் உரிமைகளிற்கான கோரிக்கையானது 1920ல் அருணாச்சலத்தால் முன்னெடுக்கப்பட்டு 1975ம் ஆண்டு தந்தை செல்வாவால் இனி இதைவிட்டால் வேறுவழியில்லை என்று தமிழீழமே இறுதி முடிவு என அறிவிக்கப்பட்டதையே நாம் இப்போது வடிவத்தை மாற்றி முன்னெடுத்துச் செல்கிறோமே தவிர இந்தப் போராட்டம் நாம் ஆரம்பித்த ஒன்றல்ல என்றும் தெரிவித்ததோடு,

இன்றைய சமாதானக் காலத்திலும் எங்களை நோக்கி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. ஆனால் சமாதான முன்னெடுப்புகளினூடே பயணித்த எம்மிடையே கருணா என்ற ஒரு குழப்பக்காரனைக் கண்டுபிடித்து போரைத் திணித்தது, கொலைகளை ஆரம்பித்தது யார் என்பதை நோக்க வேண்டும் என்றும் நாம் போர் விரும்பிகளல்ல என்றும் வாழ்வதற்காக போராடுபவர்கள் என்றும் பாலகுமார் தெரிவித்தார். தமிழர்கள் மீதான நிழல் யுத்தத்தை சிறீலங்காவே இந்தச் சமாதான காலத்தில் வலிந்து திணித்து விட்டு எம்மைக் கொலையாளிகள் என்று குறிப்பிடுவது ஏற்கப்பட முடியாதது எனவும் தெரிவித்தார்.

இன்றைய தேதியில், தமிழர்கள் வெல்லப்படமுடியாத நிலையில் இருக்கிறோம். இழப்பில்லாமல் வெல்லமுடியுமா என்பதையே நாமும் இன்று எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்ததோடு, எதேச்சையாகச் சண்டை தொடங்கினால் கூட அந்தப் போரை வழிநடத்த நாங்கள் கடமைப்பட்டவர்களே என்றும் ஏனெனில் நாங்கள் போராடுவது எமது இழந்த வாழ்வை மீட்பதற்காகத் தான் எனவும் தெரிவித்துள்ளதோடு, தமிழர்களின் உரிமைப்போரானது களம் - புலம் என இரண்டு தளங்களிலிருந்து உறுதியுடன் வளர்ந்துள்ளது எனவும் தெரிவித்தார்.


## வீடு வாடகைக்கு

Métro (ligne 8) Créteil Préfecture மிக அருகில் F3 (74 m2) appartement (ஒரு Hall மற்றும் இருண்டு படுக்கை அறைகள்) உடனே வாடகைக்கு விடப்படும்.

அணுகவும்: மகலி 06 81 22 94 08


# நிமலராஜன் கொலையாளி நெப்போலியன் பிர்த்தானியாவில் ?

(30.08.04)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்று சந்தேகிக்கப்படும் ஈ.பி.டி.பி. குழுவைச் சேர்ந்த நெப்போலியன் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, என்.ரவிராஜ் ஆகியோரைத் தாக்கினார் என்ற குற்றஞ்சாட்டின் பேரில் இவர் மீது நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த 2001ம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரசாரத்தின்போது தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மீது ஊர்காவற்றுறை நாரந்தனையில் நடத்தப்பட்ட மோசமான தாக்குதல் சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரியாக இவர் இனங்காணப்பட்டிருந்தார். வேட்பாளர்கள் தாக்கப்பட்டமை மற்றும் ஆதரவாளர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையில் நெப்போலியன் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

நெப்போலியன் அல்லது பூபாலன்ராஜ் என்று அழைக்கப்படும் செபஸ்ரியான் ரமேக்ஷ் என்ற இவர், றோமன்குமார் பற்றிக் டி சில்வா என்பவருடைய கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கடந்த யூன் மாதம் 3ம் திகதி பிரித்தானியாவுக்குள் நுழைந்து அரசியல் தஞ்சம் கோரியிருப்பதாக அந்த நாட்டு உள்துறை அமைச்சிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அந்தியேட்டியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 1952



இறைவன் அடியில் 03.08.2004

### திரு. செல்லையா காத்தலிங்கம்

### (இல -19, பகுதி II விசுவமடு)

தாயகத்தில் சாவகச்சேரியில் கல்வயலைப் பிறப்பிடமாகவும், விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. செல்லையா காத்தலிங்கம் அவர்கள் கடந்த 03.08.2004 அன்று இறைவனடி எய்தினார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லையா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் தம்பதிகளின் மருமகனும், தயாபரன்(லண்டன்), தயாநிதி (காலஞ்சென்ற) யசோ (பொறியியலாளர் இறுதியாண்டு, கொழும்பு), நிர்மலன் (மருத்துவப் பிரிவு, முதலாம் ஆண்டு யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கணபதிப்பிள்ளை (இலங்கை), நாகம்மா (காலம்சென்றவர்), செல்லாச்சி (இலங்கை), பத்மநாதன்(காலம் சென்றவர்), சண்முகானந்தம் (இலங்கை), வாரித்தம்பி (இலங்கை), புஸ்பராணி (இலங்கை), அருளம்பலம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

வீட்டுக் கிருத்தியம் 31.08.04 செவ்வாய்க்கிழமையும், 02.09.04 அன்று அந்தியேட்டி நன்றி நவிலலும் விசுவமடுவில் இடம்பெறவுள்ளது.

உற்றார் உறவினர், நண்பர்கள் மற்றும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு வருகை தந்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியும், சகல உதவிகள் செய்தவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**பிரிவால் துயருறும்**
**குணசீலன் குடும்பத்தினர் (பிரான்ஸ்)**
**T.P -0164410323**
**0624264083**
**பரதராசா குடும்பத்தினர் (நெதர்லாந்து)**
**T.P- 0031181664809**


ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78
Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-poobalamad@free.fr

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்: அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368



**குறிப்பு:**

இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



## மோகன் ஜுவல்லர்ஸ் அன்ட் ரெக்ஸ்டைல்ஸ்



**Basel மாநகரில் ஓர் அலங்கார மாடம்**

சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்று தரமான தங்க நகை விற்பனையாளர்களாய் திகழும் பிரம்மாண்டமான நிறுவனம்...
22 கரட் தங்க நகைகள் உங்கள் விருப்புக்கேற்ற ஏராளமான தெரிவுகளில்
மற்றும் சுவிசில் கல்லு முத்து பதிப்பதற்கு கூலி எதுவும் அறவிடாத ஒரே ஒரு நிறுவனம்

**மோகன் ஜுவல்லர்ஸ்**

வண்ணப்புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள் ஆண்கள் சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தும் எம்மிடமே!
**புதிய பழைய திரைப்படப் பாடல்கள், படங்கள், நாடகங்கள், DVD, VCD, VIDIO Cassettes**
**என்பன விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்**
உலகின் அனைத்துப் பகுதிக்குமான பணமாற்றுச் சேவை உடனுக்குடன்

**MOHAN JEWELLERS & TEXTILES**
**Elisabethen anlage 25**
**4051 Basel**
**Tél - 061 271 41 09**
**Fax - 061 271 41 17**
**WWW.mohantextiles.com**

## பிரிந்து சென்று.....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

கிவிட்டது.

இந்தியாவின் சமஷ்டியை அடிப்படையாகக் கொண்டே 1987ம் ஆண்டு 13வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் மூலம் இலங்கையில் மாகாண சபை அமைப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு உள்ள அதிகாரம் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்குக் கிடையாது. இந்தியாவில் மத்திய அரசு மீது மாநில அரசுகள் அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும். ஆனால், இலங்கையில் அவ்வாறான நிலைமையில்லை.

இலங்கையில் வலுவான அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறை காணப்படுகின்றது. அங்கு அவ்வாறு இல்லை. அங்கு ஒரு ராஜ்ய சபை காணப்படுகின்றது. ஆனால், இங்கு அவ்வாறில்லை. அங்கு சுதந்திரமான நிர்வாக சேவை காணப்படுகின்றது. நீதித்துறையும் அவ்வாறே.

2002ம் ஆண்டு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணங்கிக் கொண்டு வெளியிட்ட ஒஸ்லோ பிரகடனப்படி இரு தரப்பும் சமஷ்டி முறைக்கு இணங்கியுள்ளன. முன்னர் இலங்கை அரசு ஒற்றையாட்சி முறை என்ற கோட்பாட்டை வலியுறுத்தி வந்தது. தமிழ் மக்கள் திம்புக் கோட்பாட்டின் படி மூன்று முக்கிய விடயங்களை வலியுறுத்தினர். தமிழர்கள் ஒரு தேசிய இனமாக கருதப்பட வேண்டும். தமிழர்களது பாரம்பரிய பிரதேசங்களாக வடக்கு, கிழக்குப் பகுதி கருதப்பட வேண்டும். தமிழர்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பவையே அவை.

எனவே, இப்போது இருதரப்பும் தமது நிலையை விட்டுக் கொடுத்து இப்போது சமஷ்டி ஆட்சி முறைக்கு இணங்கியுள்ளன. எனவே, இவ்வாறு தீர்வு எட்டப்படும் போது வடக்கு, கிழக்கிலுள்ள சிங்கள முஸ்லிம் மக்களது நலன்களும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தைப் பொறுத்தவரை அது சுயாட்சியை வலியுறுத்துகிறதே தவிர, மத்திய அரசின் அதிகாரங்கள் எவ்வாறு பகிரப்பட வேண்டும் என்பது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. குறிப்பாக, சமஷ்டியில் இருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் இந்த இடைக்கால நிர்வாக யோசனையில் இல்லை.

இதற்காக நான் ஜே.வி.பி.யை போல இந்த யோசனையை முற்றாக எதிர்க்கவில்லை. இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு நாம் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். இலங்கை இனப்பிரச்சினை இப்போது சிறுபான்மையினரின் பிரச்சினை என்ற நிலையைத் தாண்டி விட்டது. பனிப் பாறையானது மலையில் இருந்து உருண்டு வரும் போது, எப்படி பெரிதாகிக் கொண்டு வருமோ, அதேபோலவே இப்பிரச்சினையும் இப்போது பெரிதாகி விட்டது. எனவே, தமிழர்களது பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று வழங்கப்படாவிட்டால் சர்வதேச சட்டங்களின்படி அவர்களுக்கு பிரிந்து சென்று தனிநாடொன்றை உருவாக்கும் அதிகாரமுள்ளது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# அபு கரையப் சிறைக் கொடுமை இராணுவ அறிக்கை

(30.08.04)

ஈராக் நாட்டில் அபு கரையப் சிறையில் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட சித்ரவதை பற்றி இராணுவம் நடத்திய விசாரணை முடிந்து விட்டது. அதன் அறிக்கை கடந்த 26ம் திகதி அமெரிக்காவில் வெளியிடப்பட்டது. அதில், சிறைக்கைதிகளிடம் அத்துமீறி நடந்து கொள்ளும்படி இராணுவத்தினரை தூண்டியதாக 27 இராணுவ உளவுத்துறை அதிகாரிகள் மீது புகார் கூறப்பட்டுள்ளது.





4 சிவில் தொழில் முகவர்களும் கைதிகளிடம் அத்துமீறி நடந்து கொண்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஜெனரல் ஜார்ஜ் பே தலைமையிலான குழு இந்த விசாரணையை நடத்தி அறிக்கை தாக்கல் செய்துள்ளது. கடந்த ஆண்டு ஜூலை மாதம் 25ம் திகதி முதல் கடந்த பிப்ரவரி 27ம் திகதி வரை சித்ரவதைகள் நடந்துள்ளன என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கருணா குழுவைச்........

(32ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வரப்பட்டு இவர் மீதான விசாரணை நடைபெற்றது. காலை 10.40 மணியளவில், இவரை அடுத்த 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டதையடுத்து, நீதிமன்ற கூண்டுக்குள்ளிருந்து இவர் இறக்கப்பட்டார்.

அவ்வேளையில், நீதிமன்றில் பார்வையாளர்கள் முன்வரிசையிலிருந்து திடீரென எழுந்த இரு இளைஞர்கள் தங்கள் வசமிருந்த 9 மில்லிமீற்றர் ரகத் துப்பாக்கிகள் மூலம் ஜெயக்குமார் மீது சரமாரியாகச் சுட்டுள்ளனர்.

தலை, மார்பு, வயிற்றுப்பகுதி யென உடலின் பல்வேறு பகுதிகளிலும் குண்டு துளைக்க அவர் அந்த இடத்திலேயே வீழ்ந்து இறந்தார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில், இவருடன் வந்த மட்டக்களப்பு சிறைச்சாலை சிறைக்காவலர் கே.சிவகுமார், நீதிமன்ற கட்டளை சேவகர் கே.பளீல் ஆகியோர் வயிற்றுப் பகுதியிலும் காலிலும் படுகாயமடைந்தனர். இதேநேரம், துப்பாக்கிச் சூட்டை நடத்திய இருவரும் தப்பிச்சென்று விட்டனர்.

இதேநேரம், நீதிமன்றத்தை உடனடியாக சுற்றி வளைத்த பொலிசாரும் விசேட அதிரடிப் படையினரும் நீதிபதியை பாதுகாப்பாக வெளியேற்றியதுடன் அப்பகுதியின் பாதுகாப்பையும் தீவிரப்படுத்தினர். சம்பவம் நடைபெற்ற பகுதியில், இறந்தவர் இரத்த வெள்ளத்தில் கிடக்க அப்பகுதியில் 16 வெற்று ரவைகளும் கிடந்துள்ளன.

# விடுதலைப் போராட்டத்தில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியவர் கேணல் ராயூ

### - கடற்புலிகளின் சிறப்புத் தளபதி -

(30.08.04)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான அடிநாதமாக விளங்கியவர் கேணல் ராயூ என்று கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

கேணல் ராயூ அல்லது குயிலன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே சிறீலங்காப் படையினர் தென்னாபிரிக்காவிலிருந்து பெற்ற பவள் கவச வாகனத்தை தொலை இயக்கி மூலம் தகர்த்த பெருமை இம் மாவீரரையே சாரும் என்று தெரிவித்த அவர்,

நிலக்கண்ணிகளை மீட்கும் போது அது வெடிக்கின்ற தொழில்நுட்பத்தையும் மன்னாரில் மேற்கொண்டவர் கேணல் ராயூ என்றும் தெரிவித்த கேணல் சூசை, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கேணல் ராயூ அவர்களின் ஆரம்பம் முதலான இறுதி வரையான செயற்பாடுகளையும் அதனூடான சாதனைகளையும் நினைவு கூர்ந்தார். கடந்த போர் நிறுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை எந்த அளவிற்கு பலவீனப்படுத்த முடியுமோ அந்த நடவடிக்கையினைத்தான் அனைவரும் மேற்கொண்டனர் என்றும், சமாதான காலத்தில் நிழல் யுத்தம் ஒன்றை மேற்கொண்டு அதன் ஊடாக எதனை அடைய முடியுமோ அதனை இலக்கு வைத்தே சிறீலங்காவின் நகர்வு உள்ளது என்றும் தெரிவித்தார்.

பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை குட்டிசிறி மோட்டார் படையணியின் சிறப்புத்தளபதி கேணல் பானு ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை கணினிப் பிரிவின் சிறப்புப் பொறுப்பாளர் தீபன் ஏற்றி வைக்க, கணினிப் பிரிவின் கொடியினை அப்பிரிவின் மகளிர் பொறுப்பாளர் திருமதி றேனா ஏற்றி வைத்தார். கேணல் ராயூவின் திருவுருவப்படத்திற்கு அவரது துணைவியார் கங்கா ஈகச்சுடர் ஏற்றி வைக்க, திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை கேணல் ராயூவின் சகோதரன் பத்மநாதன் அணிவித்தார்.

கணினிப் பிரிவுப் பொறுப்பாளர் எழில் வண்ணன் தலைமையில் அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் வணக்க நடனம், கேணல் ராயூ அவர்களின் வரலாற்றைச் சித்தரிக்கும் சிந்து நடைக் கூத்து, தாளலயம், நடனங்கள், என்பனவற்றுடன், லெப். கேணல் நவம் அறிவுக்கூடப் போராளிகளின் ராக வேங்கைகள் இசைச் சங்கமமும் நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறப்புத்தளபதிகள், தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## புலிகளின் யோசனையை....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு வந்த நிவாரணங்கள், வரிச் சலுகைகள், மானியங்கள் அனைத்தையும் இரத்துச் செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நிலை தொடருமானால், மக்கள் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடும் நிலை வெகு தொலைவில் இல்லை.

### பேசாலையில் எலும்புக்கூடு கரையொதுங்கியது

பேசாலை ஓலைத்தொடுவாய் கடற்கரையில் கடந்த வியாழக்கிழமை காலை ஆணொருவரின் எலும்புக்கூடொன்று கரையொதுங்கியுள்ளது. முழுமையாக இருந்த இந்த எலும்புக் கூட்டைக் கைப்பற்றிய சிறீலங்காப் பொலிசார், அதனை மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

எலும்புக் கூட்டை நேரில் பார்வையிட்ட மன்னார் மாவட்ட நீதிபதி, அதனை பேராதனைப் பல்கலைக்கழக சட்டமருத்துவ பிரிவுக்கு அனுப்பிப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார். இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய போது கடலில் உயிரிழந்த அகதியொருவரின் எலும்புக்கூடாக இது இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

Restaurant Tharsana's
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

தர்ஷனா & பிரஷா உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஓடர்க்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

Restaurant Prassah
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

அசைவத்திற்கோ பல... சைவத்திற்கோ ஒன்று தான்!
பிரான்சில், ஈழத்தமிழர்களின் முதலாவது முழுமையான சைவ உணவகம்
கிருஸ்ண பவன்
விதம் விதமான தோசை, இட்லி, சப்பாத்தி, பூரி, இடியப்பம், பிட்டு, சைவ பலகாரங்கள், இனிப்புப் பண்டங்கள், சைவச் சாப்பாடுகள் இன்னும் பல....
கைதேர்ந்த சமையற்கலை வல்லுநர்களின் தயாரிப்பில் தாயக தென்னிந்திய உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திட 'கிருஸ்ண பவன்'
கிருஸ்ண பவன்
24, Rue Cail
75010 Paris
Tél : 01 42 05 78 43
M° : La Chapelle / Gare du Nord
- ரம்மியமான சூழலில் இரசித்து சுவைக்க ஒரு சைவ உணவகம் -

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-Poobalam@free.fr
www.poobalam.com

வீடு வாங்குதல்—விற்றல்—முதலீடு செய்தல்
- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய — பழைய வீடுகள் வாங்குதல்
- நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்
முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# பிரிந்து சென்று தனியாட்சி அமைக்கும் உரிமை தமிழ் மக்களுக்கு உள்ளது

## — சிங்களக் கல்விமான் கூறுகிறார் —

(29.08.04)

இந்தியாவில் நடைமுறையிலுள்ளது போன்ற சமஷ்டி ஆட்சிமுறை இலங்கைக்கு காலங்கடந்ததொன்றாகி விட்டது என்பதை சுட்டிக்காட்டியுள்ள கலாநிதி றொகான் எதிரிசிங்க, இலங்கையில் தமிழர்களுக்கான உரிமைகள் வழங்கப்படாது தொடர்ந்தும் அவர்கள் அடக்கு முறைக்கு உட்படுத்தப்படுவார்களேயானால், சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப பிரிந்து சென்று தனியான ஆட்சியொன்றை அமைப்பதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது எனவும் தெளிவுபடுத்தியுள்ளார்.

`சமஷ்டி என்னும் எண்ணக்கரு' என்னும் தலைப்பில் 'மாற்றுக் கொள்கைக்கான நிலையம் மற்றும் `சமஷ்டிக்கான பொது அரங்கு' ஆகிய அமைப்புகள் ஒழுங்கு செய்திருந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் உள்ளதைப் போன்ற சமஷ்டி அமைப்பு முறையைப் பயன்படுத்தி இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றி இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், உண்மையில், அந்த முறை இன்று இலங்கைக்குக் காலம் கடந்ததொன்றா

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# புலிகளின் யோசனையை ஏற்றிருந்தால் இன்றைய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்காது

## ஐ.தே.க. முன்னாள் அமைச்சர்

(29.08.04)

சமாதானப் பேச்சுகள் தாமதமடைவதற்கு அரசாங்கத்தைக் குறை கூறும் ஐக்கிய தேசியக் கட்சி, புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை அடிப்படையில் பேச்சை ஆரம்பித்திருந்தால் தற்போதைய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருக்க முடியாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த அரசு முன்வைத்த யோசனைக்கு மாற்று யோசனையாகவே விடுதலைப் புலிகள் தமது யோசனையை முன்வைத்திருக்கும் நிலையில், அரசு பிறிதொரு மாற்று யோசனை முன்வைக்கப்போவது அர்த்தமற்றதெனவும் ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே முன்னாள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன மேற்படி கருத்தை வெளியிட்டார்.

தற்போது உருவாகியுள்ள நிலைமைகள் தொடர்பாக மேலும் விளக்கமளித்த ராஜித சேனாரத்ன கூறியதாவது: அரசாங்கத்துக்குள் ஒற்றுமை காணப்படவில்லை. ஆளுக்கொருபக்கம் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி எடுக்கும் முடிவுகளைக் கூட செயற்படுத்த முடியாத அவலம் அரசில் காணப்படுகின்றது.

### ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவதற்கு ஆயத்தம்

சமாதானப் பேச்சுகளை முன்னெடுப்பதில் உறுதியான நிலைப்பாட்டை கையாள முடியாத அரசு சர்வதேச உதவிகளைப் பெறுவதில் மட்டும் ஆர்வம் காட்டி வருகின்றது. ஆனால், உதவி வழங்கும் சர்வதேச அமைப்புகளும், நாடுகளும் உறுதியான சமாதான முயற்சிகளை முன்னெடுத்தால் மட்டுமே உதவி வழங்க முடியுமெனக் கூறி கையை விரித்துள்ளன.

சமாதானப் பேச்சுகளை ஜனாதிபதி உறுதியுடன் முன்னெடுக்க முன்வருவாரானால், ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கத் தயாராக இருக்கின்றது. அரசிடம் ஒழுங்கான திட்டமோ, கொள்கையோ காணப்படவில்லை. இதனால் ஐ.தே.க. திட்டமிட்டு வளர்த்தெடுத்த பொருளாதாரம் மீண்டும் சீர்குலைந்து நாடு அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. நாடு இன்று பாரிய நிதிநெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. மக்களுக்கு வழங்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# கருணா குழுவைச் சேர்ந்தவர் நீதிமன்றத்தில் சுட்டுக்கொலை

(30.08.04)

அக்கரைப்பற்று நீதிமன்றினுள் கடந்த செவ்வாய்க்கிழமை காலை, வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் சிறைக்காவலரொருவரும் உயிரிழந்ததுடன், நீதிமன்ற ஊழியரொருவர் படுகாயமடைந்துள்ளார்.



இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த மே மாதம் 19ம் திகதி ஆயுதங்களுடன் அக்கரைப்பற்று சிறீலங்கா விசேட அதிரடிப் படையினரின் சோதனை நிலையத்தை கடக்க முயன்ற போது, வந்தாறுமூலையைச் சேர்ந்த பேரின்பராஜா ஜெயக்குமார் (28) என்பவரும் தாண்டியடியைச் சேர்ந்த சரவணமுத்து சாந்தகுமார் (27) என்பவரும் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் சாந்தகுமார் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சச்சி மாஸ்டருடன் சுட்டுக் கொல்லப்பட, ஜெயக்குமார் மீண்டும் கடந்த வாரம் அக்கரைப்பற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். பலத்த பாதுகாப்புடன் இவர் நீதிமன்றுக்கு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

PHONE 2000
Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.
LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE
SFR

| | | | | | |
|---|---|---|---|---|---|
| PHONE 2000<br>2, Rue Perdonnet,<br>75018 Paris.<br>☎: 01 40 05 03 43<br>Fax: 01 40 05 03 53<br>M°: La Chapelle | PHONE 2000<br>85, Rue des Pyrénées,<br>75020 Paris.<br>☎: 01 40 09 13 15<br>Fax: 01 40 09 01 31<br>M°: Maraîchers | PHONE 2000<br>19, Rue du Labat,<br>75018 Paris.<br>☎: 01 42 58 55 40<br>Fax: 01 42 58 55 46<br>M°: Marcadet Poissonniers | PHONE 2000<br>Informatique<br>87, Rue des Pyrénées,<br>75020 Paris.<br>M°: Maraîchers<br>Tél: 06 20 21 11 11 | PHONE 2000<br>4, Rue de Cail,<br>75010 Paris.<br>☎: 01 40 05 93 28<br>Fax: 01 40 05 97 03<br>M°: La Chapelle ou Gare du Nord | PHONE 2000<br>5, Bld. davout,<br>75020 Paris.<br>☎: 01 43 71 40 30<br>Fax: 01 40 09 01 31<br>Mobile: 06 17 17 28 17<br>M°: Porte de Vincennes |

Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11